கவிஞன் குரல்

நாமக்கல் இராமலிங்கம் பிள்ளை

கவிஞன் குரல்

நாமக்கல் வெ. ராமலிங்கம் பிள்ளை

இச்சைபோல் இருந்துவாழ
ஈப்புழு எறும்பும்கூடும்
உச்சமாம் மனிதஜென்மம்
சுதந்தர உணர்ச்சியின்றி
நச்செனும் அடிமைவாழ்வை
நயந்திட ஞாயமுண்டோ?
நிச்சய சபதம்பூண்டு
சுதந்தரம் நிலைக்கச்செய்வோம்.

நாமக்கல் கவிஞர்

தமிழ்ப் பண்ணை

பதிப்பாசிரியர்கள் :
நா. அண்ணாமலை
எஸ். ஏ. ரஹீம்

PREMIER

தியாகராயநகர் - சென்னை

முதற் பதிப்பு : 1944 மார்ச்சு

கமர்ஷியல் பிரிண்டிங் அன்
பப்ளிஷிங் ஹவுஸ், ஜி. டி. சென்னை

தமிழ்ப் பண்ணை மலர் 11

விலை ரூபாய் மூன்று

நாமக்கல் கவிஞர் பல இடங்களில் தலைமை வகித்துப் பேசியிருக்கிறார்கள். அந்தப் பிரசங்கங்கள் தமிழ் நாட்டிற்கு மிகவும் பிரயோசனமாக இருக்குமென்று எண்ணினோம்.

அந்த எண்ணத்தின் விளைவே இப்புத்தகம். இதில் சேர்க்கப் பட்டிருக்கும் கவிதைகள் சமீபத்தில் வெளிவர இருக்கும் 'அவளும் அவனும்' என்ற கவிஞரின் காவியத்திலிருந்து எடுக்கப்பட்டவை. கவிஞரவர்களின் எண்ணங்களைப் பரப்பும் எங்களுடன் தமிழ்நாடும் கை கோர்த்துக்கொண்டு களிப் படைவதைக் காண, கவிஞருடைய குரல் இன்னும் உற்சாகம் அடைந்து உரக்கப் பாடுமென்று எதிர் பார்ப்போமாக.

தமிழ்ப் பண்ணையார்

கவிஞர் எழுதிய புத்தகங்கள்

தமிழன் இதயம்

மலைக் கள்ளன்

பிரார்த்தனை

இசைத் தமிழ்

கவிஞன் குரல்

அவளும் அவனும்

என் கதை

சங்கொலி

ஆனந்தி

அரசியல்



" அரசியல் நீதிகள் அனைவரும் அறிந்து
வாழ்க்கையின் நித்திய வழக்க ஒழுக்குடன்
கலந்து நடந்த காவலன் ஆணையால்
'அரசியல்' எனத்தகும் அதற்கொரு பெயருடன்
தனியே நூல்களைத் தமிழிற் காணோம்
வாதுகள் வளர்க்கும் வார்த்தைகள் சேர்ந்து
ஓயா வழக்குகள் உண்டாகு மென்றோ
ஏட்டுச் சட்டமும் எழுதிலர் போலும்
இருந்தன அழிந்ததோ என்பது அறியோம்
அரசரும் குடிகளும் அன்புடன் கலந்து
பசியும் பிணியும் பகைமையும் அரிதாய்
வாழ்ந்தனர் என்பதை வையகம் அறியும்.

....

'தனித் தனி மனிதன் தன்னறம் காத்து
வீட்டுக்கு வீடு கடமையை விரும்பி

ஒவ்வொரு குடும்பமும் ஒழுக்கமே ஓம்பி
ஊருக்கு ஊராய் உரிமைகள் தந்து
நாட்டுக்கு நாடு நடுநிலை நாடி
அரசுக்கு அரசு அன்புடன் நடந்து
அவரவர் கடமையை அவரவர் செய்தால்
சமுதாய வாழ்வு சரிவர நடந்து
பொதுநலம் என்பது தானே புலப்படும்'
என்பதே தமிழன் எண்ணிய வாழ்க்கை.
'மன்னவ ராயினும் மற்றவ ராயினும்
சொந்த வாழ்க்கையில் சுத்தமாய் நடந்தால்
அரசியல் ஒழுங்கும் தானே அமையும்'
என்பதே தமிழன் எண்ணிய அரசியல்.
'தன்னுயிர் போல மன்னுயிர் காத்தல்'
என்னும் சொற்றொடர் தமிழன் இலட்சியம்
தனக்கொருநீதி பிறர்க்கொரு தன்மை
என்பதைத் தமிழன் இலக்கியம் வெறுக்கும்
தன்னுடை ஒழுக்கம் தவறிய மன்னவன்
தமிழர் பரம்பரை தன்னிலே இல்லை
என்பதைத் தமிழ்நூல் எல்லாம் காட்டும்.
பகைவர் வந்தால் படையெடுத் தெதிர்த்து
ஆயுதந் தாங்கி அழிவுகள் செய்து
மானங் காக்கவும் மக்களைக் காக்கவும்
மடிவதும் தமிழன் மரபே என்னினும்
அன்னிய நாட்டை அடிமைப் படுத்தி
அடக்கி ஆளும் ஆசைக்காக
சண்டை தொடுத்தவன் தமிழன் அல்ல.
அரசியல் தந்திரம் அனைத்தும் அறிவான்
ஆயினும் அறம்கெட அரசை விரும்பான்.

அரசை இழப்பினும் அறங்களை விட்டிடான்
நாட்டையே இழந்து நலிவுற்ற நாளிலும்
நாகரீகத்தையே தமிழன் நாடினான்.
'ஒன்றாக நல்லது கொல்லாமை மற்றதன்
பின்சார நன்று பொய்யாமை' என்னும்
பொய்யா முதுமொழி எதனைப் புகட்டுமோ
அதனையே தொடரும் தமிழன் அரசியல்
தமிழ் நாட்டு மன்னர்கள் சரித்திரம் சாட்சி.

....

புதுமையே போல நம்மிடைப் புகுந்த
அன்னிய அரசியல் அறிவுகள் அனைத்தும்
சூதும் வாதும் சூழ்ச்சியும் மிகுந்து
தன்னலம் ஒன்றே தலைவிரித்தாட
பிறநலம் சிறிதும் பேணாத்தன்மையால்
பொதுநலம் என்பதைப் புதைத்து விட்டன;
தன்னுடை வாழ்க்கைத் தன்னலமாகப்
பொதுநலம் பேசும் பொய்மை மிகுந்தது;
அன்னிய மக்களை ஆளும் ஆசையால்
வெல்வதை விரும்பிக் கொல்வதே வேலையாய்
'தன்னுயிர் போல மன்னுயிர்' என்றநம்
பொன்மொழி தன்னையும் பொசுக்கிவிட்டது.
சண்டை செய்வதும் சாவதும் கொல்வதும்
பண்டைத் தமிழன் பார்த்துச் சலித்தது
புதுமை மிகுந்தன போலவே தோன்றும்
ஐரோப்பியரின் அதிசயம் மிகுந்த
விஞ்ஞான மெல்லாம் வாண வேடிக்கை.
விஞ்ஞானங்களை விருத்தி செய்துள்ள
நாட்டவர் கண்ட நன்மைகள் என்ன?

நீரில்லாமல் நிலம் பயிராச்சா
பசுவில்லாமல் பால் கறந்தாரா
உழவில்லாமல் உணவு தந்தாரா
மந்திரம் செய்து மாங்கனி வந்ததா
பசியில்லாமல் பண்ணி விட்டாரா
பிணியில்லாமை பெற்று விட்டாரா
மூப்பில்லாமல் முடித்து விட்டாரா
மரணம் என்பதை மாற்றி விட்டாரா
இறந்தவர் தம்மை எழுப்பி விட்டாரா ?

....

'எப்படி மனிதரை எளிதிற் கொல்லலாம்
எவருடன் சண்டை எப்படி செய்யலாம் ?'
என்பதைத் தவிர என்ன சாதித்தார் ?
பொய்யெனத் தள்ளிய புராண நூல்களில்,
'அரக்கன் என்பவன் தவங்களை ஆற்றி
சக்திகள் பற்பல சம்பாதித்து
தோள் தினவெடுத்துச் சண்டை தொடுக்க
சிவனையும், திருமால், திசைமுகன், இந்திரன்
அவனையும் இவனையும் போருக் கழைத்தான்
இடையே சிக்கிய மக்களை யெல்லாம்
கொன்ருன் வென்ருன் கொடுமைகள் செய்தான்'
என்றுநாம் முன்னே இகழ்ந்து பேசிய
கதைகளை இன்றுநாம் கண்ணுற் காண்கிறோம்.
இதற்கும் அதற்கும் என்ன வித்தியாசம் ?
மெஞ்ஞான மென்பது மெய்யோ பொய்யோ
விஞ்ஞானத்தின் தீமைகள் வெளிப்படை
ஆயிரம் பற்பல ஆண்டுகள் முன்ஞல்
இந்திய நாட்டில் இருந்தநம் முன்னேர்

படித்துத் தேறிய ஆரம்பப் பாடமே
இன்று மேல்நாட்டவர் இருக்கிற நிலைமை.
அவர்களைத் தொடர ஆசை கொள்வது
படிப்பில் உயர்ந்து பட்டம் பெற்றபின்
அரிவரி வகுப்பில் ஆசை கொள்வதே.
அதிசயப்பட்டு அனைவரும் வியக்க
திறமை மிகுந்த எந்திரம் செய்து
அதனைக் கொண்டு மக்களை அழிப்பதை
நம்மினும் சிறந்த நாகரீகம் போல்
அவைகளைக் கண்டு நாம் ஆசைகொள்வது
விளக்கில் விழுகிற விட்டிலைப் போன்றதே.
மாறுதல் கோருதல் மக்களின் இயல்பே
புதுப்புது வழிகளை புகுத்தலே அறிவு
நித்தியமான சத்தியம் நிறைந்து
நீக்க முடியா நியாயம் சேர்ந்த
ஒழுக்க வழக்கம் உண்டென் றாலும்
'வழக்கம் வழக்கம் வழக்கம்' என்று
இழுக்கம் மிகுந்த எதையும் செய்து
சமுதாயத்தை சாக்கடை யாக்கி
சேற்றில் புரளச் செய்து விடுவதை
மாற்றுதல் அறிவுடை மக்களின் கடமை.
அழுகிப் போனதை அப்புறப் படுத்தி
ஊசிப் போனதை உதறித் தள்ளி
இறந்து போனதை எரித்து விட்டு
புதுப்புது வாழ்வைப் புகுத்தவே வேண்டும்.
மற்றும்,
புதியன புகுதலும் பழையன போதலும்
ஒதுக்க முடியா உண்மையே எனினும்

மாருத அறங்களை மதித்தல் வேண்டும்.
உண்ணும் பொருளின் உருவம் மாறலாம்
அணியும் துணியும் அடிக்கடி மாறலாம்
மாடமாளிகை கூடமும் மாறலாம்
வழக்க ஒழுக்க வகைகள் மாறலாம்
வரவும் போகவும் வாகனம் மாறலாம்
ஆயுத விதங்கள் அனைத்தும் மாறலாம்
யுத்த முறைகளும் யூகமும் மாறலாம்
ஆனல்
பஞ்ச பூதங்களின் சேர்க்கை படைத்த
உடலின் இயற்கையும் உயிரின் இயல்பும்
மாறினதில்லை மாநிலம் சாட்சி
உடலை வளர்ப்பதும் உயிரைக் காப்பதும்
எட்டியமட்டும் இன்பம் தேடலும்
ஆசையும் பாசமும் அவற்றில் தொடர்ச்சியும்
பசியும் பிணிகளும் படுத்தும் பாடும்
நட்பால் நன்மையும் பகையால் நஷ்டமும்
அன்பு செய்வதால் இன்பம் ஆவதும்
வம்பு செய்வதால் துன்பம் வருவதும்
என்பன வற்றுள் புதியன ஏது?
மாரு இவற்றை மனதில் வைத்தே
நம்முடை முன்னேர் அறங்கள் நாட்டினர்
தன்னுயிர் போல மன்னுயிர் என்ற
ஒன்றில் அடக்கினர் உண்மைகளெல்லாம்
ஆகையினலே அறங்களைத் தாங்கி
தனித்தனி மனிதன் தன்கடன் செய்தால்
அரசியல் நலங்கள் தாமே அமையும்.

இளைஞர்களுக்கு



அன்பர்களே ! வருங்காலம் வாலிபர்களுடையது. எதிர்காலத்தின் இன்பம் முழுவதும் இளைஞர்கள் பொறுப்பில்தான் இருக்கின்றது. புதிதாகப் பூத்த தாமரை போன்ற உங்கள் ஒவ்வொரு முகத்தையும் பார்க்க என் மனம் பூரிக்கின்றது. நான் இப்போது உங்களைப் போன்ற ஓர் இளைஞனாக இல்லையே என்ற பொறாமை கூடப் பொங்குகின்றது. உலக வாழ்க்கையில், சூதுவாதுகளிற் சுழன்று மாசு படியாத மனமுள்ள காலம் இளமைப்பருவம். கோடி கோடியாகக் கொட்டிக் கொடுத்தாலும் வாலிபப் பருவம் நினைத்தபோது வரக்கூடியதல்ல. இன்பம் நிறைந்த இளமைப் பருவத்தின் சிறப்பை என்னென்று சொல்ல முடியும்? வித்தையின் வித்துகள் வேரூன்றும் பருவம். வாழ்க்கையின் லட்சியம் வளர்கின்ற பருவம். அறிவின் மொட்டுகள் அரும்பும் காலம்.

மனம் என்.னும் புஷ்பம் மலர்கின்ற தருணம். அன்பும் ஆர்வமும் அலைபுரளும் சமயம். புதுப் புது துடிப்புகள் போராடும் நேரம். தாராள எண்ணங்கள் தலைதூக்கும் தருணம். கஞ்சத் தனங்கள் கலக்காத காலம். ஒவ்வொரு குணமும் உருக்கொள்ளும் பருவம். கள்ளமற்ற பேச்சும் கலகலத்த சிரிப்பும் துள்ளி விளை யாடும் சுறுசுறுப்பும் நிறைந்தது இளமைப் பருவம். அப்படிப்பட்ட இளம்பிராயமுள்ள உங்களுடன் சல்லாபித்து உங்களுக்கு உதவக் கூடிய எந்தவித சேவை செய்வதும் எனக்கு மிகவும் இன்பமான காரியம். உங்களோடு உறவாடுகின்ற இந்தச் சிறிது நேரத்துக் கேனும் உங்களுடைய பார்வைகளிலிருந்து என்மீது பாய்கின்ற ஒரு சக்தியினுல் நானும் ஓர் இளைஞன் போலவே இன்புறுவேன். ஆகையினுல் மனிதனுடைய எல்லா நல்லெண் ணங்களும் வடிவுகொள்ளும் வசந்த காலமாகிய வாலிபப் பருவம் வாழ்க!

இளைஞர்களே! இன்று நான் உங்களுக்கு ஒரு கதை சொல்லப் போகிறேன். ஆம், ஒரு கதைதான் சொல்லப் போகிறேன். கதை கேட்பதென்ருல் உங்களுக்கு வெகு தித்திப் பான விஷயமல்லவா? ஆனுல் நான் சொல்லப் போகிற கதை உங்களிற் பலபேர் எதிர்பார்க் கிற மாதிரி ஒரு நவீனக் கதையல்ல. ஐரோப் பாவிலிருந்தோ அமெரிக்காவிலிருந்தோ புதுசு புதுசாய் வருகிற கதையாக, அல்லது அவற்

றைத் தழுவியோ வழுவியோ எழுதப்பட்ட கதையாக இருக்காது, நான் சொல்லப் போகிற கதை. நான் சொல்லப்போகிறது ஒரு பழைய கதைதான். அந்தக் கதையை அநேகமாக நீங்கள் எல்லாருமே ஏற்கனவே கேட்டிருப்பீர்கள். உங்களிற் பலபேர் அதைப் பாடமாகவும் படித்திருப்பீர்கள். சில பேர் பரீட்சைக்காக அந்தக் கதையின் பல பாகங் களை மனப்பாடம்கூட செய்திருப்பீர்கள். ஆம், நான் சொல்லப்போகிற கதை நீங்கள் பல முறைகேட்டுப் புளித்துப்போன கதையென்று கூடச் சொல்லலாம். 'அடடா! அப்படிக் கேட் டுக் கேட்டுப் புளித்துப்போன கதையையே திரும்பவும் கேட்கவா இந்த அழகான மாலைப் பொழுதில்,—கால் பந்து, கைப் பந்து, துணிப் பந்து, தோல் பந்து, பட்டுப் பந்து, பஞ்சுப் பந்து, கட்டைப் பந்து, கம்பளப் பந்து முத லான எத்தனையோ பந்தாட்டங்களையும் இன்னும் இளைஞர்களுக்குள்ள வேடிக்கை, விநோதம், விளையாட்டுகளை யெல்லாம் விட்டு விட்டு இங்கே வந்து கூடினோம்!'—என்று உங்களுக்குக் கொஞ்சம் ஏமாற்றம்கூட ஏற் படலாம். பயப்பட வேண்டாம். அப்படி நீங்கள் ஏமாற்றம் அடையும்படிச் செய்யமாட் டேன். நான் சொல்லப் போவது ஒரு பழைய கதைதான். நீங்கள் பல முறை கேட்டதுதான். பாடமாகவும் படித்தது தான். இருந்தாலும் நான் இன்றைக்கு உங்க

ளுக்குச் சொல்லப்போகிற ஒரு குறிப்பான விஷயத்தை—இந்தக் கதையை—உங்களுக்கு இது வரையிலும் சொன்னவர்களும் சொல்லியிருக்க மாட்டார்கள். நீங்களாகப் படித்த போதும் அதைக் கவனித்திருக்க மாட்டீர்கள். இந்தக் கதையில் உங்களைப் போன்ற இளம் பிராயமுள்ள இரண்டு பேர்—ஒரு வாலிபனும் ஓர் இளம் பெண்ணும்—எவ்வளவு உயர்ந்த உணர்ச்சியோடு சிற்சில வார்த்தைகளைப் பேசி உருகுகின்றார்கள் என்பதை நீங்கள் பாருங்கள்.

இந்தக் கதை, நடந்த கதையா நடக்காத கதையா; வடநாட்டுக் கதையா தென்னாட்டுக் கதையா, ஆரியக் கதையா திராவிடக் கதையா என்ற ஆராய்ச்சிகளையெல்லாம் விட்டுவிட்டு, இக் கதையில் அடங்கியுள்ள உண்மைகளையும் அவற்றின் உபயோகங்களையும் மட்டும் நீங்கள் கவனிக்கவேண்டும். நடந்த கதையோ நடக்காத கதையோ, இந்தக் கதையை நம்முடைய தாய் மொழியாகிய தமிழ் மொழியில் சிறந்த புலவர்களில் ஒருவர் வெகு அழகான பாட்டுகளாகச் செய்து வைத்துப் போயிருக்கிறார். அந்தப் பாட்டுகளில் சில பாட்டுகளை மட்டும் கதை சொல்லுவதற்காக இடையிடையே உங்களுக்குச் சொல்லப் போகிறேன். ஆனால் நான் குறிப்பாக உங்களுக்குச் சொல்ல விரும்புவது ஒரே ஒரு பாட்டுதான். அந்த ஒரே ஒரு பாட்டின் ஒரே ஒரு வரியில் ஒரே ஒரு பதம்தான் வெகு முக்கியம். கதை பழைய

கதைதான். பாட்டும் பழைய காலத்துப் புலவர் பாடியதுதான். இருந்தாலும் அது இந்தக் காலத்துக்கும் எவ்வளவு பொருத்தமான கருத்துகள் அடங்கின தென்பதைப் பாருங்கள். கதையைச் சொல்லுகிறேன், கேளுங்கள் :

நளன் என்னும் பெயருடைய ஓர் அரசன், மாவிந்தம் என்னும் நகரில் அரசு புரிந்து கொண்டிருந்தான்—'அப்பாடா, இந்தக் கதை தானா? இதற்கா இவ்வளவு பீடிகை? நளன் சமாச்சாரம்தான் எங்களுக்கெல்லாம் நன்றாய்த் தெரியுமே!' என்று இலேசாக எண்ணி விடாமல் நிதானமாகக் கேளுங்கள்.—நளன் மிகவும் அழகான யௌவன புருஷன். அவனைப் போன்ற அழகுள்ள ஆண்பிள்ளை யாருமே இல்லை. அழகைப்போலவே, அறிவும் மற்ற அரசனுக்கு இருக்கவேண்டிய ஆற்றல்களும் உள்ளவன்.

குண்டினிபுரம் என்கின்ற இன்னொரு ஊரில் வீமராஜன் என்னும் வேறொரு அரசன் இருந்தான். அந்த வீமராஜனுக்கு தமயந்தி என்னும் பெயருடைய வெகு சௌந்தரியமுள்ள ஒரு மகள். அவளுடைய அதிசயிக்கத்தக்க அழகுக்காகப் பல ராஜகுமாரர்கள் அவளைக் கலியாணம் செய்துகொள்ள ஆசைப்பட்டார்கள். பூலோகத்தில் மட்டுமல்ல, தேவலோகத்திலும்கூட அவளைப்போன்ற அழகுடைய பெண் இல்லையென்று தேவர்களும்கூட அவளை

மோகித்தார்கள். மோகித்தது மட்டுமல்லாமல் அவளுக்குத் தூதனுப்பித் தங்களை மணம்புரிய வேண்டும் என்று இந்திரன் முதலான தேவர்கள் கேட்டுக் கொண்டார்கள்.

அந்தக் காலத்தில் நம்முடைய நாட்டில் இருந்துவந்த கலியாண வழக்கம் எப்படியென்றால், இப்போது செய்வது போல ஒரு பெண்ணை அவளுக்கு இஷ்டமில்லாத மாப்பிள்ளைக்குக் கூட பெண்ணினுடைய தாய் தகப்பன்மார் பிடித்துக் கொடுத்துக் கலியாணம் முடித்து விடுகிறார்களே அப்படியல்ல. பின் எப்படியென்றால், கலியாணம் செய்துகொள்ள விரும்பும் கன்னிகை தானாகவே தன்னை மணம்புரிய விரும்புகின்ற ஆண் பிள்ளைகளைப்பற்றித் தீர விசாரித்தறிவாள். மணவாளனாக ஆசைப்படுகிற இளைஞனுடைய அழகு, வயது, படிப்பு, பணம், குணம், திறமை முதலிய எல்லா விவரங்களையும் தூதர்கள் மூலமாகவும் தோழிகள் மூலமாகவும் உற்றார் உறவினர் மூலமாகவும் விசாரித்து அறிந்துகொண்டு தன் மனசுக்குப் பிடித்தமான மாப்பிள்ளையைத் தானாகவே தீர்மானிப்பாள். அந்தத் தீர்மானத்தைப் பெற்றோருக்குத் தெரியப்படுத்துவாள். அவர்கள் விவாகத்தை நடத்தி வைப்பார்கள். ராஜ குடும்பங்களில் இந்த விவாகம் சுயம்வரம் என்ற பேரால் நடக்கும். சுயம்வரம் என்றால் ஒரு பெண் சுயமாகத் தன் இச்சைப்படி கணவனை வரித்துக்கொள்வது. இங்கே ஒரு வார்த்தை.

சுயம்வரம் என்கிற பதம் வடமொழிப் பதமாக இருக்கிறதால் இந்த வழக்கம் வட நாட்டாருக்குத்தான் என்று எண்ணிவிட வேண்டாம். தமிழ் நாட்டிலும் பண்டைக்காலத்தில் இதே வழக்கந்தான் இருந்தது. பெண் தானகவே இரகசியமாக விசாரித்தோ அல்லது நேரிற் சந்தித்தோ தன் மனதிற்கிசைந்த கணவனைத் தீர்மானித்துக் கொள்வதற்குத் தமிழில் 'களவொழுக்கம்' என்று சொல்லுவார்கள். களவு என்றால் ரகசியம் என்பது பொருள். அவ்வளவு தான், அந்தக்காலத்தில் களவு என்ற பதத்துக்கு அர்த்தம். இப்போது அந்த வார்த்தைக்கு வழங்கிவருகிற 'குற்றமான திருட்டுத்தனம்' என்ற அர்த்தம் அப்போது இல்லை. அப்படிக் களவாகத் தானகத் தீர்மானித்துக்கொண்ட மாப்பிள்ளையைத் தன்னுடைய பெற்றோருடைய சம்மதத்துடன் பகிரங்கமாக மாலை சூட்டி மணந்து கொள்வதற்குத் தமிழில் 'கற்பு' என்று சொல்லப்படும். 'கற்பு' என்றால் 'கலியாணம்' என்பது மட்டும்தான் அந்தக்காலத்தில் அர்த்தம். இந்தக்காலத்தில் 'கற்பு' என்றால் ஒரு பெண் ஒரே நாயகனுக்கு உண்மையாக இருப்பதும், அவன் இறந்து விட்டாலும் வேறு எவரையும் விவாகம் செய்துகொள்ள விரும்பாமல் விரதமாக வாழ்வதும் என்பது பொருள். இந்தப் பொருள் இந்தப் பதத்திற்குப் பண்டைக்காலத்தில் இருந்ததில்லை என்பதைப்

பழைய இலக்கியங்களினால் நிச்சயமாகத் தெரிகிறது. ஆகவே 'களவு' என்றால் ரகசியமாக விசாரித்தறிந்து ஒருவன்மேல் விருப்பங்கொண்டு அவனையே மணந்துகொள்ள நிச்சயித்துக் கொள்வது. 'கற்பு' என்றால் ஊரறிய அவனைக் கலியாணம் செய்து கொள்வது. இதையேதான் 'சுயம்வரம்' என்கின்ற வடமொழிப் பதம் குறிக்கும்—கதையை விட்டுவிட்டு எதையோ சொல்லிக்கொண்டிருக்கிறேனே என்று நீங்கள் எண்ணிவிடக்கூடாது. உங்களிற் பலபேர் பெரிய வகுப்புகளில் வாசித்துக் கொண்டிருக்கும் மாணவர்கள். இந்த இலக்கிய விஷயத்தையும் நீங்கள் அறியவேண்டியது அவசியம் என்றுதான் சொன்னேன். இதைப்பற்றிய இலக்கிய ஆதாரங்களை அறிந்துகொள்ள ஆசைப்படுகிறவர்கள் 'தொல்காப்பியம்' என்கின்ற—தமிழர் வாழ்க்கையின் இலக்கணம் சொல்லுகின்ற—பழைய நூலில் சொல்லப்படுகின்ற 'களவியல்' 'கற்பியல்' என்ற விஷயங்களைப் படித்து அறிந்து கொள்ளுங்கள்.

இனி கதையைத் தொடர்வோம்: எண்ணிறந்த இளவரசர்களும் தேவர்களும் தமயந்தியின் அழகில் மயங்கி அவரவர்கள் தங்கள் வெற்றிப் பிரதாபங்களை தூதர்கள் மூலமாகத் தமயந்திக்குச் சொல்லியனுப்பி விண்ணப்பம் செய்துக் காத்திருந்தார்கள். ஆடவர்களுக்குள் அழகிற் சிறந்த நளமகாராஜனுடைய உயர்ந்த

குணங்களைப்பற்றியும் விசாரித்தறிந்த தமயந்தி நளனையே தன் நாயகனாக வரித்துக்கொள்ளத் தீர்மானித்தாள். இதையறிந்த தேவர்கள் நளனிடத்திலேயே வந்து தங்களுக்கு ஓர் உபகாரம் செய்யவேண்டுமென்று அவனைக் கேட்டார்கள். அவர்கள் கேட்கப் போகிறது இன்னதென்று தெரியாமல் நளன் அவர்களுக்கு என்ன உபகாரமானாலும் செய்வதாக வாக்களித்தான். உடனே தேவர்கள் தங்களுக்கு சிபார்சாக, நளனே தமயந்தியிடத்தில் தூது போய் தங்களில் ஒருவருக்கே தமயந்தி மாலையிட வேணுமென்று அவளைக் கேட்டுக்கொள்ளும்படி வேண்டினார்கள். எந்த விதமான உபகாரமானாலும் செய்வதாக வாக்களித்து விட்ட நளன் சத்தியத்தைக் காப்பாற்ற வேண்டுமென்று, தான் தமயந்தியின்மேல் வைத்திருந்த ஆசைகளை யெல்லாம் அடக்கிக்கொண்டு, தமயந்தி யிடத்துக்குத் தூதுசென்று, தேவர்களுக்குள் யாருக்காவது ஒருவருக்கே அவள் மாலையிட வேண்டுமென்று வஞ்சனையில்லாமல் சிபார்சு செய்தான். நளனை இன்னானென்று அழகைக்கண்டு அநுமானத்தால் அறிந்து கொண்ட தமயந்தி, "நீங்கள்யார்? காவலுள்ள இந்தக் கன்னிமாடத்துக்கு எப்படி வந்தீர்?" என்று கேட்டாள். "நான் நளன். தேவர்கள் சொல்லிக்கொடுத்த மந்திர சக்தியினால் யாரும் என்னைக் கண்டுகொள்ள முடியாதபடி இங்கு வந்திருக்கிறேன். இவ்வளவு சக்திகளுக்கு

அதிகாரிகளாக இருக்கிற தேவர்களில் ஒருவரை நீ வரித்தால் உனக்குப் பல நன்மைகள் உண்டு" என்று சொன்னான். "சரி தாங்கள் இங்கு வந்ததைப்பற்றி மிகவும் சந்தோஷப் படுகிறேன். இந்த சிபார்சு பேச இங்கே வந்ததற்கும் வந்தனமளிக்கிறேன். எனக்கு நீங்கள் ஓர் உபகாரம் செய்ய வேணும்" என்று தமயந்தி சொன்னாள். நளன் அப்படியே உதவி செய்வதாக வாக்களித்து "என்ன உபகாரம்?" என்று கேட்டான். "நாளை சுயம்வர மண்டபத்தில் மாலையுடன் நான் வருகின்றபோது என் மனதுக்கிசைந்த மணாளனுக்கு மாலையிட்டுக் கொள்ளுகிறேன். தாங்கள் செய்த சிபார்சுகளைப் பற்றியும் சிந்திப்பேன். ஆனால் நீங்கள் மட்டும் 'நாம்தான் தேவர்களுக்காக சிபார்சு செய்துவிட்டோமே, இனிமேல் சுயம்வர மண்டபத்தில் நமக்கென்ன ஜோலி?' என்று சும்மா இருந்துவிடாமல் கட்டாயமாக நீங்களும் சுயம்வர மண்டபத்துக்கு வரவேண்டும். நீங்கள் எனக்குக் கொடுத்த வாக்குத் தவறாமல் இந்த உபகாரத்தைச் செய்யவேண்டும்" என்று தமயந்தி நளனிடத்தில் வாக்குறுதி வாங்கிக்கொண்டாள். நளன் திரும்ப தேவர்களிடத்தில் வந்தான். உள்ளது உள்ளபடி கொஞ்சம்கூட ஒளிக்காமல் நடந்ததையெல்லாம் நளன் சொன்னான். நளன் உண்மையாகநடந்துகொண்டதற்காகத் தேவர்கள் அவனை ஆசீர்வதித்தார்கள். ஆனாலும் தமயந்தி கூறியதாக

நளன் சொன்ன பேச்சிலிருந்து, தமயந்தி நளனுக்குத்தான் மாலையிடுவாள் என்று கண்டு கொண்டார்கள். தேவர்கள் மந்திர தந்திர மாயங்களில் வல்லவர்களல்லவா ? மறுநாள் சுயம்வர மண்டபத்துக்கு இந்த நான்கு தேவர்களும் ஒருவருக்குத் தெரியாமல் ஒருவர் நளனைப் போலவே வேஷம் போட்டுக்கொண்டு வெவ்வேறிடத்தில் உட்கார்ந்திருந்தார்கள். மாலையுடன் தமயந்தி மண்டபத்துக்குள் வந்தாள். வழக்கப்பிரகாரம் இதற்கென்று நியமிக்கப் பட்டவர்கள் வரிசையாக எல்லா அரசர்களையும் அறியப்படுத்தினுர்கள். ஒவ்வொருவராக எல்லாரையும் பார்த்து முடிந்தபின், தன்னுடைய கன்னிமாடத்துக்கு வந்து, தான் காதலித்த உருவத்தைப்போல் ஐந்துபேர் ஒரேமாதிரியாக இருப்பதைக்கண்டு அதிசயித்து ஆலோசித்தாள். தேவர்களின் சூதுதான் என்று தெரிந்து கொண்டாள். தன்னுடைய அறிவின் சிறப்பால் தேவர்களுக்கும் மனிதருக்கும் உள்ள வித்தியாசங்களை உற்றுணர்ந்து உண்மையான நளனுக்கே மாலையிட்டாள்.

சுயம்வரம் முடிந்தது. தமயந்தியின் மணமாலை ‘தனக்கு’ ‘தனக்கு’ என்று எதிர் பார்த்து ஏமாந்துபோன மற்ற அரசர்களும் இந்தத் தேவர்களும் வருத்தத்தோடு அவரவர்கள் ஊர் போகப் புறப்பட்டார்கள். மற்ற ராஜாக்களெல்லாம் சந்தடிசெய்யாமற் போய் விட்டார்கள். ஆனுல் தேவர்கள் அப்படி சும்மா

போவார்களா? தேவர்கள் என்றால் எங்கேயோ ஆகாசத்திலிருக்கிற தேவலோகத்திலிருந்து வந்தவர்கள் என்பதை நம்பாவிட்டாலும், மனிதர்களுக்குள்ளேயே தந்திர எந்திர சாமர்த்தியங்கள் அதிகமாக உள்ள ஒரு வகுப்பார் என்று தான் வைத்துக்கொள்வோமே. அந்தத் தேவர்களில் ஒருவர், தமயந்தி தனக்கு மாலையிட வில்லை யென்ற கோபத்தால் தமயந்தியைத் தண்டிக்கப் போவதாகச் சபதம் கூறுகின்றார். அந்த சபதத்தையும் அந்தத் தண்டனையையும் இந்தக் கதையைத் தமிழில் வெண்பாவாகப் பாடியிருக்கிற 'புகழேந்தி' என்னும் புலவர் பெருமான் எவ்வளவு அழகாகச் சொல்லுகின்றார் பாருங்கள் :

விண்ணரசர் நிற்க
வெறித்தேன் மணமாலை
மன்னரசர்க் கீந்த
மடமாதின் - எண்ணம்
கெடுக்கின்றேன் மற்று அவள்தன்
கேள்வனுக்கும் கீழ்மை
கொடுக்கின்றேன் என்றான் கொதித்து.

இதன் கருத்தைப் பாருங்கள். 'தேவர்களாகிய நாங்களெல்லாரும் வெட்கப்பட்டுத் தலை குனியும்படியாக ஒரு சாதாரண பூலோகத்து அரசனாகிய நளனுக்கு மாலைசூட்டிய இந்த தமயந்தியின் எண்ணத்தைக் கெடுத்து அவள் கொட்டத்தை அடக்குகின்றேன்' என்கின்றார். எப்படி தமயந்தியின் கொட்டத்தை அடக்கப்

போகிறாராம் இந்த தேவர்? அதைப் பாருங்கள்! 'அவள் கேள்வனுக்கும் கீழ்மை கொடுக்கின்றேன்' என்றானும் அத்தேவன். 'நளனை மணந்து மிகவும் சுகப்படலாம் என்றல்லவா இவள் அவனுக்கே மாலையிட்டாள்? அந்த ஆசைகளைக் குலைத்து அவளுடைய காதலனாகிய நளனுக்கு அடிமைத்தனம் கொடுத்து கஷ்டப்படுத்துகிறேன் பார்' என்று கொதித்துச் சொன்னானும். அப்பப்பா! தண்டனைகளிலெல்லாம் கொடிய தண்டனை ஒருவனுக்கு அடிமைத்தனம்தான் என்று புகழேந்திப் புலவர் சொல்லுகின்றார். அப்படியா? அடிமைத்தனம் அவ்வளவு கொடுமையுள்ளதா என்பதை இன்றைய உலகத்தில் நடக்கும் அட்டூழியங்களைச் சிறிது சிந்தித்துப் பார்த்தால் தெரியும். சுதந்திரத்தை இழந்து அன்னியர்களுக்கு அடிமைப்பட்டு அவதிப்படுகின்ற நாடுகளையும், அவற்றிலுள்ள சுதேச மக்கள் தவிக்கின்ற தவிப்புகளையும் பாருங்கள். வெறும் ராணுவ பலத்தால் தங்களை அமுக்கிக்கொண்டிருக்கிற அன்னியனுடைய ஏவலில் கட்டாய வேலை செய்துகொண்டு சொந்த நாட்டில் பிறருக்கு அடிமை செய்து புழுங்குவதைக் காட்டிலும் வேதனையான விஷயம் வேறொன்று உண்டா? ஏதோ அரசியல் பிரசாரத்துக்காக, நம்முடைய நாடு சுதந்திரமில்லாமல் இருப்பதைமட்டும் எண்ணிக்கொண்டு நான் பேசுவதாக நினைத்து விடவேண்டாம். ஐரோப்பாவை மட்டுமாவது

பாருங்கள். சுதந்திரத்தோடு சுகமாக வாழ்ந்த பல சிறு சிறு ஐரோப்பிய நாடுகள் இன்று ராணுவத் திமிர்படைத்த அன்னியருடைய கொடுமைகளுக்கு ஆளாகி அல்லற்படுவதைப் பாருங்கள். ஆகையினால் கொடுமையிற் கொடுமை அடிமை வாழ்க்கை. அப்படிப்பட்ட அடிமைத்தனத்தை நளனுக்குக் கொடுத்து தமயந்தியின் கொட்டத்தை அடக்கப் போவதாகத் தேவர்கள் கொதித்தார்கள். (கீழ்மை=அடிமைத்தனம்).

நளனும் தமயந்தியும் சிறிது காலம் வெகு சுகமாக வாழ்ந்தார்கள். ஓர் ஆண் குழந்தையையும் ஒரு பெண் குழந்தையையும் பெற்றார்கள். அழகான மக்களைப்பெற்ற ஆனந்தத்தோடு பலவிதமான தானதர்மங்களைச் செய்து, வெகு நீதியாக அரசு புரிந்து குடிஜனங்களுக்கு எந்த விதமான குறைச்சலுமில்லாமல், எல்லாரும் புகழ்ந்து கொண்டாடும்படியாக இருந்து வருகிற சமயத்தில் நளமகாராஜனைச் சனியன் பிடித்தது.—'சனியனா? அட சனியனே!.... சனியனாவது, மனிதரைப் பிடிக்கிறதாவது! இதெல்லாம் என்ன புரளிப் புளுகுகள்' என்று நம்மிற் சிலருக்குத் தோன்றலாம். 'சனியன் பிடித்தான்' என்றால் கெட்டகாலம் வந்தது என்றுதான் அர்த்தம். சனியன் என்கிற ஒரு தெய்வம் இருக்கிறதோ இல்லையோ, நம்மை அறியாமல் நாம் விலக்கவும் முடியாமல் நமக்குக் கஷ்டங்கள் வந்து விடுகிறபோது நாம்

என்ன எண்ணுகிறோம்? நம்முடைய கண்ணுக்குத் தெரியாத ஏதோ ஒரு சக்தியினால் அப்படி நேர்ந்து விட்டதாகத்தான் நினைக்கவேண்டியிருக்கிறது. அப்படிக் கெடுதல் செய்கிற சக்திக்கு நம் முன்னோர்கள் 'சனீசுரன்' என்று பெயர் கொடுத்தார்கள். அவ்வளவு தான். அந்தச் 'சனியனைப்'பற்றி இப்போது நாம் பேசினால் நம்முடைய நவீன மனசுக்கு நாகரிகமாக இருப்பதில்லை. 'சைத்தான் பிடித்துக்கொண்டான்' என்று சொன்னாலும் சம்மதிப்போம். ஆனால் 'சனியன்' என்று சொன்னால் அது சரியல்லபோலத் தோற்றுகிறது.

சரி, இந்தச் சனியன் கிடக்கட்டும்; கதைக்குப் போவோம். நள மகாராஜனுக்குக் கெட்ட காலம் வந்தது. நளனுக்கு தாயாதிக்காரனை புஷ்கரன் என்ற ஒருவன், நளனை சூதாடக் கூப்பிட்டான்; சூதாட்டமே கூடாது என்று சொல்லக்கூடிய நளன் தன்னுடைய கெட்ட கால புத்தியினால் சூதாடச் சம்மதித்தான். ஆடினான். கெட்ட காலத்தில் கெலிப்பதுண்டா? ஒவ்வொன்றாகத் தன்னுடைய செல்வங்களையெல்லாம் இழந்துவிட்டுக் கடைசியாகத் தன்னுடைய ராஜ்யத்தையும் பணயமாக வைத்து அதையும் இழந்துவிட்டான். இனிமேல் வைப்பதற்கு ஒரு உடைமையும் இல்லை. தன் மனைவி தமயந்தியும் குழந்தைகளுந்தான் மிச்சம். சூதாட்டத்தின் சுபாவத்தைப் பாருங்கள்,

தோற்கத்தோற்க மேலும் மேலும் வெறி வந்து 'அடுத்த ஆட்டத்தில் ஜெயித்து விடலாம்' என்று பின்னும் பின்னும் ஆடச்செய்யும். தோற்றுவிட்ட பொருள்களை எப்படியாவது ஜெயித்துவிட வேண்டுமென்று எதையும் பணயமாக வைக்கச் செய்யும், சூதாட்டம். எல்லா உடைமைகளையும் இழந்துவிட்டு, நாட்டையும் தோற்றுவிட்டு வேறு எதுவும் மிச்சமில்லாமல் மனைவியான தமயந்தியைக்கூட வைத்து ஆடிவிட நளன் எண்ணினும். அந்த சமயத்தில் அருகிலிருந்தவர்கள் கட்டாயப்படுத்தி அக் காரியத்தைத் தடுத்து விட்டார்கள்.

நளன் தன் நாட்டை சூதாடித் தோற்றுவிட்டான்.—'ஐயையோ! இது என்ன அநியாயம்! ஜனங்களுக்கும் பொது உடைமையான நாட்டை, ஜனநாயகத்தைச் சிறிதும் மதிக்காமல், தன்னுடைய சொந்தப் பொருளைப்போல் ஓர் அரசன் பணயமாக வைத்துச் சூதாடுவதா? இவன் என்ன அரசன்? இது என்ன நீதி? எவ்வளவு அநாகரிகம்! இந்த நாட்டுக் கதைகளே இப்படித்தான். பொய்யும் புளுகுமான இப்படிப்பட்ட கதைகளையெல்லாம் நம்முடைய இலக்கியங்களிற் புகுத்திக் குட்டிச் சுவராக்கி விட்டார்கள்' என்று நமக்கெல்லாம் கோபம் உண்டாகலாம். சில பேருக்கு 'இந்தக் கதைகளை யெல்லாம்—அவை அச்சடித்திருக்கிற புத்தகத்தை — நெருப்பிற் போட்

டுக் கொளுத்திவிட வேண்டும்' என்றுகூட எண்ணம் தோன்றலாம். இருந்தாலும் இந்த இடத்தில் கொஞ்சம் பொறுமையுடன் கேட்க வேண்டும்: ஓர் அரசன் தன்னுடைய நாட்டை ஒரு சொந்த வஸ்துவாகக் கருதி சூதாட்டத்தில் தோற்றுவிட்டான் என்பது இந்தக் காலத்துக்கு வெகு அநாகரிகம் போலத்தான் தோன்றும். ஏனென்றால் 'பொது உடைமை' 'குடியரசு', 'ஜனநாயகம்' என்று நாம் இப்போது பேசுகின்ற பேச்சுகளுக்கும் எண்ணுகின்ற எண்ணங்களுக்கும் அது மிகவும் முரண்பட்டது போல இருக்கிறது. ஆனால் இந்தக் காலத்து எண்ணங்களைக் கொண்டே நம்முடைய முன்னோர்களின் செயல்களை அளந்து நாம் அவர்களுக்கு முட்டாள் பட்டம் கட்டிவிடக்கூடாது. இந்தக் காலத்துக்குச் சரியில்லாவிட்டாலும் அந்தக் காலத்துக்கு அது சரி. ஜனநாயக முறையில் எண்ணிப் பார்த்தாலும் அந்தக் காலத்துக்கு அது ஜனநாயகம்தான். 'ஜனநாயகம்' 'குடியரசு' என்பதெல்லாம் என்னவென்றால் பெரும்பாலும் ஜனங்கள் (குடிமக்கள்) ஒத்துக்கொள்ளுகிறபடி ஒரு நாட்டில் அரசு நடப்பதுதான். அப்படியானால் அந்தக் காலத்திலிருந்த குடி ஜனங்களிற் பெரும்பாலாரும் அதற்குச் சம்மதித்துத்தான் இருந்தார்கள். ஆகையினால் அது அவர்களுக்குக் குடியரசுதான், ஜனநாயகம்தான். அல்லவா?

மேலும், இப்படிப் பொதுவான உடை

மையான ஒரு சாம்ராஜ்யத்தை ஒரு தனி மனிதன் தன்னுடைய இஷ்டப்படி சூதாடித் தோற்றுவிட்டதைப் போன்ற காரியங்கள், நாகரிகம் அறியாதவர்களாக நாம் நினைக்கிற நம் முன்னோர்கள் காலத்தில்தான் நடந்து விட்டது என்று நினைத்துவிடக்கூடாது. அதை விட மோசமான சூதாட்டங்கள், வெகு நாகரிகம் அடைந்துவிட்டதாக அகம்பவிக் கின்ற இந்தக் காலத்தில், நம்முடைய முன்னோர் களை முட்டாள்கள் என்று நினைக்கிற நம் கண் ணுக்கு முன்னலேயே நடக்கின்றன. இப் போது நடந்துவரும் யுத்தத்தைப் பாருங்கள். கிட்டத்தட்ட உலகத்திலுள்ள எல்லா நாடுகளை யும் யுத்த களத்தில் பணயமாக வைத்து நிரபராதிகளான கோடானுகோடி மக்களைப் பலிகொடுத்து நடத்தப்படும் இந்த பகிரங்கச் சூதாட்டத்தைப் பாருங்கள். ஆயுதத் திமிர் கொண்ட சில அரசாங்கத்தார்—அந்த அர சாங்கம் ஜனநாயக அரசாங்கமானலும் சரி, எதேச்சாதிகார அரசாங்கமானலும் சரி--அவற் றில் அதிகாரிகளாக இருக்கிற சில தனிப்பட்ட நபர்களின் தீர்மானப்படி சும்மாயிருந்த நாடு களையெல்லாம் சண்டைக்குள்ளாக்கி லட்சக் கணக்கான உயிர்களை மடியச் செய்கிருர்கள். நாகரிக காலம் என்று நாம் நினைக்கிற இந்த நாளில் எந்த ஜனநாயகத்தைக் கேட்டு இந்த சண்டை தொடுக்கப்பட்டது? தனிப்பட்ட ஒரு மனிதன் தன்னுடைய சொந்த உடைமை

யைப்போல ஒரு நாட்டின் செல்வத்தையும் அதன் ஜனங்களையும் தன் இஷ்டப்படி விரயம் செய்வது எந்த நாகரிகத்தைச் சேர்ந்தது? இந்த யுத்தத்தில் ஈடுபட்டிருக்கிற எல்லா நாடுகளிலும் ஒரு மனிதனின் அல்லது சில மனிதருடைய எதேச்சாதிகாரமே நடந்து வரவில்லையா? எங்கே ஜனநாயகம்? எது நாகரிகம்? கொஞ்சங் கொஞ்சமாக எல்லா உடைமைகளையும் தோற்றுவிட்டு, நாட்டையும் தோற்றுவிட்ட பின்னும்கூட 'ஜெயிப்போம் ஜெயிப்போம்' என்று எண்ணிக்கொண்டே மனைவியையும் பந்தயமாக வைத்துச் சூதாட எண்ணிவிட்ட நளனைப்போல இந்த யுத்தத்தில் கொஞ்சங் கொஞ்சமாகக் கோடிக் கணக்குக்கும் அடங்காத செல்வத்தையும் லட்சக்கணக்கான உயிர்களையும் தொலைத்துவிட்டும், இன்னும் 'ஜெயிப்போம்' 'ஜெயிப்போம்' என்று இந்த யுத்த சூதாட்டத்தை ஆடிக்கொண்டிருக்கிற எதேச்சாதிகாரத்தைக் காட்டிலுமா நளன் ஆடிவிட்ட சூதாட்டம் அநாகரிகமாகப் போய் விட்டது? எண்ணிப் பாருங்கள். நளன் சூதாடினது சரியென்று நான்சொல்வதாக எண்ணிவிட வேண்டாம். நான் சொல்ல வந்ததெல்லாம் என்னவென்றால், நம்முடைய முன்னோர்கள் செய்த காரியங்களெல்லாம் மட்டும் அநாகரிகம் என்றும், அந்தக் கதைகளை நம்முடைய புலவர்கள் பாடியதெல்லாம் புளுகுகள் என்றும், இந்தக் காலத்தில் நடக்கிற விஷயங்கள் நாக

ரிகத்தைச் சேர்ந்தன வென்றும் நாம் எண்ணி ஏமாந்து போகக்கூடாது என்பது மட்டும் தான். நளன் ஆடிவிட்ட அநாகரிகச் சூதாட் டத்தைக் காட்டிலும் இப்போது நடந்துவரும் எதேச்சாதிகாரச் சூதாட்டங்கள் எவ்வளவு பொருட் சேதமும் உயிர்ச்சேதமும் உள்ள கொடுமைகள் என்பதை நினைத்துப் பார்க்க வேண்டும். நளன் ஆடிய சூதாட்டத்தில் அவன் பிறருக்குச் செய்த தீங்கு ஒன்றுமில்லை. தனக்குத்தான் அதிக தீங்கு தேடிக் கொண் டான். தன்னுடைய அரச போகங்களையும் சுக வாழ்வையும் அரசாளும் உரிமையையும் தான் அவன் இழந்தான். ஆனல் இப்போது நான் சொன்ன நாகரிக அரசாங்கத்தாரின் சூதாட்டத்தில் இந்த எதேச்சாரிகள் தங்க ளுடைய உயிருக்கு மட்டும் எல்லாவித பந்தோ பஸ்துகளையும் பார்த்துக்கொண்டு, பிற உயிர் களையும் பிற நாடுகளையும் அழிக்கிறார்கள். யுத்தகளம் இன்ன இடத்திலிருக்கிறதென்று கூடத் தெரியாத குஞ்சு குழந்தைகளையும் பெண்டு பிள்ளைகளையும் குண்டு போட்டுக் கொல்லச் செய்கிறார்கள்.

ஆகையால் இந்தக் காலத்தை நாகரிக காலமென்றே, நம்முடைய முன்னோர்கள் காலத்தை அநாகரிக காலம் என்றே எண்ணி விடக்கூடாது. இந்த நாகரிகத்தைக் காட்டி லும் அந்த அநாகரிகமே ஆயிரம் மடங்கு உயர்ந்தது. பஞ்சமும் பசியும், கொலையும்

கொள்ளையும், பொருட் சேதமும் உயிர்ச் சேதமும் குறைந்த காலமே நாகரிக காலமாகும். அப்படிப்பட்ட காலத்தை உண்டாக்க உழைப்பதே நாகரிக அரசாங்கம். பொது உடைமையாகவோ, ஜனநாயகமாகவோ, குடியரசாகவோ அல்லது தனி மனிதன் எதேச்சிகாரமாகவோ எந்தப் பெயரில் அரசாங்கம் நடந்தாலும், வெறும் அந்தப் பெயரால் மட்டும் ஒரு அரசாங்கம் நல்லதாகிவிடாது. உண்மையில், சரியான 'பொது உடைமை' அரசாங்கமோ, சரியான 'குடியரசோ', சரியான 'ஜனநாயகமோ' இந்த உலகில் எந்த நாட்டிலும் இதுவரையிலும் ஏற்படவில்லை. எல்லா ஜனநாயக அரசாங்கங்களும் அநேக அம்சங்களில் எதேச்சாதிகாரமாகத்தான் இருக்கின்றன—இருக்கமுடியும். அதைப் போலவே எதேச்சாதிகார நாடுகளும் பல அம்சங்களில் ஜனநாயக அரசாங்கங்களாகத்தான் இருக்கின்றன—இருக்கமுடியும்.

ஆட்சி முறை எந்தப் பெயரால் நடந்தாலும்சரி, எந்த நாட்டில் ஆளுகின்றவர்களும் ஆளப்படுகின்றவர்களும் நியாய - அநியாயங்களை நினைத்து, தர்ம - அதர்மங்களைச் சரி பார்த்து, பாவ - புண்ணியங்களுக்குப் பயந்து நடக்கிறார்களோ அந்த நாட்டில்தான் நல் வாழ்வு உண்டு. அரசாங்க சட்ட திட்டங்களுக்கு மட்டும் பயந்து நடக்கின்ற நாட்டில் சந்தோஷம் இருக்காது. சட்ட பூர்வமான வாது வழக்குகள்

தான் மலிந்திருக்கும். இப்போது நாம் எதைச் செய்தாலும் அது சட்டங்களுக்குச் சரியாக இருக்கிறதா என்றுதான் பார்க்கிறோம். ஆனால் நம்முடைய முன்னோர்கள் எதைச் செய்தாலும் அது நியாயத்துக்குச் சரியா, தர்மத்துக்குத் தகுமா, அறங்களுக்கு அடுக்குமா, கண்ணுக்குத் தெரியாத சாட்சியாக நிற்கும் கடவுளுக்குச் சம்மதமாகுமா என்ற முறையில்தான் அதிகமாக எண்ணினார்கள் என்பதை நம்முடைய இலக்கியங்களில் எங்கே பார்த்தாலும் எழுதப்பட்டிருப்பதைப் பார்க்கிறோம்.

இனி கதையைப் பார்ப்போம். நளன் மனைவி மக்களைத் தவிர, மற்றெல்லாம் இழந்துவிட்டான். புஷ்கரன் மிகவும் பொல்லாதவன். நளனும் அவனுடைய குடும்பமும் உடனே நாட்டைவிட்டுப் போய்விட வேண்டுமென்று புஷ்கரன் கண்டிப்பான உத்தரவிட்டான். நளனும் தமயந்தியும் தங்களுடைய இரண்டு குழந்தைகளுடன் அரண்மனையைவிட்டு வெளியேறினார்கள். எங்கே போகலாம் என்று எண்ணும் பொழுது தமயந்தி நளனைப்பார்த்து, "நாதா, ஏதோ தீவினைப் பயனாக இப்படி நேர்ந்துவிட்டது. அதைப்பற்றி துக்கப்பட்டுப் பயனில்லை. இனி நாம் வேறெங்கும் போகவேண்டாம். என்னுடைய தந்தை வீமராஜன் நம்மை சந்தோஷமாக வரவேற்பார். நம்முடைய கஷ்டகாலம் போகிறவரைக்கும் என் தாய் தந்தையருடன் தங்கியிருக்கலாம்" என்றாள். அதைக்கேட்ட

நளன் "நாயகியே! நான் இந்த நிலைமையில் மாமனார் வீட்டில் போய்த் தங்கியிருப்பது மிகவும் மானக்கேடான காரியம். மானத்தை விட்டு சுகத்தைத் தேடுவது மதிக்கத் தக்கதல்ல. வேறு எங்கே போய் எப்படி ஜீவனம் செய்ய நேர்ந்தாலும் அங்கேமட்டும் வரமாட்டேன். ஆனல் எனக்கு அது மாமனர் வீடானலும் உனக்குத் தாய்வீடு. பெண்கள் தம்கஷ்டகாலத்தில் பிறந்த வீட்டுக்குப் போவது பிழையாகாது. பொல்லாத காலம் போகிற வரைக்கும் நீயும் குழந்தைகளும் அங்கே இருப்பது நல்லது. தக்க துணையோடு உன்னை அங்கே அனுப்பி வைக்கிறேன். நீ அங்கே போய் சுகமாக இரு. நல்லகாலம் வந்தவுடன் நான் வந்து உன்னை அழைத்துக்கொள்ளுகிறேன்" என்றான். அதற்கு தமயந்தி, "நாதா! நீங்கள் எங்கேயோ சென்று எப்படியோ கஷ்டப்பட நான்மட்டும் அங்கு சென்று அரண்மனைச் சுகங்களை அனுபவிப்பேனு? நீங்கள் இல்லாத இடத்தில் எனக்கு நிம்மதி இருக்குமா? தாங்கள் எங்கே போவதானலும் சரி, நான் உங்களைப் பிரிந்து போகமாட்டேன். தயவுசெய்து என்னையும் கூட்டிச் செல்லுங்கள். தாங்கள் அனுமதித்தால் நம்முடைய குழந்தைகளை மட்டுமாவது என் தாய் தந்தையரிடம் அனுப்பிவிடலாம்" என்றாள். அப்படியே நளனும் ஒத்துக்கொண்டு குழந்தைகளைக் குண்டினிபுரத்துக்கு அனுப்பி விட்டு நளனும் தமயந்தியும் நாட்டைவிட்டு ஒரு

காட்டுப் பாதையில் நிடதேசத்தின் எல்லையை விட்டு நீங்கிவிட வேண்டுமென்ற ரோஷத் துடன் போகிறார்கள். காட்டுப் பாதையில் கல்லிலும் முள்ளிலும் நடந்து தமயந்தி மிகவும் கஷ்டப்பட்டாள். பகலெல்லாம் நடந்து சாயங் கால வேளையில் பசியும் தாகமும் மேலிட்டுக் களைப்படைந்துவிட்டார்கள். ஆனால் உணவுக்கு என்ன செய்வது? காட்டில் ஏதாவது மிருகம், பட்சி இவற்றை வேட்டையாடிச் சாப்பிட லாமென்றால், வழக்கமாக ஒரு அரசன் வைத் திருக்கவேண்டிய வில், வாள் முதலிய ஆயுதங் களையும்கூட அந்தப் படுபாவி புஷ்கரன் பறித் துக்கொண்டு அனுப்பிவிட்டான். என்ன செய் வது? தன்னுடைய பசியைக் காட்டிலும் தன் னுடைய காதலியின் களைப்பைக் கண்டு நளன் மிகவும் கலங்கிவிட்டான். எப்படியாவது அவ ளுக்கு ஏதேனும் ஆகாரம் தேடிக் கொடுக்க எண்ணி யெண்ணித் திகைத்துக்கொண்டிருக் கிற சமயத்தில் தனக்கு முன்னால் சற்று தூரத் தில் காட்டுப் பறவைகள் ஒரு பெருங் கூட்ட மாக வந்து தரையில் உட்கார்ந்தன. அந்தப் பறவைகளில் சிலவற்றைப் பிடித்தால் எங்கே யாவது காட்டுத்தீயில் வேகவைத்து நாயகிக் குக் கொடுக்கலாமே என்ற ஆத்திரம் வந்து விட்டது நளனுக்கு. ஆனால் அவைகளைப் பிடிப்பது எப்படி? ஆத்திரக்காரனுக்கு ஆலோ சனை மட்டல்லவா? உடனே நளன் தன் ஆடைகளைக் களைந்து, அவற்றைப் பறவைகள்

பிடிக்கும் வலைகளைப்போல நினைத்துக்கொண்டு மெள்ள மெள்ள அந்தப் பறவைக் கூட்டத்துக்குச் சமீபமாகச் சென்று திடீரென்று அப்பறவைகளின்மீது ஆடைகளை வீசினான். நளன் ஆடைகளை வீசின அதே க்ஷணத்தில் அந்தப் பறவைக் கூட்டமும் குபீலென்று ஒருமிக்கக் கிளம்பிற்று. அப்படிக் கிளம்பிய வேகத்தில் பறவைகள் ஆடையோடு பறந்துபோய் கண்ணுக்கு மறைந்துவிட்டன. நளன் ஆடைகளையும் இழந்துவிட்டுக் கோவணத்தோடு நின்று நெடுமூச்சு விடலானான். பசியையும்கூட மறந்துவிட்டு நாயகி நகைக்கலானாள்.

சரி, அதுவும் கெட்ட காலத்தின் பலன்தான் என்று எண்ணிக்கொண்டு அங்குமிங்கும் தேடி ஒரு தடாகத்தைக்கண்டு அதில் தண்ணீர் குடித்துச் சற்றுக் களைப்பாறி, இருட்டுகின்ற நேரம் வந்துவிட்டதால் இரவைக் கழிக்க ஓர் இடத்தைத் தேடிக்கொண்டு நடந்தார்கள். நல்ல வேளையாக ஒரு பாழடைந்த மண்டபம் கண்ணிற்பட்டது. நம்முடைய தமிழ் நாட்டில் இப்படிப்பட்ட சிறு சிறு மண்டபங்களை அங்கங்கே காணலாம். நேர்ந்த இடத்திலெல்லாம் ஒரு கோயிலோ மண்டபமோ கட்டிவைப்பது தமிழ் நாட்டில் தர்மமெனக் கூறப்பட்டது. தனி வழிகளிலும் காட்டுப் பாதைகளிலும் வழிப்போக்கர்களுடைய வசதிக்கென்று தண்ணீர்ச் சாலைகளென்றும் இளைப்பாறும் இடங்களென்றும் கட்டிவைப்பதைப் பெரிய புண்ணியமாக

எண்ணினர்கள் நம் முன்னேர்கள். அப்படிக் கட்டப்பட்டுப் பாழுடைந்த ஒரு மண்டபம் இது. தமயந்தியும் நளனும் இரவைக் கழிக்க அதிலே தங்கினர்கள். நளனுக்கு ஆடையில்லை. குளிருக்கு என்ன செய்வான்?

இப்படிப்பட்ட சமயங்களுக்கு உதவட்டும் என்றுதானே என்னவோ நம்முடைய நாட்டில் பெண்களுக்குப் பதினெட்டு முழம் வரையிலும் புடவையின் நீளம் ஏற்பட்டது! தமயந்தி தன்னுடைய புடவையில் ஒரு பாகத்தைத் தன் கணவனுடைய உடலுக்குக் கவசமாகச் சுற்றிக் குளிருக்காகக் காவல் செய்தாள். அங்கே கிடந்த கற்களைத் தலையணைகளாக வைத்துக் கொண்டு அந்தப் பாழ் மண்டபத்தில் படுத்துக் கொண்டார்கள். நடந்துவந்த அலுப்பினல் தமயந்தி வெகு சீக்கிரம் தூங்கிவிட்டாள். நளனுக்குத் தூக்கம் வரவில்லை. தனக்கு நேர்ந்த கதியை நினைத்து நினைத்துப் புழுங்கினன். தேவர்களை யெல்லாம் விலக்கிவிட்டுத் தனக்கு மாலை சூட்டிய தமயந்திக்குத் தன்னல் நேர்ந்த சீர்கேட்டைச் சிந்தித்தான். தன்னுடைய கஷ்டங்களை நினைத்துச் சகிக்க முடியாத வேதனைக்கு உள்ளானன். அவளையும் கூட்டிக் கொண்டு எங்கே போய் என்ன செய்வது என்று எண்ணி யெண்ணிப் பார்த்தான். அவனுடைய புத்தி குழம்பிவிட்டது. பித்தம் பிடித்தவனைப்போல, அவளை விட்டு விட்டு எங்கேயாவது ஓடிவிடத் தீர்மானித்தான். எழுந்

தான். இருவரும் சுற்றிக்கொண்டிருந்த ஒரே புடவை இழுத்தது. இருட்டில் கையை நீட்டி அங்குமிங்கும் தடவிப் பார்த்தான். கத்தியைப் போல ஒரு கல் கிடைத்தது. அதை எடுத்தான். சத்தமில்லாமல் புடவையை அறுத்தான். கிழித்த புடவையோடு இருட்டில் எங்கேயோ போய்விட்டான்.

பொழுது விடிந்தது. தமயந்தி விழித்தாள். கணவனைக் காணவில்லை. புடவை துண்டிக்கப் பட்டிருந்தது. காலைக் கடன்களை முடித்து வரப் போயிருக்கிறாராக்கும் என்று எண்ணினாள். நாழிகை செல்லச் செல்ல நளன் அங்கில்லையெனக் கண்டாள். அங்குமிங்கும் ஓடினாள். ஆனமட்டும் தேடினாள். துணைவனைக் காணாது துடிதுடித்தாள். ஓவென்று அலறிப் பிரலாபித்து அழுதாள். அருகில் ஒரு பாதையில் போய்க்கொண்டிருந்த சில வியாபாரிகள் காதில் இந்த அழுகுரல் விழுந்தது. அவர்கள் ஓடிவந்து அந்தக் காட்டில் தன்னந் தனியே ஓர் உயர்குலப்பெண் தவித்துப் புலம்புவதைக் கண்டு விசாரித்தார்கள். அவர்கள் தமயந்தியின் தகப்பனுடைய ஊராகிய குண்டினிபுரத்துக்குப் போகிறவர்கள். அவள் வீமராஜனுடைய மகள் தமயந்தி என்பதை அறிந்து வெகு மரியாதையுடன் வேண்டிய ஆறுதல் சொல்லித் தமயந்தியைக் கூட்டிக்கொண்டுபோய் வீமராஜனுடைய அரண்மனையிற் சேர்த்தார்கள். இப்படியாக தமயந்தி, தன் தாய் வீட்டில், முன்னு

லேயே அங்கே அனுப்பப்பட்ட தன்னுடைய இரண்டு குழந்தைகளோடும் இருந்து வருகிறாள்.

தமயந்தியை விட்டுவிட்டு ஓடின நளனைப் பார்ப்போம். அவன் வெறி பிடித்தவனைப் போலக் காட்டைப் பார்த்தும், கரட்டைப் பார்த்தும், மயிலைப் பார்த்தும், குயிலைப் பார்த்தும், வண்டைப் பார்த்தும், நண்டைப் பார்த்தும் என்னென்னவோ பேசிப் பிதற்றிக்கொண்டு ஒரு காட்டு வழியாகப் போகிறான். ஓர் இடத்தில் மரங்கள் ஒன்றோடொன்று உராய்வதனால் உண்டாகக்கூடிய காட்டுத்தீ எரிந்துகொண்டிருந்தது. அதன் பக்கமாகப் போனான். அந்த நெருப்பின் மத்தியில் ஒரு பாம்பு சிக்கிக் கொண்டு தவிப்பதைப் பார்த்தான். பாம்பென்றாலும், ஒரு ஜீவன் நெருப்பிற் சிக்கிக் கொண்டு துடிப்பதைக்கண்டு நளனுக்குப் பச்சாத்தாபம் வந்துவிட்டது. 'வீட்டுக்குள் வந்து விட்ட பாம்பா? காட்டில் இருக்கிற பாம்பு தானே. அது ஏன் வீணாகச் சாகவேண்டும்?' என்று எண்ணிக்கொண்டு ஜீவகாருண்ய உணர்ச்சியினால், அந்தப் பாம்பை நெருப்பிலிருந்து வெளியே எடுத்துவிட்டான். இப்படிப்பட்ட உபகாரத்தை நாமெல்லாம் கூட அடிக்கடி செய்வதுண்டு. நெருப்பிலிருந்து எடுத்த அந்தப் பாம்பை நளன் நெருப்பிலிருந்து தூரமாக ஒரு குளிர்ச்சியான இடத்தில் விட்டான். விட்ட உடனே அந்தப் பாம்பு என்ன செய்தது? நளனைக் கடித்துவிட்டது! ஐயோ!

'பாம்புக் குட்டிக்குப் பால் வார்த்த மாதிரி' என்பார்களே அப்படி உபகாரத்துக்குப் பிரதி அபகாரமாக அந்தப் பாம்பு கடித்துவிட்டதே என்று நளன் திகைக்கிற சமயத்தில் பாம்பு பேசத் தொடங்கிற்று. என்ன இது? பாம்பாவது, பேசவாவது! இதெல்லாம் என்ன பைத்தியக்காரத்தனம் என்றுகேட்கக்கூடாது. இதெல்லாம் வெறும் கற்பனைதான். கற்பனை சேர்ந்தால்தான் கதைக்கு அழகு. சொல்வதற்கும் கேட்பதற்கும் சுகம். எல்லா பாஷைகளிலும் இப்படிப் பேசாத பிராணிகள் பேசினதாகக் கற்பனை உண்டு. ஆனல் இங்கிலீஷில் ஒரு புரு பேசிற்று என்ருவது, அல்லது ஒரு பன்றி தன்னேடு வந்த பன்றிகளையெல்லாம் எண்ணிப் பார்த்தது என்ருவது, அல்லது ஒரு வைக்கோற் போரைக் காத்த நாய் பசுவோடு வாதாடிற்று என்ருவது, அல்லது 'ஜாக்கும் அவரைக் கொடியும்' என்ற கதையைப் படிக்கிறபோதாவது இப்படிப்பட்ட பேச்சுகளை நாம் பைத்தியக்காரத்தனமாக நினைப்பதில்லை. நம்முடைய நாட்டுக் கதைகளில் இப்படி ஏதாவது வருகிறபோது மட்டும் நமக்கு எல்லாவித விசாரணைகளும் சந்தேகங்களும் வந்து விடுவது வழக்கம். அப்படிக் கேள்விகளில் மனதைச் செலுத்தாமல் அந்தக் கதையிலுள்ள சாரத்தை மட்டும் அனுபவிக்க வேண்டும். சரி, பாம்பு பேசத் தொடங்கிற்று. என்ன? "நள மகாராஜனே! நீங்கள் என்னை நெருப்பிலிருந்து

எடுத்துவிட்ட உபகாரத்துக்கு நன்றி செலுத்தாமல் நான் கடித்துவிட்டேன் என்று எண்ணி விடவேண்டாம். உங்களுக்கு உபகாரம் செய்ய வேண்டுமென்ற எண்ணத்தினுல்தான் கடித்தேன். இப்போது நான் உங்கள் தேகத்திற் செலுத்தி யிருக்கிற விஷம் உங்களைக் கொன்று விடாது. அல்லது வேறு தீங்கும் செய்து விடாது. ஆனுல் அது உங்கள் அடையாளத்தை முற்றிலும் மாற்றி, அழகான உங்கள் மேனியைச் சற்றே கருகிக் குறுகச் செய்துவிடும். உங்களை 'நளன்' என்று யாரும் கண்டுகொள்ள முடியாதபடிச் செய்துவிடும். நீங்கள் உங்களுடைய பழைய வடிவத்தோடு வேறு எவரிடத்திலும் ஏவல் செய்து காலங்கழிப்பது மிகவும் சங்கடமாக இருக்கும். உங்களுடைய கஷ்ட காலம் தீரும்வரையில் நீங்கள் உருமாறி யிருப்பது மிகவும் நல்லது. அதற்காகத்தான் கடித்தேன். சிறிது காலத்துக்குப் பின் உங்கள் கஷ்டங்கள் நீங்கி மனைவி மக்களையும் ராஜ்யத்தையும் அடைவீர்கள். அப்போது உங்கள் பழைய வடிவம் வந்துவிடும். உங்கள் பழைய வடிவத்தை அடையவேண்டிய காலம் வந்த உடன் இதோ இந்த ஆடைகளை அணிந்தால் முன்னிருந்த உருவம் வந்துவிடும்'' என்று இரண்டு ஆடைகளை அந்தப்பாம்பு நளனுக்குக் கொடுத்து, அவன் காசிக்குச் சென்று ரிதுபன்ன மகாராஜனிடம் வேலைக்கமரும் யோசனையையும் சொல்லிக் கொடுத்தது. இவற்றை

யெல்லாம் பாம்பு சொல்லி முடிப்பதற்குள் நள னுடைய அழகான தேகம் குறுகி உருமாறிப் போய்விட்டதாம். அது எப்படி வெகு சீக்கிரத் தில் உருமாறிப் போய்விட்டதாம்! புகழேந் திப்புலவர் ஒரு சிறந்த புத்திமதியை நமக்குச் சொல்லவேண்டுமென்ற ஆசையுடன் ஓர் உப மானம் சொல்லுகிறார். என்ன உபமானம்? பசித்துவந்த ஏழைகளுக்கு உதவி செய்யும் ஜீவகாருண்ய மில்லாதவனுடைய குடித்தனம், அது எவ்வளவு சிறப்புடையதாக இருந்தாலும் சீக்கிரத்தில் செல்வம் குறைந்து சீரழிந்து போகுமாம். அதைப்போல வெகு சீக்கிரத்தில் நளனுடைய உருவம் கருகிக் குறுகிப்போய்விட் டது என்கிறார். கற்பனை அழகாக இருக்கிறது. அதை நீங்கள் ரசிப்பீர்கள். அதற்காக அந்தப் பாட்டைச் சொல்லுகிறேன்; பாருங்கள் :

> வீமன் மடந்தை
> விழிமுடியக் கண்டறியா
> வாம நெடுந்தோள்,
> வறியோருக்கு—ஏமம்
> கொடாதார் அகம்போல்
> குறுகிற்றே மெய்ம்மை
> விடாதான் திருமேனி வெந்து.

இப்படி, அடையாளங் கண்டுகொள்ள முடி யாதபடி உருமாறிய வடிவத்தோடு நளன் காசி ராஜனிடம் போனான். தனக்கு ஏதாவது வேலை கொடுக்கவேண்டும் என்று கேட்டான். "உனக்கு என்ன வேலை தெரியும்?" என்றான்

காசிராஜன். "நான் தேரோட்டும் வேலையி லும் சமையல் வேலையிலும் நிகரற்ற நிபுணன்" என்றான் நளன். நல்ல சமையலை இன்றைக் கும் நாம் 'நளபாகம்' என்று சொல்லுகிறோ மல்லவா? தேர் ஓட்டும் வேலையிலும் சமையல் வேலையிலும் கெட்டிக்காரன் என்றதைக் கேட்ட காசிமன்னன் மிகவும் களிப்படைந்து "அப்படி அந்த இரண்டு வேலையிலும் சமர்த்த னை ஓர் ஆள் கிடைப்பது அருமைதான். நமக்கும் அப்படிப்பட்ட ஓர் ஆள் பிரயாணத் துக்கு அவசியமாகத்தான் இருக்கிறது" என் றான் காசிராஜன். இப்போது பள்ளிக்கூடங் களில் (டிரில் அண்டு டிராயிங்க்' கம்பைன்டு) டிரில்லும் டிராயிங்கும் இரண்டையும் சொல் லித்தரக்கூடிய உபாத்தியாயர் வேண்டும் என் கிறார்கள் அல்லவா, அப்படிப்போல,—சரி, நள னுடைய தேர்த் தொழிலையும், சமையல் வேலை யையும் பரிட்சை பார்த்துக் காசிராஜன் வாகு கன் என்று தன் பேர் சொல்லிக்கொண்ட நளனைத் தேர்ப்பாகனை வைத்துக்கொண் டான்.நளன் தேர்ப்பாகனை அமர்ந்துப் பன்னி ரண்டு வருஷம் ஆய்விட்டது. 'என்ன? என்னமோ இரண்டு இளைஞர்களைப்பற்றி-ஒரு வாலிபனைப்பற்றியும் ஓர் இளம் பெண்ணைப் பற்றியும் வெகு ரசமான விஷயங்களைச் சொல் வதாகச் சொன்னீர்கள்! அதை விட்டுவிட்டு என்னென்னமோ சொல்லிக்கொண்டிருக்கி றீர்களே. எங்கே அந்த இளைஞர்கள்? சீக்கிரம்

அவர்களைப்பற்றிச் சொல்லுங்கள்' என்று உங்களுக்கு ஆத்திரம்கூட வரலாம். கொஞ்சம் பொறுத்துக் கொள்ளுங்கள். இதோ அந்த இளைஞர்கள் வரப்போகிறார்கள்—பன்னிரண்டு ஆண்டுகள் ஓடிவிட்டன.

இந்தப் பன்னிரண்டு வருடங்களாக நளன் கவலையற்றிருந்தாலும் தமயந்தி சும்மா இருக்கவில்லை. தன்னுடைய நாயகனைக் கண்டு பிடிக்கத் தன்னாலான முயற்சிகளையெல்லாம் செய்து கொண்டேயிருந்தாள். தன் கணவன் எங்கேயாவது ஓர் அரசனிடத்திலேதான் ஏதாவது தொழிலில் அமர்ந்திருக்க முடியும் என்று எண்ணிய தமயந்தி, புத்திசாலியான ஒரு தூதனை அனுப்பி ஒவ்வொரு அரசாங்கத்துத் தலை நகரத்திலும் சென்று அந்த நாட்டு அரசன் வசிக்கிற அரண்மனைக்குப் பக்கமாக உள்ள எல்லா இடங்களிலும் 'கானகத்துக் காரிருளில் காதலியைக் கைவிட்டுப் போனதுவும் வேந்தற்குப் போதுமோ?' 'காட்டிலே நடுராத்திரியில் தன் மனைவியைத் தவிக்க விட்டுப் போய் விட்டது ஓர் அரசனுக்குத் தகுமா?' என்று தண்டோரா போட்டுக் கேட்கச் சொன்னாள். 'இந்தத் தமுக்கு நளன் காதிலே விழுந்தால் அவனைச் சும்மா இருக்க விடாது. ஏதாவது பதில் கிடைக்கும்' என்பது தமயந்தியின் கருத்து. அப்படியே எல்லா ராஜாங்கத்திலும் தண்டோரா போடப்பட்டது. காசியிலும் போடப் பட்டது. அந்தத் தமுக்குச் சத்தம் தேர்க்

கூடத்தில் இருந்த நளன் காதில் விழுந்த தும், அவன் தழுக்கடித்தவனிடம் வந்தான். தழுக்கடித்தவனைக் கூப்பிட்டு அவனிடத்தில் "ஒண்டொடி தன்னை உறக்கத்தே நீத்ததுவும் பண்டை விதியின் பயனே காண்........." என்றான். 'அப்படி அந்த அரசன் தன் மனைவியை அவள் தூங்கும்போது விட்டுப் பிரிந்து போக நேர்ந்தது ஊழ்வினையின் - பூர்வ கர்மத்தின் - பயனாகத் தான் இருக்கும். வேண்டுமென்று கெட்ட எண்ணத்தோடு விட்டு விட்டுப் போனான் என்று சந்தேகிக்க வேண்டாம்' என்றான். அதைக்கேட்டு அந்தத் தண்டூரா போட்ட தமயந்தியின் தூதன் வெகு ஆச்சரிய மடைந்தான். 'எத்தனையோ ராஜாங்கில் போய்த் தண்டூரா போட்டோம். ஏனென்று கேட்பாரே இல்லை. இவன் யாரோ ஒரு குஷ்டரோகி மாதிரி யிருக்கிறான். இதற்குச் சமாதானம் சொல்ல வந்துவிட்டானே' என்று நினைத்தான். அந்த தூதன் வயதானவன். தமயந்தியின் சுயம்வரத்தில் நளனைப் பார்த்திருந்தவன். நளனுடைய அழகுக்கும் இந்த அவலட்சணமான மனிதனுக்கும் ஒரு சம்பந்தமும் தெரியாமல் தழுக்கடித்த தூதன் திகைத்தான். அவன் திகைத்துக் கொண்டிருக்கும்போதே வேறொன்றும் பேசாமல் அந்த வாகுகன் போய்விட்டான். மறுபடியும் அவனைக் காணமுடியவில்லை.

பிறகு தூதன் தமயந்தியிடம் திரும்பி

வந்தான். காசியில் கண்ட அவலட்சணமான மனிதனைப்பற்றியும் அவன் சொன்னதையும் தெரிவித்தான். அந்தக் குரூபியான மனிதன் தன் நாயகனாக இருக்கக்கூடும் என்று தமயந்தி அநுமானித்தாள். ஆனால் அவனைப்பற்றி இன்னும் விவரமாக எப்படி அறியமுடியும், அவனைப் பார்ப்பதெப்படி என்று ஆலோசித்தாள். அந்த மனிதனுடைய உருவத்தைப் பற்றிக் கேட்டதை நினைத்தால் அவன் அங்கே உயர்ந்த உத்தியோகத்தில் இருக்கமுடியாது. ஏதாவது ஏவல் செய்கிற வேலையுள்ளவனாகத் தான் இருக்கவேண்டும். அப்படியானால் எத் தகைய ஏவல் தொழிலில் நள மகராஜன் இருக்கமுடியும் என்றெல்லாம் எண்ணிப் பார்த்தாள். தேர்ப்பாகனாகவோ அல்லது சமையற் காரனாகவோ இருக்கவேணும் என்று நினைத்தாள். உடனே ஒரு யுக்தி செய்தாள். அந்த மனிதர் காசிராஜனிடத்தில் தேர்ப்பாகனாக இருந்தால், காசிராஜன் ஒரே நாளில் இங்கே வந்து சேரவேண்டிய ஒரு கட்டாயத்தை உண்டாக்கினால், அந்த காசிமன்னனுடைய தேர்ப் பாகன் நளனாக இருந்தால்தான் அப்படி ஒரே நாளில் வரமுடியும்; அப்படி அவர் வரநேர்ந் தால் மற்ற விஷயங்களை நேரிற் கண்டுகொள்ள லாம் என்று தீர்மானித்தாள். அதற்குத் தமயந்தி வெகு சாமர்த்தியமாக ஒரு சூழ்ச்சி செய்தாள். அந்த சூழ்ச்சி இதுதான். முன் காசிக்குச் சென்றுவந்த தூதனையே

கூப்பிட்டாள். "நீ மறுபடியும் காசிக்குச் சென்று, முன் அந்த விகாரமான மனிதரைச் சந்தித்த இடத்திலேயே நான் சொல்லுகிறபடி தண்டூரா போட்டு விளம்பரப்படுத்து. எப்படியென்றால், 'எங்கள் தமயந்தியின் கணவன் நளமகாராஜன், நடுராத்திரியில் நாயகியைக் காட்டில் விட்டுவிட்டுப்போய் பன்னிரண்டு வருஷம் ஆய்விட்டது. அவர் என்ன ஆனரோ தெரியவில்லை. ஆகையினல் தமயந்தியானவள் அரசர் குலப் பெண்களுக்குள்ள உரிமைகளுக்கிணங்க (இன்ன சட்டம், இன்ன செக்ஷன், இத்தனையாவது 'பைலா' பிரகாரம்) மறு மணம் செய்துகொள்ளத் தீர்மானித்துவிட்டாள். அதற்காகக் குண்டினிபுரத்தில் மறு சுயம்வரம் நடக்கிறது. அந்த சுயம்வரம் நாளைக்கே காலை பத்து மணிக்குள்ளாக நடக்கும். இஷ்டமான ராஜாக்கள் வரலாம்' என்று விளம்பரம் செய்" என்ருள்.

அப்படியே காசியில் விளம்பரம் செய்யப்பட்டது. இந்த விளம்பர சத்தம் காசி ராஜனுகிய ரிதுபன்னன் காதில் விழுந்தது. 'அடடா, தமயந்திக்கா! மறு சுயம்வரமா! ஐயையோ அது நாளைக்கேயா!' என்று ரிதுபன்னன் வெகு ஆசையோடு ஆத்திரப்பட்டான். போன சுயம்வரத்தில் ரிதுபன்னன் நளமகராஜனுக்குப் பக்கத்தில் உட்கார்ந்திருந்தவன். அதுமட்டுமல்ல. தமயந்தியின் மாலை தனக்குக் கிடைக்கவேண்டுமென்று

தேவர்களைக்காட்டிலும் துடித்தவன். சுயம் வரம் முடிந்தபிறகும் எந்நேரமும் தமயந்தியையே நினைத்துக்கொண்டு இருக்கிறவன். இன்னமும் அவளை எண்ணியெண்ணி ஏக்கம் பிடித்திருப்பவன். அவனுக்கு இந்த விளம்பரத்தைக் கேட்டவுடன் தன்னுடைய பழைய ஆசைகளெல்லாம் மறுபடியும் மனதில் பொங்கி விட்டன. தன்னுடைய கண்ணியத்தையும் ஒழுக்கத்தையும் மறந்தான். தான் மனைவி மக்களோடு இருப்பதையும் மறந்தான். வெறும் பெண்ணாசைப் பித்தத்தால் 'தமயந்தி இன்னொரு சுயம்வரம் நடத்துவாளா, நளனைப் போன்ற அற்புத அழகனை மணந்து, அவனுடன் நெடுநாள் இல்லற சுகங்களை அனுபவித்து மக்களையும் பெற்றிருக்கிற அவள் இன்னொரு மனிதனை மணந்துகொள்ளவும் இச்சைப் படுவாளா, இந்த விளம்பரம் உண்மையாக இருக்குமா அல்லது ஏதாவது சூதாக இருக்குமா' என்பதையெல்லாம் எண்ணிப்பார்க்க முடியவில்லை. உடனே அந்த சுயம்வரத்துக்குப் போய்ச் சேர்ந்துவிட வேண்டுமென்று துடித்தான். ஆனல் சுயம்வரமோ நாளைக்குப் பத்து மணிக்குள். காசிக்கும் குண்டினிபுரத்துக்கும் வெகுதூரம். வெகு வேகமாகச்செல்லும்குதிரைகள்பூட்டிய ரதத்தில் போனலும் குறைந்தது மூன்று நாளாகும், போய்ச்சேர. அப்படியிருக்க நாளைக்கே எப்படிப்போய்ச் சேரமுடியும்? உடனே தன்னுடைய வெகு சாமர்த்தியமுள்ள

தேர்ப்பாகன் வாகுகனுடைய நினைவு வந்தது. “சரி, வாகுகன் இருக்கிறான். அவன் பார்த்து ஓட்டினால் நம்முடைய ரதம் நாளைக்கே குண்டினிபுரம் போய்ச்சேரலாம்' என்று தேர்ப்பாகனை அழைத்துவரச் சொன்னான். வாகுகன் வந்தான். “குண்டினிபுரத்துக்கு வெகு அவசரமாகப் போகவேண்டியிருக்கிறது. நாளை காலை பத்துமணிக்குள் அங்கே போய்ச் சேரவேண்டும். நீ மனம் வைத்து ஓட்டினால் அதற்குள் போயவிடலாம் என்று எண்ணுகி றேன். செய்வாயா?” என்றான் காசிராஜன். “ஆகட்டும், அதற்கென்ன? தங்களுக்கு அவ சரம் என்றால் இன்றைக்கு ராத்திரியேகூட அங்கேபோய்ச் சேரும்படிச் செய்கிறேன். ஆனால் குண்டினிபுரத்துக்குப் போக அப்படி யென்ன அவசரம்?” என்று கேட்டான் வாகுகன். “குண்டினிபுரத்தில் நாளை காலை பத்துமணிக்கு தமயந்தி இரண்டாம் சுயம்வரம் நடத்துகிறாளாம். அவளுடைய கணவன் அவ ளைப் பாதிராத்திரியில் காட்டில் தனியே விட்டு விட்டு எங்கேயோ ஓடிப்போனான். அவன் போய் பன்னிரெண்டு வருஷம் ஆய்விட்டது. அவன் என்னவானானோ தெரியவில்லை. தமயந் திக்கு மறுமணம் செய்துகொள்ள வேணு மென்ற ஆசை வந்திருக்கிறது. சுயம்வரம் நாட்டியிருக்கிறாள். நமக்கு இந்த சேதி முன்னா லேயே தெரியாமற் போய் விட்டது. நமக்குத் தெரியாமற் போகக்கூடாது என்று எண்ணித்

தானே என்னவோ இன்றைக்கு இங்கே தனியாக ஒரு தூதனை அனுப்பிப் பறைசாற்றியிருக்கிறாள்'' என்றான் ரிதுபன்னன்.

அதைக்கேட்ட வாகுகன் அதிசயப்பட்டுச் சொல்லுகிறான் : பாட்டைச் சொல்லுகிறேன்: (கதையைச் சொல்லி முடிக்காமல் வளர்த்துகிறேனே என்று ஆத்திரப்படாமல்) கேளுங்கள் :

குறையாத கற்பினாள்
கொண்டானுக் கல்லால்
இறவாத ஏந்திழையாள்,
இன்று—பறிபிறி
நெல்லிற் பருவரால்
ஓடும் நெடுநாடா!
சொல்லப் படுமோஇச் சொல்!

"என்ன மகாராஜா, தமயந்தி குற்றமில்லாத கற்பிற் சிறந்த உத்தமியாச்சே. அவள் இன்னொருவனைக் கல்யாணம் செய்துகொள்ள விரும்புகிறாள் என்று சொல்வது தகுமா? எனக்கு என்னவோ இது நம்பத் தகாததாகத் தான் தோன்றுகிறது" என்று வாகுகன் சொல்லுகிறான். (இந்தப் பாட்டில் ஓர் உபமான அழகு இருக்கிறது பாருங்கள். காசி ராஜனைப் பார்த்து, 'பறியைக் கிழித்துக் கொண்டு பருத்த வரால் மீன்கள் நெல் வயலிற் பாய்ந்து ஓடுகின்ற வளப்பமுள்ள நாட்டை அரசாளும் மன்னனே!' என்று அழைக்கிறான். 'கொழுத்துப் பழுத்துத் திமிர்கொண்ட

வரால் மீன் பறியைக் கிழித்துக்கொண்டு நெல் வயலைக் குழப்பி குழப்பி விடுவதைப்போல நீங்களும் வெறும் பருத்துக் கொழுத்து ரத்தத் திமிர்கொண்டு தமயந்தியின் மேல்கொண்ட ஆசையால் நியாயங்களைக் குழப்புகிறீர்கள்' என்று சொல்வது போல இருக்கிறது.)

இதைக்கேட்ட ரிதுபன்னன் வாகுகனைப் பார்த்து, "அட போடா பைத்தியக்காரா! உனக்கென்ன தெரியும்? போன சுயம்வரத்தில் நடந்த சமாசாரம்? தமயந்தி எனக்கே மாலையிட எண்ணித்தான் என்னையே பார்த்துக் கொண்டு சுயம்வர மண்டபத்தில் நடந்து வந்தாள். கிட்ட வந்தவுடன் நாணத்தால் தலையைக் குனிந்துகொண்டு சரியாக ஆசாமியைப் பார்க்காமல் என் கழுத்திற்போட எண்ணிய மாலையைத் தவறிப்போய் நளன் கழுத்திற் போட்டுவிட்டாள். சரி, என்னமோ அப்போது அப்படி விழுந்துவிட்டது. இப்போது அவன் எங்கேயோ போய்த் தொலைந்தானும். அதைக் காரணமாக வைத்துக்கொண்டு இப்போதாவது எனக்கே மாலையிடலாம் என்று எண்ணித்தான் அவசரமாக இங்கே ஒரு தனித்தூதனை அனுப்பி விளம்பரத்தை எனக்குத் தெரியப்படுத்தி யிருக்கிறாள்" என்ற பொருள்பட,

என்மேல் எறிகின்ற
மாலை எழில்நளன்நன்
முன்னே விழுந்ததுகாண்

முன்னாளில் - அன்னதற்குக்
காரணந்தான் ஈதன்றோ
என்றான் கடாம்சொறியும்
வாரணந்தான் அன்னான் மறித்து.

என்று பாடுகின்றார் புகழேந்தி. காசிராஜனை இந்தப்பாட்டில் "கடாம்சொறியும் வாரணம் தான் அன்னான் என்று உவமிக்கிறார். அதாவது 'மதம்பிடித்த யானையைப் போன்றவன்' என்கிறார். அவன் பேசுகிற மாதிரியும் மதம் பிடித்தது போலத்தானே இருக்கிறது!

காசிராஜன் குண்டினிபுரத்துக்குப் பயணமானான். வாகுகன் தன்னுடைய அபூர்வ சக்தியினால் குதிரைகளை ஓட்டுகின்றான். 'மேலாடை வீழ்ந்தது, எடு என்றான்; அவ்வளவில் நாலாறு காதம் நடந்ததே' என்று சொல்லும் படியாக வெகு வேகமாக ஓட்டி, விடிகிறதற்கு முன்னால் குண்டினிபுரத்தைச் சேர்ந்தார்கள். வீமராஜன் அரண்மனையின் ஆசார வாசலுக்கு முன்னால் ரதம் நின்றது. சுயம்வர மண்டபத்தையும், அதற்கு வரக்கூடிய ராஜாக்களின் காட்சிகளையும், வேடிக்கை பார்க்க வரும் திரள் திரளான ஜனங்களின் கூட்டத்தையும், மண்டபத்தில் தமயந்தி தனக்கு மாலையிடப் போவதையும், அதனால் தான் அடையப்போகிற ஆனந்தத்தையும் நினைத்து நினைத்து மனப்பால் குடித்துக்கொண்டே 'எப்போது போய்ச் சேருவோம்' என்று துடித்த வண்ணமாய் வந்த காசிராஜன், பார்த்தான் ஆசார வாசலையும்

ராஜவீதியையும். ராஜாக்களா, கூட்டமா, வாத்திய முழக்கமா, ஜனங்களின் பரபரப்பா - சுயம்வர சின்னங்கள் ஒன்றையாவது காணோம். ஒரு மாவிலை மகரதோரணங்கூட இல்லை. திடுக்கிட்டான் காசிராஜன். மோசம் போனோம் என்பதைக் கண்டுகொண்டான். சரி வந்தாச்சு. என்ன செய்வது?

ஓர் அரசன் ரதம் வந்து ஆசாரவாசலில் நின்றதைக்கண்ட காவலர்கள், வெகு அவசரமாக அந்தச் சேதியை அரண்மனைக்குள் அனுப்பினார்கள்.

நம் வீட்டுக்கும் யாராவது நம்மைப் பார்க்க வந்தால் அப்படி வருகிறவர்களுடைய அந்தஸ்துக்குத் தகுந்தபடி அவர்கள் வந்திருக்கிற சேதி நாமிருக்கிற இடத்துக்கு வந்து சேரும். யாராவது ஓர் ஏழை நம்மிடம் ஓர் உதவியை நாட நம் வாசலுக்கு வந்தால், அங்கே முன்னாலிருக்கிறவர்கள் அவன் வந்து நிற்பதைக்கூட உடனே கவனிக்கமாட்டார்கள். அப்படி கவனித்தாலும் அப்படி ஒருவன் வந்து காத்திருப்பதை உடனே நமக்குச்சொல்ல வரமாட்டார்கள். சில சமயங்களில் அவர்களே கூட அவனுக்குப் பதில் சொல்லி, 'ஐயா உள்ளே ரொம்ப வேலையாக இருக்கிறார்கள்; (அல்லது அலுத்துப் படுத்திருக்கிறார்கள்) அவர்களை இப்போது பார்க்கமுடியாது' என்று அனுப்பிவிட்டாலும் விடுவார்கள். அவனைக் காட்டிலும் கொஞ்சம் உயர்ந்த ஒருவன் வந்தால்

சாவதானமாக வந்து 'யாரோ வந்திருக்கிறார்' என்பார்கள். யாராவது ஒரு மாட்டு வண்டியிலாவது வந்து நம் வீட்டுக்கு முன்னால் இறங்கி வந்தால் அந்த சமாசாரம் கொஞ்சம் வேகமாக நமக்கு அறிவிக்கப்படும். ஓர் அழகான குதிரை வண்டிவந்து வாசலுக்கு நேராக நின்றுவிட்டால், இன்னும் வேகமாக நமக்குத் தெரியப்படுத்தப்படும். தப்பித்தவறி ஒரு மோட்டார் வண்டி வீட்டுக்குமுன்னால் வந்து நின்றுவிட்டால், அதிலிருக்கிறவர்கள் நம்மைப் பார்க்க வராதவர்களாக இருந்தாலும் சரி, நம்ம வீட்டுக்குஞ்சு குழந்தைகள்கூட ஒரே கும்பலாக ஓடி வந்து 'ஐயா! அப்பா! அண்ணா! யாரோ மோட்டாரில் வந்திருக்கிறார்கள். நம்ம வீட்டுக்கு - மோட்டோரில். வாங்கோ வந்து பாருங்கோ' என்று வெகு அவசரமாக வந்து நம்மை ஏவுவார்கள். அல்லவா?........

அப்படிப்போல காசிராஜன் வந்த சேதி வெகு துரிதமாக வீமராஜனுக்கு அறிவிக்கப்பட்டது. இப்படி ஒரு சம்பவம் நடக்கலாம் என்பதை வெகு ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்த தமயந்தி, ஒரு ராஜரதம் வந்திருப்பதை அறிந்து 'வந்துவிட்டார் ஆசாமி. நம்முடைய விமோசன காலம் விடிந்துவிட்டது' என்று மகிழ்ந்தாள். ஏனென்றால் தன்னுடைய நாயகன் அல்லாமல் வேறு யாராயிருந்தாலும் இவ்வளவு சீக்கிரம் காசியிலிருந்து

குண்டினிபுரத்துக்குத் தேரோட்டிவிட முடியா தென்பது அவளுக்குத் தெரியும்.

காசிராஜன் வந்திருப்பதாகக் கேள்விப் பட்டு, வீமராஜன் வெகு விரைவாக வந்து வர வேற்ருர். "வரவேணும், மன்னர் பெரு மானே! தங்கள் வருகையால் நான் மிகவும் பெருமைகொள்ளத் தகுந்தவன் ஆவேன். ஏது இவ்வளவு தூரம்? அடியேனுல் ஆக வேண்டிய அவசர காரியம் ஏதேனுமுண்டா?" என்று கேட்டான்.

வீமராஜன் காசிராஜனுகிய ரிதுபன்னனை வரவேற்றுக் கேட்கிருன் :

கன்னி நறுந்தேறல்
    மாந்திக் கமலத்தின்
மன்னித் துயின்ற
    வரிவண்டு—பின்னேயும்போய்
நெய்தற்கு அவாவும்
    நெடுநாடா! நீஎன்பால்
எய்தற்கு அவாவியவாறு என்?

"புதிதாக மலர்ந்த தாமரை மலரில் அப்போது தான் ஊறிய தேனை வயிருர உண்டு பசி தீர்ந்து அந்த தாமரைக்குள்ளேயே சுகமாக தூங்கிக் கொண்டிருந்த வண்டானது பசியாறிய பின்னே யும்போய் ஆம்பல் முதலான இதர மலர்களே யும் மொய்க்கின்ற காட்சிகள் நிறைந்த பெரிய நாட்டை அரசாளும் மன்னவனே! நீங்கள் என்னிடத்துக்கு வந்த காரியம் என்ன?" என் ருன். இந்தப் பாட்டில் உள்ள உபமானத்தி

ஞல் கவிஞர் ஓர் அழகான புத்திமதியைக் காசி ராஜனுக்குச் சொல்லுவதுபோல உலகத்துக் குச் சொல்லுகிறூர். பாட்டை மேலாகப் பார்த் தால் அது தெரியாது. கவனித்துப் பார்க்க வேண்டும். பசியை ஆற்றிக்கொள்ள தேனைத் தேடிவந்த வண்டு ஒரு தாமரை மலரில் புதுத் தேனை மாந்தி (மாந்தி என்றூல் வயிறூர உண்டு) பசியாறி உறங்கப்போன வண்டு வெறும் சபல புத்தியினுல் பின்னையும்போய் வேறு புஷ்பங் களை மொய்த்துக்கொண்டு அலேவதைப்போல, உனக்கென்று தேடி மணந்துகொண்ட கன்னி கையான ஒரு மனைவியுடன் இல்லற சுகங்களை அனுபவித்து வீட்டோடு இருந்துகொண்டிருக் கிற நீ, சபல புத்தியினுல் பின்னையும் இன்ஞெரு வனுடைய மனைவியான தமயந்திக்கு ஆசைப் பட்டு விட்டாயே, தகுமா? மேலும் நீ மணந்து கொண்ட உன் மனைவியோ கன்னிகையான அப்போதலர்ந்த புதுத் தாமரையின் தேன். அதை அனுபவித்துத் திருப்தியடைந்து இருக்க வேண்டிய நீ, ஏற்கனவே நேற்றிரவில் அலர்ந்து இப்போது வாடிப்போனதாக இருக் கிற ஆம்பல் மலரைப்போல் கன்னிகை அல் லாத தமயந்தியின்மேல் ஆசை கொண்டது சரியா என்றும் கேட்பதுபோல் 'கன்னி நறுந் தேரல் மாந்திக் கமலத்தில் மன்னித்துயின்ற வரிவண்டு பின்னையும்போய் நெய்தற்கு அவா வும்' என்ற சொல்லடுக்கில் 'கன்னி' 'கமலம்' 'மாந்தி', 'துயின்ற' 'பின்னையும் போய்'

'அவர்வும்' என்ற பதங்களை வேண்டுமென்றே கவிஞர் பிரயோகித்திருக்கிற அழகையும் நீங்கள் அறிந்து அனுபவிக்கவேண்டும். இந்த அர்த்தத்தைக் காசிராஜன் கண்டுகொண்டிருக்க மாட்டான் என்றாலும், கவிஞர் இதை நமக்காக எழுதியிருக்கிறார். நாம் கண்டுகொள்ள வேண்டும். அப்படிக்கேட்ட வீமராஜனுக்கு என்னபதில் சொல்லுவதென்று தெரியாமல் காசிராஜன் தட்டுக்கெட்டுத் தடுமாறி, கடைசியாக "ஒன்றுமில்லை, வேறொரு காரியமாக இந்தப் பக்கத்துக்கு வந்தேன். அப்படியே உங்களையும் பார்த்துவிட்டுப் போகலாம் என்று சும்மாத்தான் வந்தேன்" என்றான் ரிதுபன்னன்.

மற்ற பேச்சுகளெல்லாம் முடிந்து, காசி ராஜனை அரண்மனையின் ஒரே பாகத்தில் தங்கச் செய்து உபசரித்தான். ஆகாரத்தைப் பற்றிய பேச்சு வந்தபோது காசிராஜன், "என்னுடைய தேர்ப்பாகன் தேவாமிர்தம் போல் சமைக்கக் கூடிய சமர்த்தன். பாக சாஸ்திரத்தில் அவனுக்கு இணையானவனைப் பார்க்கமுடியாது. அவனே சமையல் செய்யட்டும்; நாமெல்லாரும் விருந்துண்போம்" என்றான் காசிராஜன்.

அப்படியே வாகுகன் சமைக்கத் தொடங்கினான். தமயந்தியினுடைய சூழ்ச்சியினால், அந்த வாகுகனைத் தான் பார்க்கத் தோதாக இருக்கும்படி ஓர் இடத்தில் சமைக்க இட

வசதி செய்யப்பட்டது. ஒரு ஜன்னலின் வழியாகத், தான் இருப்பதைப் பிறர் அறியாத படி தமயந்தி அந்த வாகுகனைப் பார்த்தாள். தன்னுடைய காந்தனை நளமகாராஜனுடைய லாவண்யமான ரூபத்துக்கும் இந்தக் குஷ்ட ரோகியைப் போன்ற மனிதனுடைய குட்டை யான ரூபத்துக்கும் கொஞ்சங்கூட சம்பந்த மில்லாமல் இருந்தது. தன் நாயகன்தான் அந்த மாறு வேடத்தில் இருக்கிறார் என்பதை எப்படி அறிவது? அதற்கு ஒரு தந்திரம் செய் தாள் தமயந்தி. தன்னுடைய குழந்தைகள் இருவரையும் அந்த வாகுகன் சமைக்கிற இடத் துக்கு அனுப்பினால், அந்தக் குழந்தைகளைப் பார்த்தவுடன், அந்த சமையற்காரன் நளனாக இருந்தால், பன்னிரண்டு வருடங்களாகப் பிரிந்து போயிருந்த தன் மகனையும் மகளையும் கண்டு சும்மா இருந்துவிட முடியாது. புத்திர வாஞ்சை அவன் மாறு வேஷத்தையும் மறக்கச் செய்துவிடும்; அப்போது கண்டு கொள்ளலாம் என்று தீர்மானித்துத் தன் தோழிப் பெண் ஒருத்திக்கு இதைச் சொல்லித் தன் மக்களை அந்த சமையற்காரனுக்கு முன்னால் அனுப்பி னாள். கண்டான் குழந்தைகளை வாகுகன்.

மக்களைமுன் காணா
    மனம்நடுங்கா வெய்துயிராப்
புக்கெடுத்து வீரப்
    புயத்தணையா—‘மக்காள் நீர்
என்மக்கள் போல்கின்றீர்

யார்மக்கள் ?' என்றுரைத்தான்
வன்மக் களியானை மன்.

மக்களைக் கண்டானே இல்லையோ, மனம் படபடத்து மூச்சு வேகப்பட்டு ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து, இரண்டு குழந்தைகளையும் சேர்த்து வாரியெடுத்துத் தன் மார்போடு அணைத்துக்கொண்டு "குழந்தைகளே!-வெகு அவலட்சணமான ஒரு மனிதன், சமைக்கிற வேலை செய்கிற ஒருவன், அழுக்கான கைகளால் தொட்டு அணைத்துக் கொண்டு விட்டானே என்று கோபித்துக் கொள்ள வேண்டாம்—உங்களைப் பார்த்தால் நீங்கள் என்னுடைய குழந்தைகளைப் போல் இருக்கிறீர்கள். அந்த நினைப்பினுல் வாரி யணைத்துக் கொண்டேன். நீங்கள் யாருடைய குழந்தைகள் ?" என்றான்.

அன்பர்களே, நீங்கள் வெகு நேரமாக ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிற இளைஞர்கள் இவர்கள்தான். இந்த இரண்டு குழந்தைகளும்-இந்த இரண்டு வாலிபர்களும் அந்த வாகுகனுக்குச் சொல்லுகின்ற பதில் மொழியைப் பாருங்கள். அதைச் சொல்லத் தான் இவ்வளவு நேரமாக நான் சொல்லி வந்த இத்தனை பீடிகையும். தேசாபிமானம் என்றும் சுதந்திரம் என்றும், சுயராஜ்யம் என்றும், விடுதலை வேண்டும் என்றும், அடிமைத்தனம் ஒழிய வேண்டுமென்றும் இப்போது நாம் என்னென்னவோ சொல்லுகின்றோமே, அந்தப்

பேச்சுகளின் சாரத்தை யெல்லாம் ஒரே ஒரு வாக்கியத்தில் உள்ளடக்கி இந்த இளைஞர்கள் சொல்லுகின்றார்கள், 'நீங்கள் யாருடைய மக்கள்' என்று கேட்ட அந்த சமையற்காரனுக்கு:

மன்னன் நிடதத்தார்
வாழ்வேந்தன் மக்கள்யாம்
அன்னை தனைக் கான்விட்டு
அவனேக—இந்நகர்க்கே
வாழ்கின்றோம் எங்கள்
வளநாடு மற்றொருவன்
ஆள்கின்றான்' என்றார் அழுது.

"நிடத தேசத்தை வெற்றிப் பிரதாபத்துடன் பகைவர்கள் பயப்படும் ஆயுத பலத்துடன் பரிபாலித்து சுகமாக வாழ்ந்துகொண்டிருந்த நள மகாராஜனுடைய மக்கள் நாங்கள். எங்கள் தந்தை, எங்கள் தாயாரைக் காட்டிலே விட்டு விட்டு எங்கேயோ போய்விட்டார். நாங்கள் பாட்டன் வீடாகிய இந்த நகரத்தில் வாழ்ந்து வருகிறோம். எங்கள்............எங்களுடைய............ வளம் பொருந்திய நாட்டை............அந்த நாட்டுக்கு உரிமை யில்லாத வேறொருவன் ஆள்கின்றான்" என்று அழுதார்கள். இந்தப் பாட்டில் பதங்கள் அமைந்திருக்கிற அழகைப் பாருங்கள். முதலடியில் 'மன்னன் நிடதத்தார் வாள் வேந்தன் மக்கள் யாம்' என்று வெகு பெருமையுடன் ஆரம்பிக்கிறார்கள். தங்கள் தகப்பன் தாயாரைக் காட்டில் விட்டு விட்டு ஓடிப் போனதை விரித்துச் சொல்ல வெட்கப்படுகிற

வர்கள்போல இலேசாக அதை 'அன்னை தனைக் கான்விட்டு அவனேக' என்றுமட்டும் சொல்லி விட்டு, 'இன்னகர்க்கே வாழ்கின்ருேம்' என்பதையும் அனுயாசமாகச் சொல்லிவிட்டு, 'எங்கள் வளநாடு மற்ருெருவன் ஆள்கின்ருன் என்ருர் அழுது' என்பதை மட்டும் எவ்வளவு துக்கத்தோடு சொல்லுகிருர்கள் பாருங்கள். 'என்ருர் அழுது'. இந்த 'அழுது' என்ற பதத்தைப் புலவர் எவ்வளவு அர்த்த புஷ்டி யோடு அங்கே அமைத்திருக்கிருர் என்பதை நீங்கள் அனுபவிக்கவேண்டும். தங்கள் தந்தை ஆண்ட நாட்டை, தங்களுக்கு உரிமையான (எங்கள் வளநாடு) அரசை, அந்த நாட்டை ஆள்வதற்கு எவ்விதமான உரிமையும் இல்லாத அன்னியன் ஒருவன் ஆளுவதை எவ்வளவு அருவருத்து இந்த இளைஞர்கள் அழுகின்ருர் கள் பாருங்கள். இந்த அழுகையும் அருவருப் பும் நமக்கெல்லாம் இருக்கவேண்டாமா?

இப்படிச் சொல்லி அந்த இளைஞர்கள் அழுவதைக்கண்ட அந்த வாகுகன் அந்தச் சிறுவர்களைப் பரிசோதிக்க எண்ணி,

உங்கள் அரசுஒருவன்
ஆளநீர் ஓடிப்போந்து
இங்கண் உறைதல்
இழுக்கன்ருே?—செங்கை
வளவரசே' என்றுரைத்தான்
மாதவத்தாற் பெற்ற
இளவரசை நோக்கி எடுத்து.

"உங்கள் ராஜ்யத்தை வேறொருவன் ஆள விட்டுவிட்டு உங்கள் தந்தை ஓடிப்போக இங்கே நீங்கள் இப்படி இருந்துகொண்டிருப்பது இழிவான - மானமற்ற - காரியமல்லவா? ஏ, இளவரசனே!" என்றான் வாகுகன். உடனே பையனுக்கு ரோஸம் வந்துவிட்டது. ராஜ்யத்தை வேறொருவனுக்கு விட்டுவிட்டு இன்னொருவர் வீட்டில் சாப்பிட்டுக்கொண்டிருப்பது கேவலமான காரியமல்லவா என்று கேட்டுவிட்டானே இந்த சமையற்காரன்! அதைப் பொறுப்பானா வீர வம்சத்தில் பிறந்த அந்த இளைஞன்? கோபம் வந்துவிட்டது. தன்னைக் குறித்துச் சொன்னதைக் காட்டிலும் தன்னுடைய தந்தை, வேறொருவனுக்கு நாட்டை விட்டுவிட்டு ஓடிவிட்டதாக அந்த சமையற்காரன் எண்ணிவிட்டதாக நினைத்துப் பையன் சீறி விழுகிறான். "அடே சமையற்காரப் பயலே! என் தந்தை நாட்டை விட்டு விட்டு ஓடிவிட்டவனென்றும் நாங்கள் இங்கே மானமற்று வாழ்ந்து வருகிறோம் என்றும் சொல்லிவிட்டாயே. சமையற்காரனுக்குள்ள உன் அற்ப புத்தியைக் காட்டிவிட்டாயே. இந்த வார்த்தையை நினைக்கவும் சொல்லவும் அரசர்கள்கூட அஞ்சுவார்கள். நீ கூசாமல் சொல்லிவிட்டாய். உன்னைச் சொல்லுவதிற் பயனில்லை. அற்பத்தொழில் செய்கிற உனக்கு அற்ப புத்திதான் இருக்கும். பெரிய புத்தி எப்படி வரும்? என்னுடைய தந்தை பகைவர்களுக்குப் பயந்து ஓடிப்போய் விட்ட

வர் அல்ல. சத்தியத்துக்குக் கட்டுப்பட்டு ராஜ்யத்தை விட்டுத் தாமாக வெளியேறினரேயல்லாமல் பயந்து ஓடிப்போனவர் அல்ல."

நெஞ்சால் இம்மாற்றம்
நினைந்து உரைக்க நீயல்லாது
அஞ்சாரோ மன்னர்?
அடும்மடையா!—எஞ்சாத
தீமையே கொண்ட
சிறுதொழிலாய் எங்கோமான்
வாய்மையே கண்டாய் வலி.

என்கிறுன் இளைஞன். தன்னுடைய மகனுடைய வீரம் நிறைந்த இந்த மொழிகளைக்கேட்ட சமையற்காரனு யிருக்கும் நளன் மனதுக்குள்ளேயே மகிழ்ந்து பெருமிதமடைந்து,

'மன்னர் பெருமை
மடையர் அறிவரோ
உன்னை அறியாது
உரைசெய்த—என்னை
முனிந்தருளல்' என்று
முடிசாய்த்து நின்ருன்
கனிந்துருகி நீர்வாரக் கண்.


"அப்பா! கோபித்துக் கொள்ளாதே. நான் தெரியாமற் சொல்லிவிட்டேன். மன்னர்களுடைய பெருமையை சமையற்காரனுகிய நான் அறிவேனு? மன்னித்து விடு" என்று தலை வணங்கிக் கண்ணீர்விட்டுச் சொன்னுன் நளன்.

இனி கதையை முடித்து விடுவோம். அதன்

பிறகு அந்த சமையற்காரன்தான் நளன் என்பது வெளியாகிறது. சமையற்காரனும் தன் பழைய நளன் வடிவத்தோடு விளங்குகின்றான். மாமனார் மருமகனைக்கண்டு அடைந்த மகிழ்ச்சியைச் சொல்லவேண்டுமா? நாயகனை அடைந்துவிட்ட தமயந்திக்கு உண்டான ஆனந்தத்தை அளவிடவும் முடியுமா? குழந்தைகளின் குதூகலத்தை வர்ணிக்க வார்த்தையும் உண்டா! காசிராஜன் மிகவும் வருத்தப்பட்டு மன்னிப்புக் கேட்டுக்கொண்டு காசிக்குப் போய்விடுகிறான். நளனைப் பிடித்த சனியனோ கெட்ட காலமோ நீங்கிவிட்டது. நளன் தன்னுடைய ராஜ்யத்தை அடைந்து, அந்த அன்னியனுடைய ஆட்சியிலிருந்து மீட்டு, செங்கோல் செலுத்தி மனைவி மக்களுடன் சுகமாக வாழ்ந்தான்.

அந்த இளைஞர்கள், தங்களுடைய நாட்டை அன்னியன் ஆள்வதைக் குறித்து எவ்வளவு துக்கப்பட்டார்கள் என்பதையும் அவர்கள் தங்களுடைய தந்தையின் கண்ணியத்தை எவ்வளவு பெருமையோடு காப்பாற்றினார்கள் என்பதையும் இளைஞர்களாகிய நீங்கள் மிகவும் பாராட்டுவீர்கள் என்று நம்புகிறேன்.


காதல்



காதல் காதல் காதல் என்று
காமத் துடிப்பையே காதலாய்க் கருதி,
கண்டதை யெல்லாம் காதலாய்ப் பேசி
எடுத்ததற் கெல்லாம் காதலென் றெழுதி
பார்த்ததை எல்லாம் காதலாய்ப் பாடி,
கொச்சைக ளோடும் காதலைக் குழப்பும்
வார்த்தைகள் முற்றும் வண்ட வழக்கம்
காதல் என்பதைக் கண்டவர் அரிது
காதல் என்பது கடவுள் தன்மை
காலம் முழுவதும் கடவுளைக் கருதும்
பக்தியைப் போன்றது காதலின் பண்பு
காதலுக் குள்ளே காமம் இருப்பினும்
காமம் என்பதில் காதலே இல்லை
காமம் என்பது தேகம் கலத்தல்
அறிவு, உணர்ச்சி, ஆன்மாவி னோடும்
கலந்து போவதே காதல் எனப்படும்
காதலின் குணத்தைச் சொல்வது கடினம்

அனுபவம் ஒன்றே அறியக் கூடும்
உடலைப் பற்றிய உணர்ச்சியே அல்ல
அழகை மட்டும் ஆசிப்ப தல்ல
நிறத்தைக் கருதி நிற்பதும் அல்ல
அறிவை மெச்சி அடைவதும் அல்ல
இளமையை எண்ணி இருப்பதும் இல்லை
புகழோ இகழோ பொருட் படுத்தாது
இன்பமோ துன்பமோ இணைபிரியாது
அழுகின உடலையும் அணைத்து நிற்கும்
உலக சுகங்களை உதறித் தள்ளும்
செல்வமோ வறுமையோ சேர்ந்தே வாழும்
குற்றம் நேரினும் குறை சொல்லாது
ஒட்டி யிருந்து உயிரையும் உதவும்
பற்றிய ஒன்றில் பற்று விடாது
தன்னை வெறுக்கினும் தான் வெறுக்காது
விரும்பிய பின்னர் விலக எண்ணாது
ஊனையும் உணர்வையும் உயிரையும் தாண்டி
அப்பால் தொடரும் அன்பே காதல்
காதல் முறிந்தால் சாதலும் கருதும்
காதலைக் கண்டவர் கடவுளைக் காணலாம்

காங்கிரஸும் காந்தியடிகளும்



காங்கிரஸ் என்ற பெயரைச் சொன்னவுடன் அந்த சபையை ஆரம்பித்த ஸ்ரீ. ஏ. ஓ. ஹியூம், சர் வில்லியம் வெடர்பர்ன், தாதாபாய் நவுரோஜி முதலியவர்களுடைய உயர்ந்த சேவைகள் நமக்கு முன்னால் ஓடிவந்து உருவாகி நிற்கின்றன. அந்த மகா சங்கத்துக்குத் தலைமை வகித்து வந்திருக்கிற ஸ்ரீ உமேச சந்திர பானர்ஜி முதற்கொண்டு ஸ்ரீ ஜவஹர்லால் நேரு வரையிலுமுள்ள மிகப்பெரிய அறிவாளிகளின் அன்பொழுக்கமும், இன்னும் இந்த காங்கிரஸின் நிர்வாகத்திற்கும் வளர்ச்சிக்கும் வெவ்வேறு வழிகளில் வேலை செய்திருக்கிற எண்ணிறந்தவர்களுடைய இனிய நினைவுகளும் இந்த நிமிஷத்திலும்கூட நம்முடைய மனக்கண்ணுக்கு முன்னால் மலர்கின்றன. அவர்கள் அனைவரும் உலகத்திலுள்ள எந்த நாட்டிலும், எந்த நிறத்திலும், எந்த

மதத்திலும், எந்தக் காலத்திலும் அன்பிலும் அறவிலும் ஆற்றலிலும் மிகவும் உயர்ந்த மேதைகள் என்று எவரும் புகழத் தகுந்தவர்களுடைய கூட்டத்தைச் சேர்ந்தவர்கள். ஆதலால் காங்கிரஸ் மகாசபையானது இந்திய நாட்டின் பல வகுப்பிலும் வந்த உயர்ந்த தியாகிகளால் கட்டப்பட்ட அறமனையாகும். அதற்கு ஒரு பழுதும் வராமல் பார்த்துக் கொள்வது "இந்தியன்" என்கின்ற ஒவ்வொருவருக்கும் கடமையாகும்.

இந்த நாட்டில் ஹிந்துக்களுக்கென்றும், மகம்மதியர்களுக்கென்றும், சீக்கியர்களுக்கென்றும், கிறிஸ்தவர்களுக்கென்றும், ஆங்கிலோ - இந்தியர்களுக்கென்றும், பிராம்மணரல்லாதாருக்கென்றும், பிராம்மணர்களுக்கென்றும் எத்தனையோ சபைகள் உழைத்து வருகின்றன. ஒவ்வொரு கட்சியும் அதனதன் பக்குவத்துக்கேற்றபடி ஒவ்வோரளவு நன்மையையே நாடுகின்றது. இந்திய மக்கள் அனைவருக்கும் பொதுவான நன்மையை நாடி நிற்கின்ற சங்கம் காங்கிரஸ் மகாசபை ஒன்று தான். மற்றக்கட்சிகள் ஒவ்வொன்றும் இந்திய மக்களின் ஒவ்வொரு பகுதியையே குறிக்கும். ஆனல் காங்கிரஸ் இந்தியாவிலுள்ள எல்லாரையும் குறிக்கும். மற்றக் கட்சிகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு பின்னம். காங்கிரஸ் முழு எண். முழு எண் பின்னங்களைக் காட்டிலும் எப்பொழுதும் பெரியது.

காங்கிரசினுல் ஏற்பட்ட பலாபலன்களைப்பற்றி இந்த ஒரு சிறு பிரசங்கத்தில் பேசிவிட முடியாது. தர்க்கங்களுக்கு இடந்தரக் கூடியவற்றையெல்லாம் விட்டுவிட்டு எவரும் மறுக்க முடியாத ஒன்றைமட்டும் சொல்லுகின்றேன்; எல்லா கட்சிகளிலும் நல்லவர்கள் இருக்கின்றூர்கள். ஆனல் நாட்டின் பொதுநலத்தைக் கோரி தங்களுக்குள்ள எல்லாவற்றையும் அள்ளிக்கொடுத்த வள்ளல்களையும், பணமில்லாவிட்டாலும் உடலையும் உயிரையுமாவது அதற்கென்று ஒப்படைத்த உத்தமர்களையும் காங்கிரஸ் ஒன்றிலேதான் காணலாம். அரவிந்தோ, லியாக்கத் ஹுசேன், அப்துல் ரஸுல், ஷெர்வாணி, கணேஷ் சங்கர், சென்குப்தா, பீகம் அலி சகோதரர்களின் தாயார், கோகலே, திலகர், லஜபதி, மோதிலால், சித்தரஞ்சன், படேல், அஜ்மால்கான், அன்சாரி, தயாப்ஜி, மகம்மத் அலி, காந்தி, மாளவ்யா, பஜாஜ், ராஜேந்திரர், ராஜாஜி, கபார்கான் என்ற பெயர்களைக் காங்கிரஸ் கூட்டத்தில் தான் கேட்கமுடியும். ஒரு மனிதனையோ அல்லது ஒரு கூட்டத்தையோ அவர்களுடைய பெருமையை அளப்பதற்கு இந்த உலகத்தில் "தியாகம்" என்ற ஒரே ஒரு தராசுதான் உண்டு. அந்த "தியாகம்" காங்கிரசுக்கு உள்ள அளவு மற்றக் கட்சிகளுக்கு இல்லையென்பதை எவரும் மறுக்க முடியாது. உண்மையான தியாகத்தினுல் என்ன பலன் உண்டாகுமென்று உலகம் ஒப்புக்கொள்

ளுமோ அந்த பலன்தான் காங்கிரஸினுல் இந்த நாட்டிற்கு உண்டாகும்.

"காங்கிரஸ் என்ன சாதித்துவிட்டது?" என்பதைப்போன்ற கருத்தில்லாக் கேள்விகள் அடிக்கடி காதிற் படுகின்றன. காங்கிரஸ் என்ன செய்து விட்டது என்று கேட்பது, வயதுவந்த ஒரு மகன் தன்னைப்பெற்று வளர்த்து ஆளாக்கிவிட்ட அன்னையைப் பார்த்து "நீ எனக்கு என்ன சாதித்து விட்டாய்?" என்று கேட்பதையே ஒக்கும். காங்கிரசினுல் இவ்விந்திய நாட்டிற்கு உண்டாயிருக்கிற மதிப்பிடமுடியாத பெருமை இன்னது என்பதை உண்மை அறியும்; உலகம் அறியும்; காங்கிரசை இகழ்ந்து பேசுகின்றவர்களுடைய உள்ளமும் அறியும். காங்கிரசில் குற்றம் நிறைந்த மனிதர்கள் எவ்வளவோ பேர் இருக்கலாம். ஆனுல் காங்கிரஸ் குற்றமற்றது. புயற்காற்றும் பெரு மழையும் அடிக்கின்றபோது சமுத்திரத்தின் மேல் மட்டத்தில் எவ்வளவு கொந்தளிப்பு இருந்தாலும் சமுத்திரம் எப்போதும் கலக்கமுடியாத கம்பீரமுடையது. அதைப் போலவே காங்கிரசும். கங்கையாற்றில் எத்தனை அசுத்தங்கள் கலந்துவிட்டாலும் அதன் நீர் எப்போதும் சுத்தமானது என்பதை ரசாயனப் பரீட்சையும் காட்டும். காங்கிரஸ்காரர்களிடத்திலுள்ள குற்றங் குறைகளைக் கண்டிக்கவும், கூடுமானுல் தண்டிக்கவும் எவருக்கும் உரிமை

உண்டு. ஆனால் காங்கிரசைக் குறைத்துப் பேசுவது குற்றம். காங்கிரசில் சேர்ந்த எவரேனும் செய்கின்ற எதையேனும் மனதில் வைத்துக்கொண்டு காங்கிரசை யாரும் இகழக் கூடாது. காங்கிரசை இகழ்வது இந்திய நாட்டின் சுதந்திர உணர்ச்சியையே இகழ் வதாகும். காங்கிரசை அவமதிப்பது ஒவ் வொரு இந்தியனும் தன்னைத்தானே அவமதித் துக்கொள்வதே ஆகும். நமது நாட்டின் குறிப்பிட்ட ஒரு பாகத்தையோ அல்லது வகுப்பையோமட்டும் குறிக்கக்கூடிய சிறு சிறு கட்சிகளில் எதுவும் காங்கிரசுக்கு இணை யாகவோ எதிராகவோ இருக்கமுடியாது. தமிழ் நாட்டில் காங்கிரசை எதிர்க்கும் கட்சி நாட்டிற்கு என்ன நன்மை செய்திருந்தாலும் அதைக் காங்கிரசுக்கு ஒப்பானதென்றாவது உயர்ந்ததென்றாவது ஒருவரும் ஒப்புக் கொள்ள மாட்டார்கள்.

காங்கிரசின் பொதுவான புகழ் ஒருபுற மிருக்கச் சென்ற பல வருஷங்களாக மகாத்மா காந்தியின் கட்டளையில் காங்கிரஸ், இந்தியா விற்கு மட்டுமல்ல உலகம் முழுதுக்குமே காட்டி யிருக்கும் சன்மார்க்கத்தைச் சரியாக எடுத்துக் காட்ட ஒரு கம்பரோ, காளிதாசரோ, சேக்கி ழாரோ, மாம்பழக் கவியோ, பாரதியோ இருந் தால்தான் முடியும். என்னைப்போன்ற அற்ப சொற்ப மனிதர்கள் அதை அளந்துகாட்ட முடியாது.

புளுகுகள் என்று புறக்கணித்து விடக் கூடிய புராணங்களையும் இதிகாசங்களையும் விட்டு விட்டு, சரித்திர சம்மதமாக மட்டும் பார்த்தாலும் கூட, காந்தியடிகள் ஒருவர்தான், 'அன்பும் ஆன்மாவும் அரசியலோடு ஒட்டி நின்றாலல்லாமல் உலகத்தில் இன்று மலிந்து கிடக்கும் தீமைகள் ஒரு சிறிதும் குறையா' என்பதை முதல் முதல் காரியத்தில் செய்து காட்டியவர். அவர், ஆன்ம ஞானத்தை அரசியல் போராட்டத்தில் பிணைத்துச் செய்துகாட்டிய அற்புதங்களை உலகம் உள்ளளவும் போற்றும். யந்திர வாழ்வினால் நொந்து போயிருக்கும் ஐரோப்பிய நாகரிகத்துக்கும், அந்த நாகரிகத்தை அர்த்தமில்லாமல் அப்படியே பின்பற்ற ஆசைகொள்ளுவதால் நமக்குள் வளர்ந்துவரும் துன்பங்களுக்கும் காந்தியடிகள் காட்டிய வழி ஒன்றுதான் அருமருந்தாகும் என்பதை அறிஞர்கள் எல்லாரும் ஆதரிக்கின்றார்கள். சத்தியம், சாந்தம், அஹிம்சை என்ற வார்த்தைகளெல்லாம் வெறும் வேதாந்தம் பேசுவதற்கு மட்டுந்தான் என்று எண்ணிக்கொண்டிருந்த மயக்கத்தை மாற்றி, உலக வாழ்வின் ஒவ்வொரு செயலிலும் அந்த வார்த்தைகளின் உப்பு சேர்ந்தால்தான் மனிதவர்க்கம் தன்னுடைய மிருகத் தன்மையை மாற்றிக்கொள்ள முடியும் என்பதை காந்தியடிகளைப்போல் எவரேனும் செய்கையில் காட்டியிருக்கிறார்களா? மகாத்மாவின் மகத்துவத்தை காங்கிரஸ் அறிந்து அவருடைய

ஆணைப்படி சத்யாக்ரகம் செய்த ஒன்றே என்றும் நமக்குப் பெருமை தரும். தள்ளாத கிழவர்களும், தாயை விட்டுப்பிரியாத சிறுவர்களும், வீட்டைவிட்டு வெளியில் வந்தறியாத பெண்மணிகளும் காந்தியடிகளுடைய அஹிம்சா மந்திரத்தில் கட்டுப்பட்டுச் செய்திருக்கின்ற சேவைகளைச் சிரசின்மேல் வைத்து உலகம் சிந்திக்கும். கண்டிப்பான கோஷா வழக்கத்திலேயே இருந்த மகமதியப் பெண்களும்கூட தேச சேவிகைகளாகச் செய்திருக்கும் தியாகங்களை நினைத்தாலும் உள்ளம் உருகுகின்றது. வங்காளத்தில்ம ஹ்ஸ்ருல் ஹக் என்பவருடைய மனைவியார் காந்தியடிகளிடத்தில் பகிரங்கமாக வந்து தாம் அணிந்திருந்த ஆபரணங்கள் அனைத்தையும் ஒன்றுவிடாமல் கொடுத்துவிட்டுச் சிறைக்கும் வரத் தயாரென்று சொன்னார். அடிகள் ஆச்சரியப்பட்டு அந்த அம்மையாரைச் சிறைக்கு வரவேண்டாமென்று தடுத்துவிட்டு "அந்த அம்மாள் கொடுத்த ஆபரணங்கள் ஒரு முதல்தர காலேஜை (First grade college) நடத்தப் போதுமான அவ்வளவு விலையுயர்ந்தன" என்று அவரே பத்திரிகைகளுக்கு எழுதினர். இதைப் புகழவும் வேண்டுமா?

வேதங்களுக்கும் சாஸ்திரங்களுக்கும் விளக்கம் தந்து, மதங்களுக்கெல்லாம் ஒரு மறுமலர்ச்சி உண்டாக்கிப் புராணங்களுக்கும் சரித்திரங்களுக்கும் ஒரு புதுமை புகட்டிய காந்தியடிகளின் தலைமையில் காங்கிரஸ் சாதித்திருக்கும்

பலனை எண்ணுந்தோறும் அறிவு ஆனந்தமடைகின்றது; கவிதை களிக்கின்றது; கற்பனை கட்டுக்கடங்காமல் உயர்ந்து எழுகின்றது; உடல் சிலிர்க்கின்றது; உயிர் தளிர்க்கின்றது. இன்றைக்கல்ல, நாளைக்கல்ல, இன்னும் பல்லாயிரம் ஆண்டுகளுக்குப் பின்னாலும், நல்லவர்களுடைய சிந்தையிலும் சிரசிலும் சிம்மாசனம் கொள்ளக்கூடிய காந்தியடிகளின் உபதேசங்களை மேற்கொண்டு நடந்துவரும் இந்தக் காங்கிரசில் நாமெல்லாரும் கலந்து கொண்டிருக்கிறோம் என்பதிலுள்ள ஒரு கம்பீரம் இணையற்ற இன்பம் தரக்கூடியது. அது ஒன்றே போதும்.

அரசாங்க உத்தியோகங்களுக்காக பிராம்மணர்களைக்கண்டு பிறர் சிலருக்கு வந்த நியாயமான பொறாமை நியாயமறியாத வெறும் கோபமாக மாறி, காங்கிரசைத் திட்டி வந்து இப்போது காந்தியையும் முட்ட வருகின்றது. மகாத்மாவை இகழ்ந்துரைப்பதும் அப்படிப் பட்ட பேச்சுகளுக்கு இடங்கொடுப்பதும் தீது. காந்தியடிகளை இகழ்ந்து பேசுவது மதங்களையெல்லாம் மறுப்பதாகும். அதுமட்டுமல்ல; உலகத்தில் இது வரையிலும் உதித்து உபதேசம் செய்திருக்கிற உத்தமர்கள் எல்லாரையும் ஏக காலத்தில் இகழ்வதாகும். தெய்வபக்தியும் ஆன்ம உணர்ச்சியும் இன்னதெனத் தெரிந்தவர்கள் மகாத்மாவின் மதிப்பைக் குறைத்து மகிழமாட்டார்கள்.


நண்பர்களே, நம்முடைய நாட்டிற்கு

உரிமையான சுதந்திரத்தையும் அதையொட்டி நம்முடைய ஜனங்களுக்கு வரவேண்டிய சுக வாழ்வையும் காங்கிரஸ் மகாசபை ஒன்றுதான் சாதிக்க வல்லது. காங்கிரசின் பெருமையைக் காப்பதிலேயே நாம் கண்ணுங் கருத்துமாயிருக்கவேண்டும். பிறர் எவ்வளவு குறைத்துப் பேசிவிட்டாலும் காங்கிரசின் பெருமை குறைந்துவிடாது. காங்கிரசுக்கு ஒரு குறைவு வருமென்றால் அந்தக் குறைவு காங்கிரஸ்காரர்களாகிய நம்மாலேயே வந்தால்தான் வரலாம். சென்ற பல வருஷங்களாக காந்தியடிகளின் தலைமையில் நடந்து வந்திருக்கிற காங்கிரசின் செல்வாக்கு உலகத்தின் மூலை முடுக்குகளிலும் ஊடுருவிச் சென்று மனித வர்க்கத்தின் மனதில் நிலைகொண்டு நிற்கின்றது. இன்றைக்கு காங்கிரஸ் அடைந்திருக்கும் இணையற்ற கீர்த்தியானது வெறும் அரசியல் பேச்சுகளாலும் சட்ட திட்ட சாமர்த்தியங்களாலும் வந்துவிட்டதல்ல. பின் எதனால் வந்ததென்றால் காந்தியடிகளின் தவத்தால் வந்தது என்று தயங்காமல் சொல்லலாம். பண்டிதர்களுடைய உணர்ச்சியையும் பாமரர்களுடைய உள்ளத்தையும் கொள்ளை கொண்டது அத்தவமே. காந்தியடிகளின் தவ நெருப்பில் நாமெல்லாரும் நம்முடைய சுயநலக் குப்பைகளை கரித்து எரித்துச் சாம்பலாக்கியதனால் வந்த சக்தியே காங்கிரசுக்கு இப்போதுள்ள தைரியம். அப்படி அரும்பாடுபட்டு அடைந்த தபோபலத்தை

நாம் துர்விநியோகப் படுத்தாமல் காக்கின்ற அளவுக்குத்தான் நாம் காங்கிரசின் பெருமையையும் செல்வாக்கையும் காக்க முடியும். உலகம் கண்டறியாத ஒரு தனி வழியைக் காட்டிய காந்தியடிகளுடன் தவத்தில் இறங்கிய நாம் நாளுக்குநாள் தூய்மையில் குறைந்து வருவதாகவே என் உள்ளம் குமுறுகின்றது. காந்தியடிகள் சேர்த்துக் கொடுத்த ஏராளமானத் தவச்செல்வத்தை நாம் சிதற விட்டு வருகிறோமென்றே சிந்திக்க வேண்டியிருக்கிறது. மகாத்மாவைப் பின் பற்றிய போது நாம் மறந்திருந்த நம் சொந்த தப்பிதங்களெல்லாம் மறுபடியும் ஒவ்வொன்றாகத் தலைநீட்ட ஆரம்பித்து விட்டன என்று என்னுடைய நெஞ்சம் என்னையே இடிக்கின்றது. மதிக்க வேண்டியவர்களை அவமதிக்கின்றோம். ஜனநாயக சம்பிரதாயங்களுக்கு விரோதமாகத் தலைவர்களைச் சந்தியில் இழுத்துவிட்டுப் பேசுகிறோம். நாட்டின் நலத்தைக் கருதி மறந்து விடவேண்டிய அற்ப விஷயங்களையும் அதிகப்படுத்தி அபிப்பிராய பேதமென்று சொல்லிப் பேச்சாலும் எழுத்தாலும் பாமர மக்களை காங்கிரஸ் விஷயங்களைப்பற்றி மருளச் செய்கிறோம். ஒருவருக்கொருவர் மிகவும் விட்டுக் கொடுத்த நாம், அந்த மேலான குணத்தைக் கொஞ்சங் கொஞ்சமாக விட்டுக்கொண்டு வருகின்றோம். தலைவர்களும்கூட தொண்டர்களென்று தலைவணங்கிய நமக்குள், தனித்

தனியே ஒவ்வொருவரும் தலைவர்களாகித் தொண்டர்களின்றித் தவிக்கின்றோம். காங்கிரசுக்குள்ளேயே பதவிகளுக்கு அனாவசியமான போட்டிபோடப் புகுந்து விட்டோம். தளகர்த்தனில்லாத சைனியத்தைப்போலத் தாறுமாறான தர்க்கங்கள் நமக்குள் தலை யெடுத்து விட்டன. சுருங்கச் சொன்னால் நம்முடைய நாட்டிற்கு இப்போது அத்தியாவசியமான தியாகபுத்தி நமக்குள் குறைந்து வருகிறதென்றே கூறலாம். சுதந்திரம் என்ற மிகப் பெரிய விஷயத்தை மேற்கொண்டிருக்கிற நாம் நமக்குள் தோன்றி வருகின்ற சுத்தக் குறைவை உடனே கவனிக்க வேண்டுமென்பதே என்னுடைய வேண்டுகோள். இந்த எச்சரிக்கைகளை நான் சொல்லுகின்றபோது, எந்த தனிப்பட்ட மனிதரையும் இகழ்ந்து பேசவேண்டுமென்ற எண்ணம் என் மனதில் இம்மியளவும் இல்லை. மேற்சொன்ன குற்றங்கள் பெரும்பாலும் என்னிடத்திலும் உள்ளவைகளே. காங்கிரஸ்காரர்களுடைய பரிசுத்தம் பழுது பட்டு வருவதை தமிழ் நாட்டிலுள்ள பல சுத்தமான காங்கிரஸ் வாதிகள் ஏற்கெனவே எண்ணிப் பார்க்க ஆரம்பித்து விட்டார்களென்பதே என்னுடைய நம்பிக்கை. இந்த என்னுடைய எச்சரிக்கையும் அவர்கள் எல்லாரையும் உடனே ஊக்கிவிட்டு காங்கிரஸ்காரர்களுடைய ஒழுக்கத்தைச் சீக்கிரத்தில் சீர்படுத்துமென்பது திண்ணம்.

காமம்



ஒழுக்கம்’ என்பதை ஒருபுறம் ஒதுக்கி
உலகத் தியல்பின் உண்மையைப் பார்ப்போம்
அழகிய எதிலும் ஆசை கொள்வது
உயிர்களுக் கெல்லாம் பிறப்பின் உரிமை
இன்பப் பொருளில் இச்சை பிறப்பது
தடுக்க ஒண்ணாத தத்துவம் ஆகும்
கண்ணுக் கின்பம் காண்பதே போதும்
காதுக் கின்பம் கேட்டால் கழியும்
மூக்கிற் கின்பம் முகர்ந்தால் முடிவுறும்
நாக்குக் கின்பம் நற்சுவை நல்கும்
உடலுக் கின்பம் காமம் ஒன்றே
அறிவுக் கின்பம் அதன்மேல் உண்டு
அதற்கும் மேலாம் ஆன்ம இன்பம்
அறிவின் இன்பம் அடைவோர் சிலரே
ஆன்ம இன்பம் அறிந்தவர் அருமை
நடைமுறை உலகில் நாம்காண்ப தெல்லாம்
ஐம்புலன் தேடும் இன்ப ஆசைதான்

அவற்றுள் ஒன்றே காம ஆசையும்
பார்க்கிற இன்பம் பயமின்றிப் பெறலாம்
கேட்கிற சுகமும் எளிதிற் கிடைக்கும்
மூக்கின் ஆசையும் சுலபமாய் முடியும்
நாக்கின் சுவைகள் நாடெங்கும் உண்டு
உடலுக் கின்பமாம் காமம் ஒன்றுதான்
அப்படிச் சுலபமாய் அடைவது அல்ல
காமம் என்பது உடலையே கருதும்
வேறொரு உடலை விரும்புவதாலே
இன்னொரு மனமும் இசைதல் வேண்டும்
இசையா மனமுள்ள இடத்திலும் முட்டி
காம ஆசைதான் கலகம் விளைப்பது
காமம் என்பது அடிக்கடி கலையும்
ஒன்றை விட்டு ஒன்றைத் தாவும்
புதுப்புது இடங்களிற் புகுந்து புழுங்கும்
ஆதலால் அதனை அஞ்சுவர் யாரும்
அறிவில் வலியவர் அடக்குவார் அதனை
ஆன்ம ஞானம் அழிக்கவே முயலும்
ஒழுக்கம் சொல்லி உலகம் ஒடுக்கும்
அறிவின் வலிமையும் ஆன்ம ஞானமும்
சிற்சில சமயம் சிக்கிக் கொண்டு
காமத்தாலே கலங்கிட நேரும்
பல்லாண்டு பழகிய ஒழுக்கப் பண்பையும்
கணத்தில் உதித்த காமம் கலைக்கும்
அழகும் இளமையும் அதற்குத் தூண்டுகோல்
இன்பக் கலைகளும் இதற்குத் துணைத்தரும்

காந்திவழி



ஐரோப்பிய எண்ணங்களை அகற்றி, நம் முடைய நாகரிகத்துக்குப் பொருத்தமான வழியில், உலகம் இதுவரையிலும் கண்டறி யாத ஒரு புதுமையான சமதர்ம சாம்ராஜ் யத்தை உண்டாக்க முடியும் என்பதை நாம் நம்பவேண்டும். நாம் அடைந்திருந்த மந்திரி பதவிகளும் அவற்ளோடு நமக்குக் கிடைத் திருக்கிற நன்மதிப்பும் எப்படி வந்தன? 'நமக்கும் இந்த அரசாங்கத்தில் அதிகாரம் கிடைக்குமா? நாமும் நம்முடைய நாட்டை ஆளப்போகிளுேமா?' என்று இருபது வருஷங் களுக்கு முன்னல் ஏங்கிக்கிடந்த இந்தியர்கள், "இந்த நாட்டுக்கு மந்திரியானேன், இனி விரை வில் மன்னவனுவேன்" என்று சொல்லக் கூடிய இன்பத்தைத் தந்தது எது? பிறருக்கு அடிமைப்பட்டுத் தங்களை விடுவித்துக் கொள்ள பாடுபட்ட நாடுகள் பல உண்டு. அவற்றுள்

ரத்தம் சிந்தாமல் இவ்வளவு சீக்கிரத்தில் இந்த மதிப்பை அடைந்த நாடு எது? சரித்திரத்தைப் படித்தவர்கள், சொல்லுங்கள்.

இவ்வளவு பெருமைக்கும் காரணம் இந்த நாட்டின் கலைஞானங்களின் நிலையமெனத் தகும் காந்தியடிகளின் சாந்தமுறையில் நடந்த சத்தியாக்ரகமல்லவா? காந்தியின் முறை மனித இயற்கைக்கு ஒவ்வாது என்றும், அது தவறிவிட்டது என்றும் தர்க்கமே செய்து கொண்டிருந்த சமதர்ம வாதிகளும்கூட ஆச்சரியப்படும்படியான அனுபவத்தை நாம் அடைந்திருக்கிறோமல்லவா? அரசியல் போராட்டத்தில் உலகம் இதுவரையிலும் கண்டதில்லையென்ற சத்தியாக்ரகமென்ற புதுமையைக்காட்டி உலகமெல்லாம் அதிசயப்படும்படிச் செய்த நாம் இன்னும் அதே அன்பு வழியால் உலகத்தார் இதுவரையிலும் எண்ணாத முறையில் ஒரு சமதர்ம சாம்ராஜ்யத்தை உண்டு பண்ணமுடியும். நாம் மட்டும் நம்முடைய முன்னோர்கள் காட்டிய ஆன்ம உணர்ச்சிகூடிய அறிவிலும் நாகரிகத்திலும் நம்பிக்கை வைக்க வேண்டும். வைப்போமானால் வெகு சீக்கிரத்தில் நாம் சுதந்திரம் அடைவது மட்டுமல்லாமல் உலகத்துக்கே ஒரு புதுமாதிரியான அபேத சமுதாயத்தை ஆக்கி வைப்போம். காந்தியடிகள் தம்முடைய அரசியல் ஆசான் என்று சொல்லிக்கொள்ளும் ஸ்ரீ கோபாலகிருஷ்ண கோகலே ஒரு சமயத்தில்,

" சண்டை யில்லாமல், வெறும் கிளர்ச்சியினுல் மட்டும் சுதந்திரம் அடைந்த நாடு ஒன்றுமே இல்லையென்று உலக சரித்திரம் காட்டலாம். இதுவரையிலும் அப்படியில்லாது போனதனுல் என்ன, அந்தக் குறையை நம்முடைய சரித்திரத்தால் பூர்த்தி செய்வோம். ஏனெனில் உலக சரித்திரம் இன்று முடிவடைந்து விடவில்லை. இன்னும் எத்தனையோ புதுப்புது அத்தியாயங்கள் அதில் சேரவேண்டி யிருக்கின்றன. நம்முடைய சரித்திரம் இதுவரையிலும் இல்லாத அந்தப் புது அத்தியாயமாக இருக்கட்டும் " என்று சொன்னுர். அந்த வாக்கு இன்றைக்கும் உதவுகின்றது.

ஆதலின் உலக அறிவுக்கு மிகவும் புதுமை பூட்டிய காந்தி வழியையே நாம் பின்பற்றி, சோஷலிஸம், கம்யூனிஸம், நாஸிஸம், பாஸிஸம் என்று சொல்லப்படுகின்ற எதிலும் இல்லாத ஒரு சமதர்ம அரசாங்கத்தை இந்நாட்டில் ஏற்படுத்துவோம். அந்த ஆட்சி முறையில் ஏழை—பணக்காரர், தொழிலாளி—முதலாளி, படித்தவன்—படிக்காதவன் என்ற வேற்றுமைகளின் தீமைகளை அகற்றி, ஜாதி, மதம், நிறம் இவற்றின் இறுமாப்புகள் இல்லாமற் செய்வோம்.

சீதமதிக் குடைக்கீழ்
செம்மை அறம்கிடப்பத்
தாதுஅவிழ் பூந்தாரான்
தனிக்காத்தான்—மாதர்

அருகூட்டும் பைங்கிளியும்
ஆடற் பருந்தும்
ஒருகூட்டில் வாழ உலகு.

"அமைதியான அரசாட்சியினால், குடிஜனங்கள் அவரவர்களுடைய கடமைகளை அங்கங்கே சரியாகச் செய்ததினாலே, கிளியும் பருந்தும்கூட தமக்கு இயற்கையாக உள்ள பகைமையையும் மறந்து ஒரே கூண்டில் சமாதானத்துடன் வாழும்படியான ஓர் அரசாட்சியை நளன் நடத்தினான்" என்பது இந்தப் பாட்டின் கருத்து. இப்படி ஒரு அரசாங்கம் நடந்ததோ இல்லையோ எப்படியோ இருக்கட்டும்! நம்முடைய நாட்டின் அறிவு, அரசாங்கம் எப்படி இருக்கவேண்டும் என்று ஆசைப்பட்டது என்பதையாவது இந்தப் பாட்டு காட்டுகின்றது.

இந்த புகழேந்தியின் பாட்டு வெறும் கட்டுக் கதையல்ல வென்பதைச் சிறிதேனும் காட்ட முயல்வோம். அடிதடியில்லாமல் அன்பின் வழியிலேயே உலகம் நடக்குமா நடக்காதா என்று வாதிக்க வேண்டியதே யில்லை. சத்தியமும் சாந்தமும் பலிக்குமா என்று பார்க்க வேண்டியதேயில்லை. காந்திடிகள் சத்தியாக்ரக இயக்கத்தை 1919-வருஷம் கல்கத்தாவில் கூடிய விசேஷ காங்கிரசில் பிரேரேபித்த போது, சத்தியாக்ரகம் கூடவே கூடாது, பலிக்கவே பலிக்காது என்று அந்த தீர்மானத்தை எதிர்த்து நின்ற அனேக தீரர்களான தேசபக்தர்கள், இப்போது அந்த

சத்தியாக்ரகம் ஓரளவிலாவது பலித்திருப்பதைப் பார்த்து இன்புறுவதற்கு இல்லையே என்று மனம் ஏங்குகின்றது. எப்படியானாலும் அறிவுடைய மக்களுக்கு சத்தியக்குறியுடன் சாந்த நெறியில் செய்கின்ற முயற்சிகளைக் காட்டிலும் இன்பந்தரக்கூடியது வேறு எதுவும் இருக்கமுடியாது. சந்தேகம் வேண்டியதில்லை. சத்தியம் நிலைக்கும்; சாந்தம் பலிக்கும். காந்தியடிகள் வாழ்க.

இத்தனைநாள் உலகமெலாம் இருந்தறிந்த
பெரியவர்கள் இசைத்த ஞானம்
அத்தனையும் ஒருருவாய்த் திரண்டதெனக்
கலியுகத்தே அவதரித்தோன்
சத்தியமே மந்திரமாம் சாந்தமொன்றே
தந்திரமாம் சமயம் தந்த
உத்தமனும் காந்திமுனி உச்சரித்த
சாத்விகத்தை உறுதி கொள்வாம்.

கவிதை



அசதியைக் கிள்ளி அறிவைக்கிளப்பி
அலையும் மனத்தை அடக்கி நிறுத்தி
இன்பதுன்ப உணர்ச்சிகள் எழுப்பி
நன்மை தீமையை நன்றாய் விளக்க
இல்லாத ஒன்றையும் இருப்பதைப் போலவே
மனக்கண் முன்னால் மலரச்செய்து
இருக்கிற ஒன்றையும் இல்லாததே போல்
மனதைவிட்டு மறையச் செய்து
வாழ்க்கைக்குக் குதவும் நல்ல வழிகளில்
ஊக்கம் கொள்ளும் உறுதியை ஊட்ட
பாடுபடாமல் பாடம் பண்ணவும்
நினைவில் எளிதாய் நிற்கவும் தக்கதாய்
இணைத்த சொற்களே ‘ கவிதை ’ எனப்படும்.
‘ கவிதை ’ என்பது கற்பனை உள்ளது
கூட்டியும் பேசும் குறைத்தும் கூறும்
பொய்மையும் வாய்மையே போலப்பொலிய
அறங்களைப் புகட்டலே அதனுடை நோக்கம்

எதுகை மோனை இலக்கணம் பார்த்து
பதங்களை அடுக்கிப் பாட்டெனச் செய்து
உள்ளதை உள்ளதே போல உரைக்கும்
கதையோ பாட்டோ கற்பனை யில்லையேல்
'ஐந்தும் ஒன்றும் ஆறு' என்கிற
கணக்கே யாகும், கவிதை யாகாது
கற்பனை மிகுந்த கவிதைகள் மிகுந்தது
தமிழ்மொழிக்குள்ள தனிப்பெரும் சிறப்பு.

நமது லட்சியம்

காங்கிரசும் நாமும் எந்த முறையில், எப்படிப் பட்ட விடுதலையை விரும்பி கஷ்டப்பட்டு வருகின்றோம் என்பதைக் கருத்துக்குக் கொண்டுவர வேண்டும். *விடுதலைப்பாதையில் இப்போது நாம் இருக்கின்ற இடம், சட்டசபைகளையும் மற்றுமுள்ள தேர்தல் ஸ்தாபனங்களையும் காங்கிரஸ் கைப்பற்றி, நம்மீது கட்டாயப் படுத்தப்பட்டிருக்கிற அரசியல் முறையைக் கண்டித்து, நாம் விரும்புகின்ற வேறு முறையில் அரசாங்கத்தை அமைக்கவேண்டும் என்பதை, சட்டமுறை எதிர்ப்பினால் கட்டாயப் படுத்த வேண்டும் என்ற இடத்தில் இருக்கிறோம். வேறு விதமான அரசியலை ஏற்பாடு செய்ய அரசாங்கமே ஒத்துக்கொள்ளும்படிச் சீக்கிரத்தில் செய்வோம். ஆனால், நம்முடைய

---

* காங்கிரஸ் சட்டசபைப் பிரவேசம் செய்ய முடிவு செய்த காலத்தில் நிகழ்த்தப்பட்ட பிரசங்கம்.

பாதை (ரஸ்தா) அத்தோடு முடிந்துவிடவில்லை. நாம் போய்ச் சேரவேண்டிய இடம் இன்னும் வெகுதூரத்திலிருக்கின்றது. நாம் விரும்புகின்ற விடுதலை அதுவல்ல. நாம் சொல்லுகின்ற சுதந்திரம் அங்கில்லை. சுதந்திரப் பாதையின் குறுக்கே வழிமறித்துக் கிடக்கும் கல்லையும் முள்ளையும் அகற்றுவதற்கென்று மட்டும் அங்கே சற்று தங்க நேர்ந்த நாம் நம்முடைய பாதையை விட்டு விலகி, அக்கம் பக்கத்திலுள்ள மரம், கனி, மலை, சுனை முதலியவற்றில் மனதைச் செலுத்தி நாம் போகவேண்டிய மார்க்கத்தையும் சேரவேண்டிய ஊரையும் மறந்துபோகக்கூடாது.

இப்போதைக்கு உடனே நாம் செய்ய வேண்டிய இந்தப் பாதையைச் சீர்படுத்தும் வேலையாகிய சட்டசபைப் பிரவேசத்தின் அவசரத்தில் வரக்கூடிய சிறு அசரிக்கையில் நம்முடைய பெரிய லட்சியங்களை மறந்துவிடக் கூடாது. பாதையிலுள்ள கல்லையும் முள்ளையும் அகற்றவேண்டியது எவ்வளவு அவசியமோ, அதைப்போலவே சட்டசபைப் பிரவேசமும் மந்திரி பதவிகளும் இப்போதைக்கு அவசியம் தான். பாதையைச் சீர்திருத்தத் தங்கிய சமயத்தில், அருகிலுள்ள மரத்திலிருக்கும் பழத்தை உண்டுப்பசியாறுவதிலும், அங்குள்ள ஓடையில் தண்ணீரருந்தித் தாகம் தீர்த்துக் கொள்ளுவதிலும், பக்கத்திலிருக்கும் கரட்டிலேறிக் காற்று வாங்குவதிலும் குற்றம் ஒன்று

மில்லை. ஆனல் வந்த வேலையை மறந்துவிட்டு, வழியையும் துறந்துவிட்டு, அங்குமிங்கும் குறுக்கே போய் வழியில்லா வனந்தரங்களில் அலைந்து திரிந்துவிடக்கூடாதல்லவா? அப்படி நாம் வழிதப்பிப் போய்விடுவோமோ என்று அஞ்சவேண்டியதற்கான அறிகுறிகள் நமக்குள் சிற்சில தோன்றுகின்றன. அந்த அடையாளங்களை இப்போது அங்கங்கே நடக்கும் பஞ்சாயத், ஜில்லா போர்டு, முனிசிபாலிடி, கார்ப்பொரேஷன் முதலான இடங்களில் கடைந்தெடுத்த காங்கிரஸ்காரர்களும் காட்டுகின்ற கவனக்குறைவிலே காணலாம். தீப்பிடித்துக்கொண்ட வீட்டின் நெருப்பை அணைக்க நீர்மொண்டுவரப்போன சகோதரர்கள் குளக்கரையிலேயே நின்றுகொண்டு, 'அந்தக் குடம் அவனுக்கு, இந்தத் தோண்டி இவனுக்கு, இந்தச் செம்பு எனக்கு உனக்' கென்று சண்டையிட்டு அடிதடியிலும் இறங்கி, வீட்டையும் அது வெந்து போகிற கேட்டையும் மறந்துவிட்டது போலவே நாம் சில சமயங்களில் நம்முடைய லட்சியத்தையே மறந்து போய்ப் பேசுகின்ருேம்.

காங்கிரசின் லட்சியத்தை இந்த நாட்டின் விடுதலை, சுதந்திரம், சுயராஜ்யம், பூர்ண சுதந்திரம், இங்கிலாந்தோடு இணைப்பில்லாத சுயராஜ்யம் என்ற வார்த்தைகளைக்கொண்டு பேசுகின்ருேம். ஆனல் காந்தியடிகளின் ஆணையில் காங்கிரஸ் ஒப்புக்கொண்டு நாமெல்

லாரும் கையொப்பம் தந்திருக்கிற லட்சியம் மேலே சொன்ன எந்த வார்த்தையிலும் அடங்கியிருக்கவில்லை. நம்முடைய விடுதலை லட்சியத்தை விளக்கவேண்டுமானால், இந்தியர்களாகிய நாம் காங்கிரசின் மூலமாக செய்கின்ற முயற்சிகளில் கையாளும் முறைகளால், இந்த நாட்டுக்கு அரசியல் சுதந்திரமும் மற்ற நாடுகளுக்கும் ஒரு சத்திய சன்மார்க்க போதனையும் வரும்படியான வழியைக் காட்டித்தருவோம் என்பதுதான். இந்த நோக்கத்தை ஒத்துக்கொண்டுதான் மகாத்மாவுடன் சாத்விகப்போரில் சேர்ந்தோம். காங்கிரசின் தீர்மானங்களில் இருப்பது இந்த லட்சியத்துக்கான பதங்களேயானாலும், நம்மிற் பலர் இன்னும் ஐரோப்பிய முறைகளை மனதில் வைத்துக்கொண்டு இந்த லட்சியத்தை முற்றும் மறந்து போனதுபோலத் தோன்றுகின்றது. அந்தத் தோற்றத்தையும் உடனே மாற்ற வேண்டும்.

நம்முடைய நோக்கங்களை, உலகத்தில் பல தேசங்களில் இப்போது நாம் பார்க்கின்ற பற்பல மாறுதல்களுடன் ஒத்திட்டுப் பார்த்து வெகு நிதானமாக நிர்ணயிக்கவேண்டும். பழைய எண்ணங்களையே பற்றிக்கொண்டுப் புது எண்ணங்களைப் புறக்கணிக்கவும் கூடாது; பழைய எண்ணங்களையெல்லாம் முற்றிலும் பரிகசித்துவிட்டுப் புதுமையானது என்பதற்காக மட்டும் ஒன்றில் திடீரென்று பாய்ந்துவிடவும் கூடாது. அன்னியர்களிட

மிருந்து நம்முடைய நாட்டை நமது வசப் படுத்திக்கொள்ள வேண்டுமென்பது எவ் வளவு அவசியமோ அவ்வளவு அவசியம் நம் முடைய அறிவையும் நாகரிகத்தையும் அன் னியங்களிலிருந்து விடுவித்து வசப்படுத்திக் கொள்ள வேண்டுமென்பதும். அன்னிய விஷயங்கள் எல்லாம் குற்றமானவையென்றோ, நம்முடைய முறைகள் எல்லாம் நியாயமான வையென்றோ நான் சொல்லவில்லை. நம் முடைய நாட்டிற்கு, அன்பும் ஆண்மையும் அளவோடு கூடிய ஒரு நூதன ஆட்சி முறை யைப்பற்றி நாம் ஆலோசிக்க வேண்டும். உல கத்தில் இப்போது நடந்து வருகின்ற எந்த அரசாங்கமும் நம்முடைய அறிவுக்காவது, அல்லது அங்குள்ள ஜனங்களுக்காவது திருப்தி யளித்துவிட்டதாகத் தெரியவில்லை. ஐரோப் பிய நாடுகளில் நடந்துவருகின்ற அரசாங்கங் களிற் பல நமக்கு மிகவும் அச்சமுண்டாக்கு கின்றன. எனவே, நாம் எந்த முறையில் இந்நாட்டின் அரசியலை அமைக்கலாம் என் பதை மிகவும் பொறுமையுடன் எண்ணிப் பார்க்கவேண்டும்.

ஐரோப்பிய நாகரிகம் முற்றிலும் தவறி விட்டது. மனித சரீரத்துக்கு வேண்டிய சுக போகங்களுக்கான யந்திர தந்திரங்களில் ஐரோப்பிய அறிவு ஆச்சரியப்படத்தக்க பல காரியங்களைச் சாதித்திருக்கிறதென்றாலும், மனிதனிடத்திலுள்ள மிருகத்தன்மையைக்

குறைத்து, மனிதனுக்கு மனிதன் காட்டுகின்ற மாச்சர்யத்தை மாற்றி, மனித சமூகத்தின் அமைதியான வாழ்க்கைக்கு வேண்டிய அன்பை ஐரோப்பா விருத்திசெய்யவில்லை. இந்திரியச் சுகங்களைப் பிரதானமாகக் கருதுகின்ற எந்த நாகரிகமும் இப்படித்தான் இருக்கும். நிலையான சட்டங்களை மதிக்காமல் சமயோசித சட்டங்களைமட்டும் நம்புகின்ற சமூகத்திலோ சர்க்காரிலோ அமைதியின்மை அடிக்கடி ஏற்படத்தான் செய்யும். மனித சமூகத்துக்கு இன்றியமையாத அரசியல் அமைப்பு, பொருளாதார அமைப்பு, சமூதாய அமைப்பு முதலான எல்லாத்துறைகளிலும் ஐரோப்பிய முறைகள் உண்மையான கூட்டுறவைக் கொடுக்கத் தவறிவிட்டன.

சமதர்ம சாம்ராஜ்யத்தை உண்டாக்கிய பெருமை பெற்று, நம்மிற் பல பேருக்கு நல்ல உதாரணம்போலத் தெரிகின்ற ருஷியாவிலும் ஒவ்வொரு காரியமும் கத்தி முனையில்தான் காக்கப்படுகிறது. சோறும் துணியும் மற்ற சுகங்களும் எல்லாருக்கும் கிடைக்கின்றன என்று சொல்லிக்கொண்டாலும் ஒரு தனி மனிதன் சுதந்திரமாக ஓர் எண்ணத்தைக்கூட எண்ண உரிமையில்லை. அங்குள்ள எல்லா மனிதர்களும் ஒரே யந்திரத்தைச் சேர்ந்த பல சக்கரங்களைப் போலத்தான் சுழலமுடியுமே யல்லாமல் தனித்தனி ஜீவர்களாக எண்ணிக் கொள்ளக்கூடிய இன்பம்

இருக்கமுடியாது. அந்த அரசாங்கம் முழுதும் அங்குள்ளவர்களுக்கு தினந்தினம் சோறும் துணியும் பங்கு போட்டுக் கொடுக்கும் ஸ்தாபனத்தைத் தவிர வேறல்ல என்றுதான் அனுமானிக்க வேண்டியிருக்கிறது. அத்தகைய ஒரு சமதர்ம அரசாங்கத்தை மனிதப்பூச்சிகளால் கட்டிக் காக்கப்படுகின்ற ஒரு தேன் கூடு என்றுதான் சொல்லவேண்டும். ஜெர்மனி, இதாலி, ஸ்பெயின், போர்த்துகல் முதலிய நாடுகளைப்பற்றிச் சொல்ல வேண்டியதே இல்லை. அமெரிக்காவைப் பார்ப்போம். பற்பல நாடுகளிலிருந்தும் கப்பல் கப்பலாக உலகத்திலுள்ள தங்கத்தின் பெரும் பகுதியையும் கொண்டு போய்ச் சேர்த்துவைத்துக்கொண்டு செல்வத்தில் மிகச் சிறந்த நாடென்று சொல்லப்படும் அந்த அமெரிக்காவில்தான், வேலையில்லாமல் தவிக்கின்றவர்களுடைய எண்ணிக்கை மிகவும் அதிகமாக இருக்கின்றது. ஐரோப்பிய நாடுகளில் அமைதியிருக்க நியாயம் இல்லை. வருஷத்துக்கு ஓர் அரசாங்கம், மாதத்துக்கு ஒரு மந்திரி சபை, நாளைக்கு ஒரு சட்டம், நேரத்துக்கு ஒரு நியாயம் என்று நடந்து கொள்ளும் ஐரோப்பிய நாடுகளில் நாம் கொண்டிருக்கும் நம்பிக்கையைக் கட்டோடு விட்டொழிக்க வேண்டும். சுதந்திர நாடுகள் என்று சொல்லிக்கொள்ளும பல ஐரோப்பிய நாடுகளில் இன்றைக்கும் ஒவ்வொரு மனிதனுடைய உயி

ரும் உரிமைகளும் எந்த நிமிஷத்தில் என்ன வாகுமோ என்று ஊசலாடிக் கொண்டே இருக்கின்றன. அடிமை நாடான இந்த நாட்டில் நமக்கிருக்கின்ற அமைதிகூட சுயராஜ்யமுள்ள சில ஐரோப்பிய நாடுகளில் இல்லை. இங்கிருக்கும் அமைதி ஆங்கிலேய ராணுவத்தால் ஏற்பட்ட அமைதியென்று சிலர் சொல்லலாம். அதில் ஓரளவு உண்மை யும் உண்டு. இருந்தாலும் இந்த நாட்டு மக்க ளிடத்திலுள்ள அமைதி முற்றிலும் ராணுவத் தால் காக்கப்படும் அமைதி அல்ல. பெரும் பகுதியும் அது இந்திய மனப்பான்மையினுல் காக்கப்பட்டுவரும் அமைதியென்பதில் ஐய மில்லை. சாவதானமாக எண்ணிப்பார்த்தால் தான் இதைச் சம்மதிக்க மனம் வரும். ஆகை யினுல் ஐரோப்பிய நாகரிகம் அமைதியில்லா நாகரிகம். அந்த நாகரிகத்தின் மோகத்தால் வரக்கூடிய அன்னிய மனப்பான்மையோடு நாம் நம்முடைய சுதந்திர முயற்சிகளையும் முறைகளையும் எண்ணவேகூடாது என்ற எச்சரிக்கை நமக்கு இருக்கவேண்டும்.

நம்மிற் பலபேர் நம்முடைய சுயராஜ் யத்தை அன்னிய மனப்பான்மையோடுதான் எண்ணிவருகின்ருேம். இந்த விதேச மனப் பான்மையால் அன்னிய நாடுகளில் நடந்து வரும் பல தீமைகளுக்கு இங்கேயும் இடங் கொடுக்க நேரும். காலச்சக்கரத்தின் கதி யினுல் அன்னிய எண்ணங்கள் இங்கே புகு

வதைத் தடுக்கமுடியாது என்றாலும், நாம் சுதேசி எண்ணங்களிலேயே நமக்கு வேண்டிய எல்லா மாறுதல்களையும் எண்ணினால், அன்னிய சம்பந்தங்களினால் வரக்கூடிய பல தீமைகளின் வேகத்தை மிகவும் குறைக்கலாம். அரசியல், பொருளாதாரம், கைத்தொழில், நாணய நடமாட்டம், சமதர்மம் முதலிய எல்லாவற்றிலும் ஒரு புதுமையான புரட்சியை உலகத்துக்கு உண்டாக்கிவைக்க நாம் சுதேசி மனப்பான்மையுடன் அவற்றை ஆராய வேண்டும். கொஞ்சம் ஆராய்வோம் :

புரட்சி : அரசியல் விஷயங்களிலும், சமய சமூக விஷயங்களிலும், மற்ற விஷயங்களிலும் இப்போது இருந்துவரும் பல ஏற்பாடுகளை நாம் அடியோடு மாற்றத்தான் வேண்டும். இந்த மாறுதல்களையெல்லாம் "புரட்சி" என்ற சற்றே கொச்சையான பதத்தைக் கொண்டும் அப்பதத்துடன் உதிக்கின்ற அன்னிய மனப்பான்மையையும் கொண்டேதான் நாம் எண்ணுகின்றோம். புரட்சியை விரும்பி நினைக்கும் போதெல்லாம் பிரான்சில் நடந்த புரட்சியையும், இத்தாலியில் ஏற்பட்ட புரட்சியையும், ருஷியாவில் உண்டான புரட்சி முதலான அன்னிய புரட்சிகளைக் கொண்டுதான் நாமும் அளக்க முயலுகின்றோம். அதனால்தான் 'புரட்சி' என்று சொன்னால் பூதம் வந்து விட்டதுபோல பலர் நடுங்குகின்றார்கள்.

அரசாங்கம் : நம்முடைய சுயராஜ்ய அர

சாங்கம் எப்படி இருக்க வேண்டும் என்று எண்ணுவதிலும் நாம் அன்னிய மனப்பான்மையையே அதிகமாகக் கொள்ளுகின்றோம். ஜனநாயக முறை இப்போது நடத்தப்படும் தேர்தல்களில்தான் இருப்பதாக மயங்குகின்றோம். பழைய காலங்களில் நம்முடைய கிராமங்களில் இருந்த பஞ்சாயத்து முறையில் அடங்கியிருக்கும் மிக உயர்ந்த ஜனநாயகக் கட்டுப்பாட்டை அநாகரிகமானதாக எண்ணுகின்றோம்.

விவசாயம்: விவசாயமே முக்கிய ஜீவனமாக இருக்கும் இந்த நாட்டில் விவசாய விருத்தியைப்பற்றி எண்ணும்போதும் அன்னிய எண்ணங்களே நம்மை அழுத்துகின்றன. விவசாயத்தில் பல புது முறைகளை நம் நாட்டில் புகுத்தவேண்டியது அவசியம்தான். ஆனால் இந்திய நாட்டு விவசாயத்தை, அன்னிய நாட்டில் ஆயிரம் ஏகரா நிலத்தை இரண்டொரு யந்திரங்களைக்கொண்டே உழுது, விதைத்துப் பயிராக்கிவிடுகின்ற அன்னிய முறைகளை மனதில் வைத்துக் கொண்டே ஆராயப்புகுவதில் பயனே இல்லை. யந்திர விவசாயத்தால் விளைந்திருக்கிற தானியங்களைக் காட்டிலும் தரித்திரமே அதிகம்.

கைத்தொழில்கள்: கைத்தொழில்களை நாம் கவனிக்காமலிருப்பதற்கும், மகாத்மா ஆரம்பித்த கிராமக் கைத்தொழில் முயற்சி இன்னும் சரியானபடி அமைக்கப்படாமல் இருப்பதற்கும் அன்னிய மனப்பான்மையே காரணம்.

நமக்கு வேண்டிய எல்லா சாமான்களும் இப்போது யந்திரத்தால் செய்யப்பட்டு வருகின்றன. வீடு கட்டுவதிலும்கூட இனிமேல் கொத்தர்கள் ஒவ்வொரு செங்கல்லாக அடுக்கிக் கொண்டிருக்க வேண்டியதில்லை. யந்திரத்தால் செய்யப்பட்ட 'சிமென்ட்' சுவர்கள் வந்து விட்டன. அப்படியே எடுத்து நிறுத்த வேண்டியதுதான் தாமதம். எல்லாத் தொழில்களும் அன்னிய நாடுகளில் இப்போது ஆலைத் தொழில்களாகிவிட்டன. கைத்தொழில் என்பது அங்கே காணமலேயே போய்விட்டது. நாமும் இந்த நாட்டிலும் கொஞ்சம் கொஞ்சமாக ஆலைத்தொழில்கள்தான் உண்டாகவேண்டும் என்று உறுதி கொண்டு விட்டவர்கள் போலவே நடந்து கொள்ளுகின்றோம். காந்தியடிகள் கத்திக்கத்திக் கதறிய கதர் இயக்கம் கூட ஏதோ கட்டாயத்துக்காக நடந்துவருகின்றது. கதர் கட்டாதவர்களைத் தேர்தல்களில் காங்கிரஸ் அபேட்சகராக நிறுத்த மாட்டார்களோ என்ற பயத்துக்காக நடப்பதுபோலத் தத்தித் தள்ளாடிக்கொண்டிருக்கிறதே யொழிய அதில் அடங்கிக் கிடக்கும் அபார தத்துவத்தை நாம் அறிந்து நடப்பதாகத் தெரியவில்லை. இந்தக் 'கைத்தொழில்கள்' என்ற ஒரே ஒரு வார்த்தையில்தான் உலகத்தில் இப்போது இருந்துவரும் வேலையில்லாத் திண்டாட்டத்தினல் வளர்ந்து வரும் வறுமையை மாற்றக் கூடிய மந்திரம் அடங்கியிருக்கின்றது என்ப

தையும் நாம் கொண்டுள்ள அன்னிய மனப் பான்மையால் அறிய முடியவில்லை.

இப்போது உலகத்தில் இருக்கிற வேலையில்லாத் திண்டாட்டத்தின் காரணம், எல்லா நாடுகளிலும் கைத்தொழில்கள் அழிந்துபோய் ஆலைத்தொழில்கள் அதிகப்பட்டுவிட்ட ஒன்றே தான். இத்திண்டாட்டமும் ஆலைத்தொழில்கள் மிகுந்துள்ள ஐரோப்பிய நாடுகளில்தான் அதிகமாக இருக்கின்றது. பத்துப் பதினைந்து மனிதர்களால் ஓட்டப்படுகின்ற ஒரே ஒரு யந்திரம் பல்லாயிரம் தொழிலாளிகளின் பட்டினிக்குக் காரணமாயிருக்கிறது. ஆலைத் தொழில்கள் அதிகரிக்க அதிகரிக்க வேலையில்லாத் திண்டாட்டமும் அதிகரிக்கும் என்பதில் சந்தேகம் இல்லை. ஐரோப்பிய ஆலைகளில் மலைமலையாக உற்பத்தியாகும் சரக்குகளை வாங்கிக் கொள்ள ஏமாந்த சோணகிரிகளாகிய இந்தியாவும், ஆப்பிரிக்காவும் இல்லாவிட்டால் அந்த ஆலைகளும் மூடப்பட்டு, அவற்றில் வேலை செய்து ஜீவனம் செய்கின்றவர்களும் வேலையில்லாத் திண்டாட்டத்தில் விழவேண்டியதுதான். இந்தியாவிலும் ஆலைகள் அதிகப்பட்டு மற்ற நாடுகளைப் போலவே நாமும் ஆலைச் சரக்குகளை உற்பத்தி செய்கிறோம் என்று வைத்துக்கொள்வோம். அச்சரக்குகளை வாங்குவார் யார்? அதனால் உலகத்தில் வேலையில்லாதாரின் ஓலம் இன்னும் எவ்வளவு அதிகரிக்கும் என்பதை ஒரு கண நேரம் கண்ணை மூடி எண்ணிப் பாருங்கள்.

ஏகாதிபத்ய நாடுகள் எல்லாம் தம்மினும் ராணுவ பலத்தில் குறைந்த அன்னிய நாடுகளைப் பிடித்துக்கொள்ள அலைவதும், ஏற்கெனவே பிடித்துக்கொண்டிருக்கிற நாடுகளை விட்டுவிட மனமில்லாமல் விழிப்பதும், தங்களுடைய ஆலைகளில் உற்பத்தியாகும் சரக்குகளை வாங்கிக் கொள்ளவாவது தாம் சொன்னபடி கேட்கக்கூடிய தேசங்கள் தங்களுடைய ஆதிக்கத்தில் இருக்கவேண்டும் என்ற ஆசையினால்தான். இன்னும் கொஞ்ச காலத்தில் இந்த ஆலைத் தொழில்களை அதிகமாக்கிக் கொண்ட நாடுகள் தங்களுடைய ஆலைச்சரக்குகளை வாங்குவாரில்லாத ஒரே காரணத்துக்காக ஒன்றோடொன்று வலுச்சண்டைக்குப்போய் மக்களை மடியச்செய்யப் போகின்றன என்பதை நினைக்கும்போது நெஞ்சம் நெக்கு விடுகின்றது. அப்படிப்பட்ட சண்டை நேரிடுவதற்கு முன்னாலேயே கூட இந்த ஆலைத்தொழில் நாடுகளில் அதிகரித்துவிட்ட வேலையில்லாத ஜனங்களுக்கு பதில் சொல்ல முடியாமல் அங்குள்ள அரசாங்கங்கள் திண்டாடப்போகின்றன. வேறு நாட்டோடு சண்டையிடுவதற்கு முன்னால் உள்நாட்டுக் கலகங்களிலேயே அனேக அரசாங்கங்கள் உருண்டுபோக நேரும். அந்த சமயத்தில்தான் கந்தை கட்டிய காந்தியின் கதர் இயக்கமும் கைத்தொழில் இயக்கமும் என்னவென்பதைப் பல நாடுகள் எண்ணப்போகின்றன. மேலே சொன்ன வேலையில்லாத் துன்பங்கள் கரை

புரண்டு வந்து விடுவதற்கு முன்னாலேயே அதற்கு அணை போடவேண்டுமானால் உலகத்தி லுள்ள எல்லா அரசாங்கங்களும் தங்கள் தங்கள் நாடுகளில் ஆலைத்தொழில்களைக் குறைத்துக் கைத்தொழில்களைக் காக்கவேண் டும். சிற்சில சாமான்களாவது கையினால் செய்யப்பட்டதாகத்தான் இருக்கவேண்டும் என்ற கட்டாயச் சட்டங்களை எல்லா அரசாங் கங்களும் செய்தே தீரவேண்டும். விநோதப் பொருள்களை யெல்லாம் விட்டுவிட்டாலும், உணவு, உடை இந்த இரண்டில் மட்டுமாவது கையாற் செய்யப்பட்ட பொருள்களைத்தான் நாட்டில் உற்பத்தி செய்யவேண்டும் என்றும், உபயோகப்படுத்த வேண்டும் என்றும் உத்தர விட முடியுமானால்தான் இந்த வேலையில்லா உபத்திரவம் ஒருவாறு ஒழியலாம். ஆதலின் காந்தியடிகளின் அற்புத மூளையில் உற்பத்தி யான இக்தக் கதர் இயக்கமும் கைத்தொழில் இயக்கமும் இந்தியாவின் அரசியல் விடுதலைக்கு மட்டும் வேண்டிய விஷயங்கள் அல்ல; உலகத் துக்கே அத்தியாவசியமான மிக உயர்ந்த ஒரு முயற்சியாகும். இதிலும் இந்திய மனப்பான் மையே அன்னிய மனப்பான்மையைவிட அன்பும், அருளும் நிறைந்ததென்பது நிரூபிக் கப்படுகின்றதை நாம் நினைக்கவேண்டும்.

நாணய நடமாட்டம்: நாணய நடமாட்டத்தி லும் நமக்குள்ள அன்னிய மனப்பான்மையை அகற்றவேண்டும். உலகத்தில் நாகரிகம் உண்

டான நாள் முதற்கொண்டு பணம்தான் வியாபாரத்துக்கும் பண்டமாற்றுக்கும் தூதாகவும், தரகாகவும் இருந்து வந்திருக்கின்றது. ஆனல் நம்முடைய நாட்டில் பழய காலங்களில் நாணய நடமாட்டத்தில் பணத்தின் மதிப்புக் குறைவாகவும், பண்டங்களின் மதிப்பு அதிகமாகவும் இருந்துவந்தது. இப்போது ஐரோப்பிய "பாங்கிங் சிஸ்டெம்" என்கிற நாணயமாற்று முறைகளில் நடக்கின்ற தந்திரங்களால் பண்டங்களின் மதிப்பு மிகவும் குறைந்து, பணத்தின் மதிப்பு அதிகப்பட்டுவிட்டது. அதனல் கஷ்டப்படுகின்றவர்கள் பண்டங்களை உண்டாக்கும் விவசாயிகளும் தொழிலாளிகளும் தான். பணக்காரன்-ஏழை, முதலாளி-தொழிலாளி, ஜமீன்தார்-குடியானவன் என்ற சச்சரவுகளால் ஏற்படும் கஷ்டங்களுக்கும் இந்த அன்னிய முறையில் நடந்துவரும் நாணய மாற்று மிகவும் காரணமாயிருக்கிறது. ஆகையினல் இதிலும் நாம் அன்னிய மனப்பான்மையை விட்டுவிட்டு சுதேசி முறையில் எண்ணிப்பார்த்து நமது முன்னேர்கள் கையாண்ட பண்டமாற்று முறைகளைப் புதுப்பித்து நாணய நடமாட்டத்தைக் குறைக்கவேண்டும்.

கற்பு




கற்பெனப் படுவது பெண்களின் காவல்
காப்பதோ விடுவதோ அவர்கள் காரியம்
அதனை அழிக்க யாரால் முடியும் ?
கற்பிற் சிறந்த பெண்களின் கதைகளே
சமுதாயத்தை வளர்க்கும் சாரம்
அறங்களுக் கெல்லாம் அகராதி எனலாம்
காதலை இழந்தும் கற்பைக் காத்த
பெண்களின் பெருமை பேசவும் பெரிதே
உள்ளதை யெல்லாம் உவப்புடன் இழப்பார்
உடலை வெறுப்பார், உயிரையும் விடுவார்
கற்புடைப் பெண்களைக் கடவுளும் மதிக்கும்"
என்னும் உண்மையை எண்ணிடும் போது
"அந்தக் கற்பு ஆண்களுக் கில்லையா ?
பெண்கள் தானா காக்கப் பிறந்தவர்,
சொன்னவ ரெல்லாம் இதையே சொன்னார் !
எழுதினதெல்லாம் இதையே எழுதினார்!
பாடின பேரும் அப்படிப் பாடினார் !

நாமும் அதையே நம்புதல் தகுமா ?
என்ற கேள்விகள் எழுவது சகஜமே
" ஆண்களுக் கேனும் பெண்களுக் காயினும்
கற்பைக் காக்கிற கடமை பொதுவே
ஆண்களின் கற்பும் அகத்தியம் ஆயினும்
பெண்களின் கற்பே உலகின் பெருமை
கற்பெனும் பெருமையைக் காத்தவர்
பெண்களே

இளமையும் அழகும் இரண்டும் உள்ள
பெண்பால் ஒருத்தி பிரியம் காட்டி
வலுவில் சென்று வாய்விட் டுரைத்து
காம இச்சையைக் காட்டி விட்டால்
வேண்டாம் என்று வெறுத்து விட்டு
கற்பைக் காக்கும் கருத்தி ேைடும்
துன்பம் பொறுத்துத் துயரம் சகித்து
உயிரை விடவும் உறுதி காட்டிய
ஆண்களின் கதையை அறிந்தவர் உண்டோ ?
பார்த்ததும் இல்லை படித்ததும் இல்லை
கற்பனைப் பேச்சிலும் காணேம் ஆனல்,
கணவன் முற்றிலும் கயவனே யாகி
மனைவியை இகழ்ந்து மற்றும் பற்பல
தீமையே செய்து திரிவான் எனினும்
அவனிலும் சிறந்த அழகுள வாலிபன்
செல்வம் யாவையும் சேர்ந்தவன் ஆயினும்
காம இச்சையைக் காட்டி விட்டால்
காறி உமிழ்ந்துக் கனல்போற் சீறி,
துன்பம் வரினும் துச்சமாய் எண்ணி,
இணங்க மறுத்து எதிர்த்து நின்று,

கற்பைக் காக்கும் ஒன்றையே கருதி,
உயிரையும் விட்ட உத்தமப் பெண்களின்
அற்புத நிகழ்ச்சிகள் அனந்தம் உண்டு
கற்பனை அல்ல, கண்ணுற் கண்டுளோம்
இதுமட்டுமல்ல இன்னுமோர் உண்மை
பலவந்தமாகப் பற்றி இழுத்து,
காமம் கருதிக் காதலைப் பேசி,
இசையா விட்டால் இம்சையும் செய்து,
பூட்டியும் வைத்துப் புலம்பப் பண்ணி,
கொடுங்கோல் அரசின் குணமெல்லாம் காட்டி,
கட்டாயத்தினுல் கற்பைக் கெடுக்க
முயற்சி செய்தது முற்றிலும் ஆண்களே
ஆண்களே கற்பை அழிக்க முயல்வார்
பெண்களே அதனைப் பெரிதும் காத்தவர்

அஹிம்ஸையா— ஹிம்ஸையுமா



“ஹிம்சை வந்தாலும் வரும். வந்தால் பயப் படக்கூடாது. நல்ல காரியத்துக்காக உயிரைக் கொடுப்பதும் சரிதான், உயிரை எடுப்பதும் சரிதான். அதுதான் வீரம், ஆண்மை” என்றெல்லாம் அடிக்கடி கேட்கிறோம். இப்படிப் பேசுகின்றவர்கள் அஹிம்சையை நம்பி அடிபடுவதும் ஹிம்சையை நம்பி அடிப்பதும் ஒன்றேபோலப் பேசுகின்றார்கள்.

எவ்வளவு நல்ல காரியத்துக்காகவானாலும் கொலை வழியைப் பாராட்டுகின்றவர்களுக்கு உயிரைக் ‘கொடுப்பது’ என்பது கிடையாது. நேரான போர்க்களத்தில் மிக உயர்ந்த வீரர்களென்று பெயர் பெற்று இறந்தவர்களிலும் கூட உயிரைக் கொடுத்தவர்கள் ஒருவரும் இல்லையென்றே உறுதியாகச் சொல்லிவிடலாம். எப்படியென்றால்: கத்தியைக் கொண்டோ, ஈட்டியைக் கொண்டோ, துப்பாக்கியைக்

கொண்டோ அல்லது வெடிகுண்டு விஷப்புகை களைக் கொண்டோ, போருக்குப் போகிற ஒவ் வொருவனும் தன்னுடைய உயிருக்கு எந்தவித ஆபத்தும் நேர்ந்துவிடாதபடி தனக்கு வேண் டிய எல்லாவிதமான பந்தோபஸ்துகளையும் செய்துகொண்டு பகைவர்களுடைய உயிரை எடுப்பதிலேயேதான் கண்ணுங் கருத்துமாக இருக்கிறான். இவன் போர்க்களத்தில் இறந்து போக நேர்ந்தால் அது இவன் பிறரைக் கொல் லப்போன முயற்சியில் தப்பித்துக்கொள்ள வழியில்லாமல் எதிரியால் கொல்லப்பட்டுப் போனவனேயல்லாமல் நாட்டிற்காக உயிரை வேண்டுமென்று 'கொடுத்தவன்' ஆகமாட் டான். ஆகையினால் "உயிரை எடுப்பதும்சரி கொடுப்பதும்சரி" என்று சொல்லுகின்ற பேச்சு உண்மையற்றபேச்சு. நல்ல காரியத்துக் காக உயிரைக் கொடுப்பவன் எவன் என்றால்,

'தன்னுயிர் நீப்பினும் செய்யற்க, தான்பிறிது
இன்னுயிர் நீக்கும் வினை'

என்றபடி பிறருடைய உயிரைப் போக்க மறுத்து, தானே கொல்லப்பட்டுப் போவதற் கும் தயாராயிருக்கின்ற ஒருவன்தான் உயி ரைக் கொடுத்து உதவுகின்ற உண்மையான வீரன். இப்போது உலகத்தில் பல தேசங்களி லும் நடந்துவருகின்ற பற்பல கொடுமைகளுக் கும் மூல காரணமாக இருப்பது 'வீரம்' என் பதைப் பற்றிய தப்பான தாத்பரியமே. மனி

தனை மனிதன் அடக்கியாள நினைப்பதற்கும், நாட்டை நாடு நசுக்கிவாழ நாடுவதற்கும் மூல பலமாக இருப்பதும் இந்தத் தவருன 'ஆண்மை' தான். ஏகாதிபத்யம், சர்வாதிகாரம் என்பனவற்ருல் ஏற்படும் துன்பங்களுக்கெல் லாம் துணையாக இருப்பதும் எதுவென்ருல்: மனிதனை மனிதன் கொல்லுகின்ற மாச்சரி யத்தை ஆண்மையென்றும், வீரமென்றும், அஞ்சாமை என்றும் மதித்து வந்த மடமையே தான்.

பம்பாயில் நடந்த ஹிந்து-முஸ்லிம் கலகங் களில் இன்னெருவனை, பதுங்கியிருந்து குத்திக் கொன்ற ஹிந்துவும் முசல்மானும் தான் செய்த கொலை தன்னுடைய மதத்தைக் காப் பதற்காகச் செய்த உயர்ந்த கைங்கரிய மென்றே கருதுவான். அதையும் ஆண்மை யென்றும் வீரமென்றும் அனுமதிக்கின்ற மனப்பான்மை நமக்குள் இருந்து வருகின்றது.

நாம் அறிந்த எந்த மதமும் அந்த அட் டூழியங்களுக்கு ஆதாரமல்ல. எல்லா மதங் களும் அன்பு, ஜீவகாருண்யம், அஹிம்சை என்றுதான் போதிக்கின்றன. இருந்தும் அன்பையே போதிக்கின்ற மதங்களின் பெய ரால்தான் இந்தப் பாதகங்கள் செய்யப்படுகின் றன. மதவெறியால் இந்த உலகத்தில் நடந் திருக்கிற அநியாயங்களுக்கு அளவே இல்லை. அவற்றை நினைக்கின்றபோது மதங்களும் கோயில்களும் அழிந்துபோனாலும் பாதக

மில்லைதான் என்ற ஆத்திரம் நமக்கு உண்டாவதில் ஆச்சரியமில்லை. ஆனல் இப்படிப்பட்ட அக்கிரமங்களுக்கெல்லாம் மூலகாரணம் எது என்பதை நாம் இன்னும் கொஞ்சம் ஆழ்ந்து ஆராயவேண்டும். ஆராய்ந்து பார்ப்போமானல் இந்த அட்டூழியங்கள் நடப்பதன் மர்மம் மதத்திலோ கோயிலிலோ மசூதியிலோ இல்லை. பின் எங்கே இருக்கிறதென்றால், ஹிம்சையில் உலகத்தாருக்கு இருக்கிற நம்பிக்கையிலும், அஹிம்சையில் இருக்கிற நம்பாமையிலும்தான் அந்த ரகசியம் அடங்கி யிருக்கின்றது. இன்றைக்கு உலகத்திலுள்ள மக்களில் பெரும்பாலாரும், அதில் பெரும்பான்மையான பாமர மக்களுக்கு வழிகாட்டத் தகுந்தவர்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்ற தலைவர்களிற் பெரும்பாலாரும், ஹிம்சையும் ஒரு நல்ல வழிதான் என்று தாம் நம்புவது மட்டுமல்லாமல் உபதேசமும் செய்கின்றார்கள். ஆனல் இவர்களும்கூட சண்டையில்லாத சாதாரண காலங்களில் ஹிம்சையைத் தாங்களும் வெறுப்பது போலத்தான் பேசுகின்றார்கள். பிறரைக் கொல்லுவதற்கென்றே தங்களுடைய நாட்டின் பொக்கிஷத்தை யெல்லாம் செலவு செய்து புதுப்புது கொலைக்கருவிகளையும் யுத்ததளவாடங்களையும் உற்பத்தி செய்துகொண்டேயிருக்கிற ஐரோப்பிய சர்வாதிகாரிகளும் கூட, "ஐரோப்பாவைக் கொலைக்களமாக்க எங்களுக்கு ஆசை இல்லை, எங்களுடைய தற்காப்புக்

காகக் தயார் செய்து கொள்ளுகிறோமே யொழிய பிறருக்கு ஒரு தீங்கையும் நாங்கள் எண்ணவில்லை'' என்றுதான் பேசுகின்றார்கள். ஹிம்சையை நம்புகின்ற எல்லாரும் இப்படித்தான் சொல்லுகிறார்கள். பின்னும், மதத்தின் பெயரால் ஒருவரை யொருவர் கொன்று விடுவதில் கோபங்கொண்டு மதத்தையே மறந்துவிட வேண்டும் என்கிறவர்களும் கூட தேசத்தின் பெயரால் ஒருநாடு இன்னொரு நாட்டோடு சண்டையிட்டு யுத்தகளத்தில் லட்சக் கணக்கான மக்கள் மடிந்து போவதை 'போர்' என்றும் 'வீரம்' என்றும் புகழ்ந்து பேசப் பின் வாங்குவதில்லை.

ஆகையினால் உலகத்துக்கு இந்த சமயத்தில் அவசியமான பேச்சு ஒன்றே ஒன்றுதான். அது என்னவென்றால் மதத்தைக் காப்பதாகவோ, தேசத்தைக் காப்பதாகவோ, நாகரிகத்தைக் காப்பதாகவோ, அல்லது நாகரிகம் இல்லாதவர்களுக்கு நாகரிகத்தைப் புகட்டப்போவதாகவோ, செய்யப்படுகின்ற எல்லா ஹிம்சைகளையும் 'கொலைவழி' என்று இகழ்ந்து அக்கொலை வழிகளுக்கு அதிகாரிகளாக இருக்கின்றவர்கள் எவ்வளவு சாமர்த்திய சாலிகளாக இருந்தாலும் அவர்களுக்கு மதிப்புத்தராத மனப்பான்மையை உலக மக்களிடத்தில் உண்டாக்க வேண்டும். அத்துடன் 'வீரம்' 'ஆண்மை' என்ற வார்த்தைகளின் சரியான வியாக்கியானத்தையும் உலகத்தில்

பரப்பவேண்டும். இப்படிப்பட்ட ஓர் உலக உணர்ச்சியையும் சமுதாயத்தையும் உண்டாக்கவேண்டும். ஹிம்சை வழிகளை இகழ்வதனால் அந்த ஹிம்சைக்குத் தாங்களே இரையாக வேண்டி நேர்ந்தாலும் அதை ஏற்றுக்கொண்டு உயிர் கொடுக்கக்கூடிய உண்மையான வீரர்கள் கூட்டத்தை யுண்டாக்க வேண்டும். அதற்கு காந்திவழி ஒன்றுதான் கதிமோட்சம். அதைச் செய்ய இந்தியர்களாகிய நாம்தான் அதிகமான அருகதை யுள்ளவர்கள். பிறரைக் கொல்ல மறுத்துத் தாங்கள் கொலையுண்டு போவதற்குக் கூசாமல் "உயிர் கொடுக்க போதித்த" உத்தமர்கள் நம்முடைய நாட்டில் தான் அதிகமாக இருந்திருக்கிறார்கள். இது உண்மை, வெறும் புகழ்ச்சியல்ல. இதை நாம் தான் செய்யமுடியும் என்ற நம்பிக்கைமட்டும் வேண்டும். காந்தியடிகளின் சாந்த வழியை மேற்கொண்டிருக்கிற காங்கிரஸ்தான் அதற்குச் சரியான கருவி என்பதையும் நாம் நம்பிக்கையோடு கருதவேண்டும்.

உலகத்தில் சண்டைகளை அடியோடு ஒழித்து விடுவது முடியாத காரியமென்றும், ஸாத்வீகம் ஸாத்வீகம் என்று எவ்வளவுதான் சொன்னாலும் கடைசியில் சண்டை வந்துதான் தீரும் என்றும், அதை நம்மால் தடுக்கவே முடியாதென்றும் சொல்லி நம்மைச் சலனப் படுத்துகிறவர்கள் பலர் உண்டு. அவர்கள் சொல்வது சரியா தப்பா என்று ஆராயவேண்

டிய அவசியமே நமக்கில்லை. அது அஹிம்சையை நம்பாதவர்களுடைய வேலை. நாமேன் அதைச் செய்ய வேண்டும்?

உலகத்தில் எவ்வளவோ தீமைகள் நடக்கின்றன. ஆனால் எந்தத் தீமையையும் அதைச் செய்கின்றவனும்கூட விரும்புவதில்லை. நம்முடைய தேகத்தில் எவ்வளவோ அசுத்தங்கள் இருக்கின்றன. நாம் என்ன செய்தாலும் அந்த அசுத்தங்கள் நம்முடைய தேகத்தை விட்டுப் போகப்போகிறதில்லை. ஆனாலும் என்ன? அவை நம்முடைய தேகத்தில் இயற்கையாக இருப்பவைதானே என்று அவற்றைப் பாராட்டுகின்றோமா? அதைப் போல உலகத்தில் அஹிம்சை ஒத்துக் கொள்ளுமா, இருக்குமா போகுமா என்பதை நாம் விசாரிக்க வேண்டியதில்லை. நாம் எதை விரும்புகின்றோம், எதை மக்களுக்கு உபதேசம் செய்யப் போகின்றோம், எப்படி நடந்து கொள்ளப் பிரயத்தனப்படுகின்றோம் என்பது மட்டுந்தான் நம்முடைய விசாரமாக இருக்க வேண்டும். காங்கிரஸ்வாதிகள் இதைத் திருப்பித் திருப்பித் தங்களுக்குத் தாங்களே நினைப்பூட்டிக்கொள்ள வேண்டும். நம்மிற் சிலர் பேசுகின்ற பேச்சுகளிலும், எழுதுகின்ற எழுத்துகளிலும், நடந்துகொள்ளுகிற மாதிரியிலும் காந்தியடிகளின் சகாப்தம் முடிந்து விட்டதோ என்றும், இனிமேல் "அஹிம்சை", "சாந்தம்" "ஸாத்வீகம்" என்ற வார்த்தைகளை வலி

யுறுத்திப் பேசவேண்டிய நியாயம் குறைந்து விட்டதோ என்றும் நினைத்துவிட இடங் கொடுக்கின்றோம். நம்முடைய லட்சியத் தையே நாம் மறந்து போனவர்கள் போல தோற்றம் அப்போதுதான் உண்டாகின்றது.

காங்கிரஸ் மகாசபையானது இந்தியா விற்கு அரசியல் விடுதலையைத் தேடிக்கொள்ள மட்டும் அல்ல, இந்த உலகத்தினுடைய எண் ணத்தையே ஹிம்சை வழிகளிலிருந்து விடுவிக்க நிற்கின்றதென்பதை நினைப்பில் வைக்கவேண்டும். இந்த நினைவில் இருக்கும் பெருமை, ஹிம்சை வழிகளால் இன்றைக்கே நமக்கு சுயராஜ்யம் வந்துவிட்டால் கிடைக்கக் கூடிய எல்லா இன்பங்களைக் காட்டிலும் பெரி யது. உலகம் அதிசயிக்கும்படியாக நாம் சத்யாக்ரகத்தை நடத்தியதற்கும், தேர்தல் களிலும்கூட காங்கிரஸை எதிர்த்தவர்கள் கதி கலங்கும்படியான வெற்றி பெற்றோம் என்ப தற்கும் இந்த "அஹிம்சை" என்ற ஒன்றே ஒன்றுதான் காரணம் என்பதை மறந்துவிடக் கூடாது. ஆதலின் காந்தியடிகளுடைய சாந்த மந்திரத்தை நாம் மீண்டும் மீண்டும் மனதில், ஜெபித்துக்கொண்டே இருக்கவேண்டும். புரட்சி அதிலே தான் இருக்கிறது. உலகத்துக்கெல்லாம் ஒரு புதுப்புரட்சியை உண்டாக்குவோம். ஹிம் சை எண்ணங்களைப் புரட்டுவோம். கொலை வழி களைத் தலைகீழாகப் புரட்டுவோம். காந்தி மந்திரத்தை நிலைப்படுத்தி, காங்கிரசை பலப்

படுத்தி நம்முடைய முறையில் நாம் சம்பாதிக்கும் சுயராஜ்யம்தான் நம்முடையதாகும். சுதந்திரம் பிறர் கொடுத்து வருவதல்ல. தேசீயத்தின் ஜீவதாதுக்களை சுகப்படுத்தி, தேசமக்களின் மனதை ஒருமுகப்படுத்தி, அறிவாளிகள் மதிக்கும்படியாக அடையப்போகும் சுதந்திரமே இந்திய காங்கிரசின் சுதந்திரமாக இருக்கவேண்டும். ஐரோப்பிய நாடுகளில் இப்போது இருந்துவரும் நிலைமையினால் இங்கிலாந்துக்கு ஒரு பெரிய நெருக்கடி ஏற்படலாம் என்றும், அந்த நெருக்கடிக்குப்பயந்து இங்கிலாந்து நம்முடைய சுயராஜ்யத்துக்கு இணங்கிவிடலாம் என்றும் நம்மிற் பலர் நம்புகின்றோம். அப்படி ஒருக்கால் நேர்ந்தாலும் நேரலாம். ஆனால் அதில் நாம் அதிக நம்பிக்கை வைத்துவிடக்கூடாது. ஏனெனில், அந்த நெருக்கடி நம்முடைய ஆசைக்குச் சாதகமாக இருக்குமோ, பாதகமாக முடியுமோ தெரியாது. அந்த நெருக்கடியில் இங்கிலாந்துக்கே ஆபத்து வந்து, ராணுவப் பழக்கம் இல்லாததால் இந்தியா தன்னைத்தான் காத்துக்கொள்ள முடியாமல் இன்னொரு புது எஜமானுக்கு அடிமையாக நேர்ந்து விட்டாலும் நேரும். அப்படியில்லாமல் ஒரு வேளை இங்கிலாந்தே நெருக்கடிக்காகப் பயந்து நம் சுயராஜ்யத்துக்கு ஒத்துக்கொண்டாலும், அது அவசரத்துக்குச் சொன்ன பேச்சாகவே முடியும். நெருக்கடியில் கிடைக்கும் இன்பம் இன்பமும் அல்ல;

நிலைக்கவும் முடியாது. நெருக்கடி தீர்ந்தவுடன் நாம் பழைய நிலைக்கே வந்துவிடுவோம். ஆகையினால் அகஸ்மாத்தாக "நேர்ந்தாலும் நேரலாம்" என்று நினைக்கக்கூடிய அன்னிய காரணங்களால் நாம் சுதந்திரம் அடைந்துவிடலாம் என்பதில் ஆசை வைத்து, நாம் மேற்கொண்டிருக்கிற முயற்சிகளையும் முறைகளையும் தளர விட்டு விடாமல், காங்கிரசின் கட்டுப்பாட்டை உறுதிப்படுத்தி அது இப்போது கொண்டிருக்கிற சத்தியக்குறியையும் சாந்த நெறியையுமே நாம் பின்பற்றுவோம்.

மந்திரி பதவிகளும் அவற்றைப் போன்ற மற்றெல்லா விஷயங்களும் நாம் மேற்கொண்டிருக்கிற சுதந்திரம் என்கிற பெரிய முயற்சியின் வழியிலே தட்டுப்படுகின்ற சிறிய வேலைகளேயாகும். நாம் கருத்தில் வைக்கவேண்டிய காரியம் இந்த நாட்டின் விடுதலையும் அந்த விடுதலையை அடைவதில் உலகத்துக்கெல்லாம் நாம் உபதேசிக்க எண்ணும் நன்னெறியும் தான். அதற்குக் காங்கிரசின் கண்ணியத்தை நாம் கண்ணில் வைத்துக் காக்கவேண்டும். காங்கிரசின் மானத்தைக் காப்பது காங்கிரசின் மனத்தைக் காப்பதிலே இருக்கிறது. காங்கிரசின் மனத்தைக் காப்பதென்பது காங்கிரஸ் மேற்கொண்டிருக்கிற சத்தியப்பிடியையும், சன்மார்க்கக் கொடியையும், சாந்த முடியையும் சலனப்படுத்தக்கூடிய எந்த அன்னிய மனப்பான்மைக்கும் இடம் கொடுத்துவிடாமல்

காப்பதேயாகும். உலகத்துக்கே நாம் செய்ய விரும்பும் உபதேசத்தை விட்டுவிட்டு, நம்முடைய நாட்டின்வெறும் அரசியல் விடுதலையை மட்டும் விரும்பினாலுங்கூட, காங்கிரசின் ஸாத்வீக முறைகளைக் குழப்பிவிடக்கூடிய வெறும் ஆவேசப் பேச்சுகள் ஆகாது என்பதில் நாம் எப்போதும் எச்சரிக்கையாகவே இருக்கவேண்டும். மிகவும் பலமுள்ள இந்த அரசாங்கம் நம்மைச் சுற்றிலும் பின்னியிருக்கின்ற கட்டு திட்டங்களிலிருந்து நாம் விடுபடுவதென்பது வெறும் முரட்டுத் தைரியத்தால் முடியக்கூடியதல்ல. கற்கோட்டையில் பூட்டப்பட்டு, கண் கொட்டாத காவலில் கிடக்கும் ஒரு கைதி எவ்வளவு தைரியசாலியாகவும் திடகாத்திரனாகவும் இருந்தாலும் அந்தக் கற்கோட்டையை உடைத்துவிட முடியாது. வேண்டுமானால் அந்தக் கோட்டையின் கல்லிலும் கதவிலும் முட்டிக்கொண்டு தன்னுடைய கைகால்களையும் தலையையும் உடைத்துக்கொள்ளலாம்.

ஆகையினால் காங்கிரஸ்காரர்களாகிய நாம், ஆகாசவாணம்போல வேகமாக ஓடி வெடித்துப் போகக்கூடிய பேச்சுகளையெல்லாம் விட்டுவிட்டு, அமைதியான உறுதியையும் ஆர்ப்பாட்டமில்லாத அஞ்சாமையையும் நம்முள் அதிகப்படுத்தவேண்டும். அதற்குச் சத்தியாக்ரகம் ஒன்றேதான் சாதனம். நம்முடைய முன்னோர்களுடைய ஒப்பரிய நாகரிகத்தினால் நமக்குக் கிடைத்திருக்கும் ஞானத்தையும் அமைதி

யையும்—ஐரோப்பிய நாகரிகத்தின் அழிவுகளால் தலையெடுத்தாடும் அகந்தையையும் அமைதி யின்மையையும் ஆர அமர, ஆய்ந்து ஓய்ந்து பார்த்து, காந்தியடிகள் நமக்குக் கற்பித்திருக்கிற சத்திய இயக்கத்தினின்று நம்முடைய மனசை இழுக்கக்கூடிய எந்தப் பேச்சுக்கும் நாம் இடங்கொடுக்கக் கூடாதென்பதை மறந்து போகாதபடி மனனம் செய்துகொண்டே இருக்கவேண்டும். அந்த சத்திய இயக்கத்துக்குத் தன் சுகமறுப்பும் தியாகமும்தான் வேண்டும் என்பதை உணர்ந்து தயாராக இருக்க வேண்டும். சுயராஜ்யமே வராமற் போய் விட்டாலும் நாம் செய்கின்ற தன்னல மறுப்பிலும் தியாகத்திலும் மட்டிலுமே ஒரு சுதந்திர இன்பம் இருக்கிறதை அறிந்து அனுபவிக்கப் பழக வேண்டும். அந்த இன்பத்தை வாயாலும் எழுத்தாலும் வர்ணிக்க முடியாது. அது மனத்தால் மகிழவேண்டியது. இன்பம் என்பது உலகப்பொருள்கள் எதிலுமே இல்லை. நமமுடைய உணர்ச்சியிலேதான் இருக்கிறது. தியாக இன்பமானது சோறும் துணியும் மற்றச் சுகபோகங்களும் கொடுக்கக்கூடிய இன்பத்தைக் காட்டிலும் கோடிமடங்கு உயர்ந்தது. அந்த தியாக இன்ப உணர்ச்சியை "இந்த சுதந்திரப் போரில் எங்களை நாங்கள் பலியாகக் கொடுத்து எங்களுடைய எலும்பையும் சாம்பலையும் அஸ்திவாரமாகக்கொண்டு கட்டப் போகின்ற கட்டிடமே நான் கோரும் சுய

ராஜ்யம்; அப்படி என்னைப் பலி கொடுப்பதில் நான் அளவிலா இன்பமடைகின்றேன்" என்று இந்தியா சட்டசபையில் "சுயராஜ்யக் கட்சி" தலைவராக ஸ்ரீ பண்டித மோதிலால் நேரு செய்த கம்பீரமான கர்ஜனையிலே காணலாம். பின்னும் இந்தத் தன் சுகமறுப்பின் பெருமையை, யுத்தகளத்திலே அடிபட்டு விழுந்து உயிர்விடும் தறுவாயில் இருந்தும், தனக்குக் கொண்டுவந்த தண்ணீரை ஆசையோடு பார்த்த இன்னொரு அடிபட்டப் போர் வீரனுக்குக் கொடுக்கச் செய்து தான் உயிர் துறந்த சர் பிலிப் சிட்னியின் சரிதையிலே காணலாம்.

"உலகம் என்பது உயர்ந்தோர்மாட்டே" என்பது ஒப்பற்ற வாக்கியம். உயர்ந்தோர் என்பவர் தமக்கென வாழாத் தியாகிகளே யாவார். அப்படிப்பட்ட உயர்ந்தோரால் உலகத்துக்கெல்லாம் உதவ வேண்டுமென்ற அறவழியாகிய சத்தியாக்ரக மார்க்கத்தை விட்டுத் தவறிவிடாத எச்சரிக்கையோடு காங்கிரசை நடத்தி காங்கிரசுக்கு அதிகாரம் வந்தால் யாரும் பயப்படவேண்டியதில்லையென்று ஜனங்கள் நம்பும்படியாக நாம் நடந்துகொள்ளுவோமானால், விடுதலை தானாக விடியும், சுயராஜ்யம் மலரும், சுதர்மம் மணக்கும், சுதந்திரம் ஜொலிக்கும்.

தமிழிசை




'இசை' எனல் கருத்துடன் ஓசையும் இசைவதாம்
'கற்றலிற் கேட்டலே நன்றெ'னும் கட்டுரை
படிப்பிற்கு மட்டுமா? பாட்டிற்கும் உண்டு
'படித்துக் கற்றிடும் அறிவைப் பார்க்கினும்
கேட்டுக் கற்றிடும் அறிவே கெட்டியாம்'
என்னும் தத்துவம் இசையினல் பலம்பெறும்.
செவிவழி நுழைந்து உணர்ச்சியைத் திரட்டி
அறிவைத் தேடும் ஆவலுண்டாக்கி
எண்ணச் செய்கிற ஓசையே இசையாம்.
அழுவதற் கென்றெரு ஓசையை அறிவோம்
சிரிப்பதைக் காட்டும் சத்தமும் தெரிவோம்
அச்சம் குறிக்கிற ஒலியையும் அறிவோம்
அதிசயப் பட்டால் அதற்கொரு தனிஒலி
ஐயம் வினக்களும் ஓசையால் அறியலாம்
அபயக் குரலையும் ஓசையால் அளக்கலாம்
எல்லா உணர்ச்சியும் ஓசையால் எழலாம்
எனினும் ஓசையே இசை ஆகாது.

'சங்கீதம்' என்பது ஓசையின் சங்கதி
சப்த சுரங்களை சமத்தாய்க் கலந்து
நீட்டலும் குறுக்கலும் நெளித்தலும் செய்து
நிரவல் செய்து பரவல் நிரப்பி
கற்பனை மிகுந்த ஓசைகள் காட்டலே
சாமான்யமாகச் 'சங்கீதம்' என்பது.
அதிலே மட்டுமோர் ஆனந்தமிருக்கலாம்
நாதப் பிரம்மமும் அதிலே நாடலாம்
அதைப்பற்றி இங்கே ஆராய்ச்சி இல்லை.
ஓசையை மட்டும் ரசிப்பவர் உண்டு
ஆனால் அவர்கள் அதற்கெனப் பழகினோர்
அப்படிப் பழகினோர் வெகுசிலர் ஆவார்
அவர்களைப் பற்றியும் அக்கறை இல்லை
பொதுஜன மனதில் அறிவைப் புகட்ட
இனிய ஓசையால் உணர்ச்சியை எழுப்ப
பாடுவோன் கருத்தைக் கேட்போன் பருக
எண்ணமும் ஓசையும் இசைவதே 'இசை'யாம்.
இசைப்பவன் கருத்தும் கேட்பவன் எண்ணமும்
ஒன்றாய்க் கலப்பது ஓசையால் அல்ல
சொல்லே அதற்குத் துணையாய் நிற்பது
அந்தச் சொல்லும் சொந்தச் சொல்லாம்
தாய்மொழி ஒன்றே தனிச்சுவை ஊட்டும்
அவரவர் மொழியில் அவரவர் கேட்பதே
'இசை' எனப்படுவதன் இன்பம் தருவது.
புரியாத மொழியில் இசையைப் புகட்டல்
கண்ணைக் கட்டிக் காட்சி காட்டுதல்.
தமிழன் சொந்தத் தாய்மொழிச் சொல்லில்
இசையைக்கேட்க இச்சை கொள்வதே

'தமிழிசை' என்பதன் தத்துவமாகும்.
தத்துவம் இதனை மனதில் தாங்கி
புதுப் புது 'மெட்டை'யும் இசையிற் புகுத்தி
பழைய 'சிந்துகள்' 'பதங்கள்' 'வண்ணமும்'
தமிழின் சொந்தச் சந்தம் பலவும்
அழிந்து போகாமல் அவற்றையும் போற்றி
'தமிழிசை' வளர்ப்பது தமிழன் கடமையாம்.
சங்கீதத்தையும் தமிழன் கைவிடான்
சரித்திரம் அறிந்த சத்தியப் படிக்கு
யாழின் விதங்களும் குழலினம் அனைத்தும்
வாத்தியக் கருவிகள் வகைகள் பலவும்
ஏழு சுரங்களை இயக்கும் விதத்தையும்
'கர்நாடகத்துச் சங்கீதம்' என்று
அழைக்கப்படுகிற அந்தக் கலையும்
தமிழன் ஆதியில் வளர்த்துத் தந்ததே.
இன்றைய தினத்திலும் இந்தக் கலைகளில்
தலைசிறந் துள்ளவன் தமிழனே யல்லவா?

சமதர்மம்



சில காலமாக 'அபேதவாதம்,' 'பொது உடைமை,' 'சமதர்மம்' என்ற பேச்சுக்களைப் பத்திரிகைகளில் அப்போதைக் கப்போது பார்த்து வந்தோம். இப்போது அந்த வார்த்தைகள் காங்கிரஸ் மாளிகையின் கதவுகளையும் தட்டுகின்ற சத்தம் காதில் படுகின்றது. இந்த வார்த்தைகளைக் கேட்டவுடனேயே பலபேர் பயப்படுகின்றார்கள். சமதர்மம் என்பதற்கு உலகத்திலுள்ள மனிதர்கள் எல்லாரும் உணவு, உடை, குடியிருக்கை, இவைகளிலாவது சம செளகரியங்களோடு வாழ இடமிருக்கும்படியாக ஒரு சமுதாயம் அமையவேண்டும் என்பது தான் அர்த்தம். இந்த கோரிக்கை மிகவும் மேலானது என்று எவரும் ஒப்புக்கொள்ளுவார்கள். பின் ஏன் "சமதர்மம்" என்றவுடனேயே ஜனங்களுக்கு ஒரு திகில் உண்டாகிறது? சற்று ஆராய்வோம். சரித்திர பூர்வ

மாக உலகத்தில் இந்த சமதர்மக் கொள்கையை நடைமுறையில் நடத்த ஆரம்பித்த நாடு ருஷியா தான். அந்த ருஷியாவிலே இந்த அபேதவாத ஆட்சியை உண்டாக்குவதற்கு முன்னால் நடந்த ஹிம்சைகளை நினைத்தால், ஓடுகின்ற ரத்தம் உறைந்துவிடுகின்றது. ருஷியாவைப்போலவே சமதர்ம சமூதாயத்தை அமைக்கவேண்டுமென்று முயற்சிகள் நடக்கின்ற சில ஐரோப்பிய நாடுகளில் சமதர்மத்தை விரும்புகின்றவர்களும் அதை எதிர்க்கின்றவர்களும் இன்றைக்கும் செய்து வருகின்ற கொடூரங்களையும், சிந்துகின்ற ரத்தத்தையும் நினைக்கிறபோது "அபேதவாதம்" என்ற வார்த்தையைக் கேட்ட மாத்திரத்திலேயே ஜனங்கள் அஞ்சுவதில் ஆச்சரியம் இல்லை. சமதர்ம சமூதாயத்தை அவ்வளவு அவசரமாக ஏற்படுத்த முயலும் எந்த நாட்டிலும் அதே மாதிரி ரத்தக் களறிகளை எதிர்பார்க்கலாம். அப்படி ஓர் இரத்தக் களறியில் சிக்கி, சொத்து சுகத்தையும், உயிரையும் இழந்துவிட எவருக்கும் மனம் வராது. எந்த நாட்டு ஜனங்களானாலும் அப்படிப்பட்ட ஒரு குழப்பத்துக்கு அஞ்சுவார்கள். அப்படியிருக்க, நெடுநாள் அடிமையாயிருந்து விட்டதால் ஆண்மையை மறந்து, "மரணம்" என்று சொன்னாலும் மாரடைத்துக் கொள்ளக்கூடிய நம்முடைய நாட்டில் இந்தப் பொதுவுடைமைப் பேச்சு மிகவும் பீதியை உண்டாக்கிவிட்டதில் விந்தை ஒன்

றும் இல்லை. கிடைத்தமட்டிலும் பத்திரப்படுத்திக்கொண்டு, ஒவ்வொருவரும் அவரவர் மட்டில் சுகப்படுவதற்குங்கூட வகை கெட்டுப்போன இந்த நாட்டில் பொதுவாழ்வு, பொதுநலம், பொது உடைமை என்ற பதங்களின் நியாயமான பொருள்கூட புரியாது.

ஆனல் யாருக்குப் புரிந்தாலும்சரி, புரியாவிட்டாலும்சரி, எவர் விரும்பினுலும்சரி விரும்பாவிட்டாலும்சரி இந்த "சமதர்மம்" "அபேதவாதம்" "பொது உடைமை" என்ற பேச்சுக்களில் அடங்கியிருக்கிற தத்துவம் இப்போது உலகத்தில் எங்கு பார்த்தாலும் ஒரு புது உணர்ச்சியோடு உதித்து வருகின்றது. கருவில் வளரும் குழந்தையைப் போலவும், பூமியைப் பிளந்துகொண்டு வெளிக்கிளம்பும் முளையைப்போலவும், பாறைகளையும் துளைத்துக்கொண்டு போகும் பசுமரத்தின் வேர்களைப் போலவும், இந்த எண்ணம் உலகத்தில் பசித்தவர்களுடைய உள்ளத்தில் பரவி வருகின்றது. அந்த எண்ணத்தை ஏழைகளுடைய மனதிலிருந்து எவராலும் எடுத்துவிட முடியாது. இந்த சமதர்மப் பேச்சுகளுக்கு ஆட்சேபணையாக என்ன சொல்லலாமென்றல் "மனிதனுடைய இயற்கைக்கு அது பொருந்தாது. எந்தக் காலத்திலும் மனிதனுக்கு மனிதன் 'சமம்' என்பதும் உடைமையெல்லாம் 'பொது' என்பதும் இருக்கவே முடியாது. கட்டாயப்படுத்தி அப்படி ஒரு சமுதாயத்தை அமைத்தாலும்

அது நீடித்து நிற்காது. சமதர்மக் கொள்கைகளைச் சம்மதமாக்கி நடந்து வருகின்ற ருஷியாவிலும் கூட 'இது முடியாது' என்பதற்கான அறிகுறிகள் தலைகாட்ட ஆரம்பித்துவிட்டன" என்றெல்லாம் சொல்லலாம்—இதில் ஓரளவு உண்மையும் இருக்கலாம், அல்லது முற்றிலுமே உண்மையாக முடியலாம். இருந்தாலும் உலக ஜாதகத்தின் இந்த தெசையில் இந்த சமதர்ம எண்ணத்தைவிட வேறு எந்தப் பேச்சும் ஏழைகளுடைய மனதில் ஏறவே ஏறாது. அது வந்தே தீரும். போகவேண்டுமானாலும் வந்தே தான் போகும். ஏனென்றால் பட்டினியால்வாடி வருந்தும் மிகப்பெரும்பான்மையான மனிதவர்க்கத்தின் வயிறு எரிகின்றது. மனம் கொதிக்கின்றது. கைகால்கள் எதைச் செய்தாலும் சரி கொஞ்சம் சோறு கிடைத்தால் போதுமென்று துடிக்கின்றன. "தனி ஒருவனுக்கு உணவில்லையெனில் ஜகத்தினை அழித்திடுவோம்" என்ற பாரதியாரின் பாட்டு எந்த உணர்ச்சியிலிருந்து எழுந்ததோ, அதே உணர்ச்சிதான் இப்போது ஏழை மக்களைத் தூண்டி சமதர்மம் என்றும் பொது உடைமை என்றும் துடிக்கச் செய்கின்றது. அதை அடக்க முயலுவது அறிவுடைமை ஆகாது. அணைந்து, வகை செய்து, வழி காட்டுவதே அறிவுடைமை ஆகும். பழைய காலத்திலிருந்த ஜாதிவித்தியாசங்களும் சமுதாய அமைப்புகளும் பழைய காலத்

துக்குச் சரியானவைகளாக இருந்தன. இந்தக் காலத்துக்கு அவை மிகவும் பொருந்தாமலிருப்பதை நாம் பார்க்கிறோம். அதைப்போலவே பழைய காலத்திலிருந்த பொருளாதார அமைப்பும் பழையகாலத்துக்குத் தான் உதவிற்று. இந்தக்காலத்துக்கு உதவாது. புதுப்புது மாறுதல்களுக்குத் தக்கபடி ஒரு புது சமுதாயத்தையும் பொருளாதார அமைப்பையும் உண்டாக்கவேண்டியது மிகவும் அவசியம். ஜாதி மத வித்தியாசங்களாலுண்டான தீமைகளை ஒழித்த ஒரு சமுதாயம் அமையவேண்டும் என்பதைவிட பொருளாதார வித்தியாசங்களாலிருக்கிற தீமைகளைத் தீர்க்கக்கூடிய ஒரு புது சமுதாயம் அமையவேண்டுமென்பதே அவசரமான அவசியம்.

ஆகையினால் ஐரோப்பிய நாடுகளின் அனுபவத்தையும், நம்முடைய நாகரிகத்தின் அறிவையும் கூட்டி, இரத்தக் களறியில்லாமல் அன்பின் வழியிலேயே ஒரு சமதர்ம சம்பிரதாயத்தை உண்டாக்க நாமெல்லாம் வழி செய்யவேண்டும். அதற்கு அரசாங்க அதிகாரம் நம்முடைய கையில் இருக்கவேண்டும். அரசாங்கத்தின் சம்மதத்தை நம்மதாக்காமல் சமதர்ம முயற்சிகள் செய்தால் அடிதடியிலும் அநியாயங்களிலும் தான் கொண்டுபோய்ச் சேர்க்கும். அரசாங்க அதிகாரத்தை நம்முடையதாக்கும் நாட்டத்தில்தான் இப்போது காங்கிரஸ் இருந்து வருகின்றது. இந்த சமயத்

தில் 'சமதர்ம' தர்க்கங்களில் காங்கிரஸ் இறங்கிவிடுவது நல்லதல்ல. தலைசிறந்த சமதர்மியாகிய ஜவஹர்லால் நேருவும் இந்தப் பேச்சு இப்போதைக்கு கவனிக்க வேண்டிய விஷயமேயொழிய காரியத்துக்கான விஷயம் அல்லவென்பதை விளக்கியிருக்கின்றார். ஆகையினால் காங்கிரஸ்காரர்கள் இதைப்பற்றிக் கலக்கமுறக் காரணமில்லை. பொது ஜனங்களும் இதைப்பற்றி பயப்படவேண்டியதில்லை. ஏனென்றால் அரசாங்க அதிகாரம் நம்மதாகின்றபோது, எல்லா மக்களுக்கும் சமசௌகரியங்கள் கிடைக்கக் கூடிய பொருளாதாரச் சட்டதிட்டங்களைச் செய்வதற்கு, இப்போதிருந்தே அதை ஆலோசிக்க வேண்டும் என்பதுதான் அதி தீவிர சமதர்ம வாதிகளுக்கும் இப்போது ஆசை. பேசிப்பேசிப் பார்த்து, தர்க்கம் செய்து செய்து பார்த்து, எல்லாருக்கும் சம்மதமானதும், இந்திய மனப்பான்மைக்கு ஏற்றதானதும், மேல்நாடுகளில் நடக்கும் தீமைகள் இல்லாததுமான ஒரு சமதர்ம சாம்ராஜ்யத்தை உண்டாக்க வேண்டுமென்பதை எல்லாரும் ஒப்புக்கொள்ள வேண்டியதுதான்.

அபேதவாதம், சமதர்மம், பொது உடைமை என்ற புதுப்புது பெயர்கள், சுலபமாகப் பிரித்துப் பார்க்கமுடியாதபடி ஒன்றோடொன்று பின்னலிட்டு நம்முடைய எண்ணங்களைப் பேதிக்கின்றன. இந்தப் பேச்சுகள்

ஏழைகளுக்கு ஏதோ இன்பம் தருவது போலிருக்கிறது. மற்றவர்களுக்கு என்னவோ துன்பம் வருவது போல் எண்ணுகிறார்கள். சமதர்ம எண்ணங்கள் பரவுவதை நாம் தடுக்கவே முடியாது. ஆதலின் நாமெல்லோரும் இந்தச் சமதர்மப் பேச்சுகளைக் கூசாமல் பேசிப் பார்த்து, அவைகள் நாம் உண்டாக்கப் போகிற அரசியல் முறைகளுக்கு எவ்வளவு தூரம் அனுகூலமாக இருக்கும் என்பதை ஆராய வேண்டியதுதான்.

இந்த வார்த்தைகளின் வித்தியாசங்களும், அவற்றிற்கான தத்துவங்களும் எப்படியிருந்தாலும், இந்த எண்ணங்கள் மக்களிடையே இவ்வளவு தீவிரமாகப் பரவமுடிந்ததன் காரணங்களைக் கவனித்தே ஆகவேண்டும். கவனிக்காவிட்டால் ஆபத்து. நம்மை அவை கவிழ்த்துவிடும். பிறகு நாம் கோரும் ஒரு நல்லரசை நாட்டமுடியாது.

எங்கே பார்த்தாலும் பெரும்பான்மை ஜனங்கள் பசிக்குக் கஞ்சிகூடக் கிடைக்காமல் பரதவிக்கின்றார்கள். பட்டினியின் கொடுமையால் அவர்கள் நெஞ்சம் குமுறுகின்றது. வறுமை அவர்களை வாட்டி விட்டது. அவர்கள் பொறுமையையும் ஓட்டிவிட்டது. பாடுபடும் பலகோடி மக்கள் பட்டினி கிடந்து பதைக்கும்போது, உழைப்பில்லா சிலர்மட்டும் உலகத்தின் செல்வத்தையெல்லாம் தாங்களே வைத்துக் கொண்டு அவசியமில்லாத ஆடம்

பரங்களில் அவற்றை அழித்துக் களிப்பது ஏனே என்ற எண்ணம் எல்லாரையும் இழுக்கின்றது. இதுதான் ரகசியம். சமதர்மப் பேச்சுகளை எதிர்க்கின்றவர்களும்கூட இதை இல்லையென முடியாது.

அதனல் நாம் இதுவரையிலும் கொண்டிருந்த பல நம்பிக்கைகளையும் வழக்கங்களையும் இந்தப் புதுப் பேச்சுகள் புரட்டுகின்றன. இதுவரையிலும் பணக்காரனென்றும் ஏழையென்றும் பாகுபாடு இருப்பது சகஜந்தான் என்றே எண்ணினேம். பணமுள்ளவர்களெல்லாம், அவர்கள் செய்த நல்வினைப்பயனுக சுகத்தை அனுபவிக்கப் பிறந்தவர்களென்றும், ஏழைகளெல்லாம் அவர்கள் செய்த தீவினைப்பயனுக கஷ்டப்படப் பிறந்தார்களென்றும் எண்ணி வந்தோம். இந்தக் கர்மதத்துவத்தை ஏழைகள் ஏகதேசமாக நம்பினுலும், பணக்காரர்களெல்லாம் அதுதான் சரியான நியாயமென்று அதற்காக பகவத்கீதையைப் பதம்பதமாகக்கூட பாடம் ஒப்பிக்கவும் செய்வார்கள். இந்த கர்ம தத்துவத்தையும்கூட பணக்காரர்கள், தங்களுடைய சத்கருமங்களின் பலனுகத்தான் சுகப்படுவதாகச் சொல்ல உபயோகிக்கிறுர்களேயொழிய, இப்போது ஏழைகளெல்லாம் எதிர்த்தெழுந்து பணக்காரரைப் பழித்துப் பேசுவதும் பணக்காரர்கள் ஏழைகளுக்குச் செய்த பாப கர்மங்களின் பலன்தான் என்பதை

மட்டும் எண்ணக்கூட மாட்டார்கள். கடந்த ஒரு நூற்றாண்டின் உலக சரித்திரத்தைக் கவன மாகப் படித்தால், இந்தக் காலத்தில் தோன்றிய பணக்காரர்கள் வெறும் சோம் பேறிகளாக, சுகபோகங்களுக்கே உயிர் சுமந்தவர்களாகி, பொதுஜன நம்மையையும் ஏழைகளுக்கு இரங்குவதையும் எண்ணவே இல்லையென்பதை அறியலாம். அதனால் கொஞ்சங் கொஞ்சமாக இவர்களுக்கு ஏழை கள் மரியாதை காட்டுவது குறைந்துகொண்டே வந்திருக்கிறது. ஏனெனில் இதற்கு முன் பணக்காரர்கள் ஏதோ உயர்ந்த அந்தஸ்துகளை எண்ணினார்கள் என்றாலும், இப்போதிருப்பது போல இவ்வளவு ஜனங்களை உணவும் உடையு மில்லாமல் தவிக்கவிட்டதில்லை. ஆங்காங்கே பல பணக்காரர்களுடைய வீடுகளிலும் பண்ணை களிலும் பாமர மக்கள் பல அனுகூலங்களை அடைந்து அடங்கியிருந்துவிட்டார்கள். பணக் காரர்கள் சந்ததியில் வந்த பிற்காலத்திய சோம்பேறிச் சுகவாசிகள், எளியவர்களுடைய கஷ்டங்களை எண்ணாமல் விட்டுவிட்டது மல்லாமல், அரசாங்கத்தின் செல்வாக்கை சம்பாதித்துக்கொண்டு ஏழைகளை ' தங்களுக்கு வெறும் அமிஞ்சிகளாக்கி விட்டார்கள். அந்த ஏழைகள் அல்லற்பட்டு ஆற்றாது அழுத கண்ணீரே" இப்போது பொது உடைமை யென்றும், புரட்சி யென்றும், சமதர்ம மென்றும் பல தலைகளுடன் பணக்

காரர்களுடைய "செல்வத்தைத் தேய்க்கும் படை" யாக உலகில் பரவிவிட்டது. ஒரு உதாரணம்: பணக்காரர் ஒருவர் புது மோட்டாரில் நோயால் படுத்திருந்த ஓர் உறவினரைப் பார்க்க தந்திவந்து புறப்பட்டார். வழியில் ஒரு பாலத்தில் எதிரே வந்த வண்டிகளுக்காக மோட்டாரை ஒதுக்கவேண்டி வந்த அவசரத்தில் பாலத்திலிருந்த கல்லின்மீது மோட்டார் மோதி, மோட்டார் வண்டியின் முன் பாகத்தி லிருந்த 'மட்கார்டில்' ஒரு சிறு காயமுண்டாகி அங்கிருந்த சாயம் போய்விட்டது. மோட்டாரின் சொந்தக்காரர் மோட்டாருக்கு என்ன ஆபத்து நேர்ந்து விட்டதோ என்று அலறித் துடித்து, கீழே இறங்கிப் பார்த்து மோட்டாரின் அலங்காரம் குறைந்துபோனதைக்கண்டு, 'டிரைவர்' மேல் கொதித்து விழுந்தார். உடனே மோட்டாரைத் திருப்பச் சொன்னர். பின்னல் நாலு மைலிலிருந்த 'டவுனு'க்குப் போய் மோட்டார் கம்பெனியில் அந்த காயத்தைச் சரிப்படுத்தி உடனே சாயம் பூசச் செய்தார். அதே மனிதர் அதே மோட்டாரில் சில மாதங்களுக்குப் பிறகு இரண்டு சிநேகிதர்களுடனும் ஒரு வேலைக்காரனுடனும் ஒரு நாடகம் பார்க்க 'டவுனுக்கு'ப் புறப்பட்டார். எதிரில் வந்த ஒரு இரட்டை மாட்டு வண்டியிலிருந்த ஒரு புது மாடு மிகவும் மிரண்டு துள்ளிக் குதிக்க, மோட்டார் நின்றது. மோட்டாரிலிருந்த வேலைக்காரன் இறங்கி மாட்டைப்

பிடித்துக்கொள்ளப் போனன். மாடு, திடீ ரென்று பாய்ந்து வேலைக்காரன் மார்பில் பலத்த காயமுண்டாக்கித் தள்ளிவிட்டது. காயப்பட்ட வேலைக்காரனை மோட்டாரில் போட்டுக்கொண்டு டவுனுக்கு வந்த சீமான் நாடகத்துக்கு நேரமாகிவிட்டதென்று டிரை வரிடம் நூறு ரூபாய் 'நோட்' ஒன்றை "வேணு மானல் இருக்கட்டும்..............டாக்டர்................ அவரிடத்தில் நான் சொன்னதாகச் சொல்லி இவனை நன்றாகக் கவனிக்கச்சொல்லு" என்று டிரைவருடன் வேலைக்காரனை காரில் அனுப்பி விட்டு நண்பர்களுடன் நாடகத்துக்குப் போய் விட்டார். அந்த வேலைக்காரனும் பின்னல் பிழைத்துக் கொண்டான்...........இயற்கையில் அந்த பணக்காரர் மிகவும் நல்ல மனிதர். இருந் தும், முன் நோயாளியைப் பார்க்க அவசரமா கப் போகிறபோது, தன்னுடைய மோட்டாருக் குப்பட்ட சிறு காயத்தை அவ்வளவு கவலை யுடன், தானே பக்கத்திலிருந்து கவனித்த அவர், இப்போது தன்னுடைய வேலைக்கார னுக்குப்பட்ட படுகாயத்தைப்பற்றி அவ்வளவு பதைக்கவில்லை. ஏன்? தான் ஆடம்பரம் குறை யாமல் சுகப்படவே பிறந்தவரென்றும் தன் னுடைய ஆட்கள் அப்படியல்ல வென்றும் எண்ணியே அவருடைய மனம் பழகிவிட்டது. எதற்காக இதைச் சொல்லுகின்றேனென்றால், பணக்காரர்களுடைய வீட்டிலிருக்கும் வண்டி, மாடு, பூனை, நாய், சுவர், ஜன்னல், கதவு, கார்

முதலானவற்றிற்குக் கிடைக்கக்கூடிய பராமரிப்புகூட அதே வீட்டில் காலையிலிருந்து நடு ஜாமம் வரையிலும் ஓயாது வேலை செய்யும் ஒரு மனித ஜன்மத்துக்கு இருப்பதில்லை. இந்த பாபத்தின் பயனே அபேதவாதம் சமதர்மம் முதலான ஆத்திரப் பேச்சுகளாகும்.

சரி, இந்த பாபத்தை மாற்றி இனி எல்லா ஜனங்களுக்கும் கூடுமானவரையிலும் ஒரு நல் வாழ்வு கிடைப்பதற்கு நாம் என்ன செய்யலாம் என்று எண்ண வேண்டியது நமது அவசியமான கடமை. அபேதவாதம், பொது உடைமை, சமதர்மம், சோஷலிஸம், நாஸிஸம், பாஸீஸம் என்று பல பேச்சுகளைப் பாமரமக்களிடத்தில் தாறுமாறுகப் பரவவிட்டு, கோபத்தையும் கொதிப்பையும் மட்டும் உண்டாக்கி விடாமல், படித்தவர்களும் பணக்காரர்களும் இதைப்பற்றி இப்போதே ஆலோசிக்க வேண்டும்.

சிறுபான்மையோர் மட்டும் சுகப்பட்டு பெரும்பாலும் ஜனங்கள் சோறும் துணியும் கூட இல்லாம லிருப்பது, மிகவும் நியாயமில்லாத நிலைமைதான். வேலையே செய்யாத சிலர் விருந்து சாப்பிட்டுக் கொண்டேயிருக்க, உழுது பயிரிட்டு மற்ற உழைப்புகளை யெல்லாம் செய்கிற பலர், உண்ணக் கஞ்சியும் கிடைக்காமல் ஓலமிடுவதை ஒத்துக்கொள்ள முடியாது. அதற்காக நாம் என்ன செய்ய வேண்டும்? ஐரோப்பாவில் சமதர்மம் ஏற்படுத்தப்பட்ட நாடுகளில்

நடந்தமாதிரி இங்கேயும் ஒரு முகூர்த்த காலத்துக்குள் பணக்காரர்களுடைய சொத்துக்களையெல்லாம் பறிமுதல் செய்துவிடலாமா? அதை எதிர்க்கின்ற பணக்காரர்களை அடித்தோ, கொன்றோ, சிறைப்படுத்தியோ அடக்கிவிடலாமா? சொல்லுங்கள். இங்கேதான் நமக்கு குழப்ப முண்டாகின்றது. நாம் அபேதவாதத்தைப் பற்றிப் பேசும்போதெல்லாம், மேல் நாட்டில் அபேதவாத நாடுகளில் நடந்த முறைகளை மனதில் வைத்துக்கொண்டுதான் பேசுகின்றோம். அரசர்களை அப்புறப்படுத்தியும், பணக்காரர்களைப் பலியிட்டும், கொடுக்க மறுத்தவர்கள் உரிமைகளைக் கொள்ளையடித்தும், இவற்றைச் செய்யக்கூடாது என்றவர்களை எல்லாம் கொன்றும் சமதர்மம் உண்டாக்கிய ஐரோப்பிய நாடு ஒன்றிலாவது சமாதானம் இருப்பதாகத் தெரியவில்லை. அங்கே நடந்ததும் நடப்பதுமான சமதர்மம், சமதர்மம் அல்ல. அது கொள்ளையும் கொலையுமே ஆகும். அங்கே நடந்துவரும் அரசாட்சி கடுமையினால்தான் காக்கப்படுகின்றது. சமதர்மத்தை எந்த முறையில் சாதிப்பது என்பதைத் தெளிவு செய்து கொள்ளாமல், குடியானவர்களையெல்லாம் கூட்ட வேண்டுமென்றும், தொழிலாளிகளின் கட்டுப்பாட்டை தொகுக்க வேண்டுமென்றும், உழைப்பாளிகளெல்லாம் ஒன்று சேர வேண்டுமென்றும், பலபல பேச்சுகளை வேகமாகப் பேசுவதால் தீமையே விளையும்.

ஏழைகளுக்கு இருப்பிடமும், சோறும் துணியும் வேண்டியது மிகவும் அவசரமானதுதான். இதற்காக ஏழைகளும்கூட சோற்றுக்காகவும் துணிக்காகவும் தங்களுடைய அன்பையும் அறிவையும் ஆன்ம உணர்ச்சியையும் விற்றுவிடும்படியான வேகத்தை நாம் விருத்திசெய்துவிடக்கூடாது.

நான் 'சோஷலிஸ்ட்' என்று சொல்லிக்கொள்ளத் தகுந்த கூட்டத்தைச் சேர்ந்தவன் அல்ல. நான் ஒரு வெறும் காங்கிரஸ்காரன். இருந்தாலும் இந்த 'சோஷியலிசம்' என்பதன் தத்துவங்களை வெகு விசாரணையோடு கவனித்துவருகின்றேன். இந்த சமதர்ம உணர்ச்சி மிகவும் போற்றத்தகுந்த ஓர் உயர்ந்த உணர்ச்சி. எல்லா மனிதர்களுக்கும் நல்ல உணவும், நல்ல உடையும், நல்ல படிப்பும், நல்ல வீடும் இன்னும் மற்ற நலன்களும் கிடைக்கும் படியான அரசாங்கம் அமையவேண்டும் என்பதில் யாருக்குத்தான் ஆசை இருக்காது? எல்லா மனிதர்களுக்கும் அன்னவஸ்திரம் கிடைக்கச் செய்யவேண்டுமென்பதை எல்லா நாடுகளிலும் எப்போதும் சொல்லியே வந்திருக்கிறார்கள். நம்முடைய நாட்டிலுள்ள இலக்கியங்களும் பழக்கங்களும் இதை அன்னதானம், வஸ்திரதானம், வித்யாதானம், என்ற பெயர்களால் தனிப்பட்ட மனிதர்களோ, குடும்பங்களோ செய்யவேண்டிய தர்மங்களாக வற்புறுத்துகின்றன. இந்த தானங்களை இனி

அரசாங்கமே செய்யவேண்டிய கடமைகளாக வும், இதுவரையிலும் தானமாக வாங்கிய மக்கள் இனி அதைப் பிச்சையாகப் பெருமல் தாங்கள் செய்யும் வேலைக்கு சன்மானமாக ஒரு கண்ணியமான முறையில் அடையவேண் டும் என்பதும் தான் "சோஷயலிசம்" என்ப தன் சுருக்கம். இந்தக் கொள்கையை மக்க ளிடையே பரப்புவதில் ஒரு பாபமும் இல்லை. ஆனால் இந்த சமதர்மப் பேச்சோடு நமக்கு உதிக்கின்ற அன்னிய மனப்பான்மையினுல் தான் அச்சம் வருகின்றது. சமதர்மத்தைச் சொல்லுகின்றவர்களில் பெரும் பகுதியும், கேட்கின்றவர்களில் பெரும் பகுதியும், அதைப் பற்றி ஒரு அன்னிய மனப்பான்மையோடு தான் சொல்லுகிருர்கள், கேட்கிருர்கள். பலாத் காரமே மிகுந்து ஜீவகாருண்யமே இல்லாத முறைகளில் ஜனித்ததாக மதிக்கப்படுகின்ற இந்த மேல்நாட்டு "சோஷிலிசத்தில்" பயமும் எதிர்ப்பும்தான் உண்டாகும். ஆனல் சமதர் மம் அதுவல்ல. சமதர்மம் "சோஷியலிசம்" என்ற பேச்சைக்கண்டு பயப்படத் தேவை யில்லை. பயப்படுத்துவதுபோல அது வந்தா லும், நாம் அதற்கு பயப்படாமலும், எதிர்த்து நிற்காமலும், ஒதுங்கி நின்று அருகில் சென்று, அதைப்பிடித்து லகானிட்டுச் சவாரி செய்து அதை நம்முடைய ஏவலைக்கேட்கும் வாகன மாக்கி, அதைப்போன்ற பழைய வாகனங்கள் பல இருக்கின்ற நம்முடைய லாயத்தில் கட்டி

வைத்துக் கொள்ளவேண்டும். இல்லையானல் அது மருண்டு ஓடி மக்களை மருளச் செய்து கொண்டேயிருக்கும்.

கொஞ்ச காலத்துக்கு முன்னல் காந்தியடிகள் நம்முடைய நாட்டில் "ராம ராஜ்யத்தை" ஏற்படுத்தவேண்டும் என்று சொல்லிக் கொண்டிருந்ததை நாம் அறிவோம். மகாத்மாவிடத்தில் பயபக்தியுள்ளவர்களிலும்கூட பலர், என்னமோ காந்தி புராண ராஜ்யத்தைப் பேசுகின்ருர் என்று புறக்கணித்தார்கள். இன்னும் சிலர் "எங்களுக்கு ராமராஜ்யம் வேண்டியதில்லை. சுயராஜ்யம்தான் வேண்டும்" என்று ஏளனமும் பேசினர்கள்.

காந்தியடிகள் சொன்ன ராமராஜ்யம் எதுவோ எனக்குத் தெரியாது. நம்முடைய தமிழ் நாகரிகத்தின் தனிக்கவியாகிய கம்பர் சொல்லுகின்ற "ராமாயண ராஜ்யத்"தைக் கொஞ்சம் சொல்லுகிறேன், கேளுங்கள்; கம்பர் சொல்லுகின்ற நாட்டில்:—

"ஆற்றல் நல் அறம் அல்லது இலாமையால்
ஏற்றம் அல்லது இழிதகவு இல்லையே."

'எல்லா குடிஜனங்களும் தர்ம அதர்மங்களை அறிந்து நடக்கக்கூடியவர்களானதால் அந்த நாட்டில் எல்லாரும் உயர்ந்தவர்களேயல்லாமல் தாழ்ந்த வகுப்பென்று எவரும் இல்லை' பின்னும்

'வன்மை இல்லை, ஓர் வறுமை இன்மையால்;
திண்மை இல்லை, நேர் செறுநர் இன்மையால்;
உண்மை இல்லை, பொய் உரை இலாமையால்
வெண்மை இல்லை, பல் கேள்வி மேவலால்'

'அந்த நாட்டில் தரித்திரம் என்பதே இல்லாததால் தானம் என்பதும் இல்லை. சண்டையே இல்லாததால் பலசாலி என்பவனே கிடையாது. பொய் பேசுகின்றவர் ஒருவரும் இல்லாததால் உண்மை என்ற பேச்சே இல்லை. எல்லாரும் நல்ல கேள்வி ஞானம் உடையவர்களானதால் அறியாமை என்பதே அங்கு இல்லை. மேலும்,

'கல்லாது நிற்பார் பிறர் இன்மையின் கல்விமுற்ற
வல்லாரும் இல்லை, அவை வல்லர் அல்லாரும் இல்லை
எல்லாரும் எல்லாப் பெரும் செல்வமும் எய்தலாலே
இல்லாரும் இல்லை உடையாரும் இல்லை மாதோ!'

'அந்த நாட்டில் படிப்பில்லாதவர் ஒருவரும் இல்லாததாலே மிக்கப் படித்தவர் என்று எவரும் இல்லை. சபையில் சாமர்த்தியமாகப் பேசத்தெரியாதவர்களும் இல்லை. அங்குள்ள எல்லா ஜனங்களும் எல்லாச் சம்பத்துகளையும் அடைந்து அனுபவித்து வந்ததினால் ஏழை என்பவரும் அங்கில்லை, பணக்காரர் என்பவரும் அங்கில்லை.' இதைவிடப் 'பொது உடைமை' சாம்ராஜ்யம் எப்படி இருக்கமுடியும்? அந்த நாட்டில் எல்லாருக்கும் எல்லா சுகங்களும் சுலபமாகக் கிடைக்குமாம். 'சமதர்மம்' கோருவது இதைத்தான் அல்லவா? அன்றியும், அந்த

நாட்டு அரசன் குடிகளை எப்படிப் பாதுகாத்தான் என்றால் :—

"தாயொக்கும் அன்பில்; தவம் ஒக்கும் நலம்பயப்பின்
சேய் ஒக்கும் முன்னின்று ஒரு செல்கதி உய்க்கும்
நீரால்
நோய் ஒக்குமென்னின் மருந்தொக்கும்; நுணங்கு
கேள்வி
ஆயப்புகுங்கால் அறிவொக்கும் எவர்க்கும் அன்னான்"

இந்தப் பாட்டு மிகவும் அருமையான பாட்டு. சமதர்ம அரசாங்கத்தின் எல்லா அம்சங்களும் இதில் அடங்கியிருக்கின்றன. இந்தச் செய்யுளை விரித்து உரை சொன்னால், வியக்கத்தக்கதாக இருக்கும். கருத்தை மட்டும் பாருங்கள். "அந்த நாட்டின் அரசன் அங்குள்ள சர்வ ஜனங்களுக்கும், ஒரு தாய் எப்படி தான்பெற்ற எல்லா குழந்தைகளிடத்திலும் தனித்தனியே சமமான அன்புகாட்டுவாளோ அப்படிச் சமமான அன்பு காட்டுவான். புண்ணியம் செய்யாததால் சௌகரியம் இல்லாதவன் என்று சொல்லக்கூடிய யாராவது அந்த நாட்டில் இருந்தால் அரசன் அவர்களுக்குப் புண்ணியம் வந்து உதவினதுபோல உதவி, அவர்களே தங்களுக்கு வேண்டிய சுகங்களையெல்லாம் தேடிக்கொள்ளும்படி வசதிகள் உள்ள வேலை தருவான். தாங்களே வேலை செய்து சம்பாதித்துக்கொள்ளமுடியாத கிழடு, குருடு, நொண்டி முடம் இவர்களையெல்லாம் வயசான தாய் தந்தையருக்கு, எப்படி மகன் அவர்களுக்கு

வேண்டியதையெல்லாம் முன்னால் நின்று செய்துகொடுத்து அவர்களைச் சாகிற வரையிலும் பராமரிப்பானே, அதைப்போலவே அரசனும் அந்த முடியாதவர்களை அவர்கள் சாகிறவரையிலும் பாதுகாப்பான். தன் குடிகளில் யாருக்காவது நோய் வந்துவிட்டால் அரசனே நோயாளி இருக்குமிடத்துக்கு வந்து உதவுவான். நுட்பமான கலைகளைக் கண்டறியத் தகுதியுள்ள ஆராய்ச்சிக்கார அறிஞர்களுக்கு, அறிவுவந்து உதவுவது போல உதவி, அவர்களுக்கு எல்லா சௌகரியங்களையும் செய்துகொடுத்து அறிவை விருத்தி செய்யச் செய்வான்" என்பதுதான் இந்தப் பாட்டின் கருத்து. இத்தனை கருத்துக்களும் இந்தப் பாட்டில் இருக்கின்றனவா என்று சிலர் சந்தேகிக்கலாம். இவ்வளவும் இருக்கின்றன. இன்னும் இதற்கு மேலேயும் சொல்லவேண்டும். இந்தப் பாட்டில் "அரசன்" என்று இருக்கிற இடங்களில் "அரசாங்கம்" என்று வைத்துக்கொண்டு மட்டும் பாருங்கள். இந்தக் காலத்தில் நடந்து வருகின்ற, அல்லது நடக்க வேண்டும் என்று விரும்பக்கூடிய எந்தச் சமதர்ம அரசாங்கத்துக்காவது இது குறைந்ததா என்று பாருங்கள். சமதர்ம அரசாங்கம் இதைவிட அதிகமாக ஒன்றையும் செய்யமுடியாது.

தமிழ்நாட்டிலோ அல்லது வேறு நாட்டிலோ இப்படிப்பட்ட ஓர் அரசாங்கம் இருந்ததாக நமக்குச் சரித்திரபூர்வமாய் ஒரு ஆதாரமும்

இல்லையென்று சொன்னாலும், சுமார் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னாலேயே தமிழனுடைய மனோலோகத்திலாவது நிச்சயமாக இருந்திருக்கிற "சமதர்மப் பொது உடமை" அரசாங்கம் இது என்பதை இப்பாட்டுகள் காட்டுகின்றன. இப்படிப்பட்ட ஒரு சமதர்ம சாம்ராஜ்யத்தை உண்டாக்க யாரும் ஒத்துக்கொள்ளுவார்கள். அன்னிய மனப்பான்மையை அடியோடு விட்டுவிட்டு, சரியான முறையில் பிரசாரம் செய்தால் இது வெகு சுலபமான காரியமென்றே சொல்லலாம். சமதர்மம் பேசுகின்றவர்களிர் பலர், சமதர்மத்தை எண்ணுகின்ற அன்னிய நாடுகளில் நடக்கின்ற ஹிம்சைகளுக்குச் சரியான சமாதானம் சொல்லலாம். இங்கேயும் ஹிம்சை ஏற்படலாம் என்று ஜனங்கள் பயப்பட இடங்கொடுப்பதால் தான், சமதர்மப் பேச்சுக்கு இவ்வளவு சலிப்பும் எதிர்ப்பும் இருக்கின்றன. சமதர்மத்தைப்பேசுகின்றவர்களில் பலர் வெகு வீராவேசத்துடன், கேட்கிறவர்கள் கிலி கொள்ளும்படியாகப் பேசுகின்றார்கள். அஹிம்சையை ஒத்துக்கொள்ளுகிறார்களென்றாலும், ஹிம்சை வந்தாலும் பயப்படமாட்டோம் என்று பேசுவதால், இவர்கள் ஹிம்சையைத்தான் எண்ணுகின்றார்களோ என்ற சந்தேகம் உண்டாகின்றது. சுயராஜ்யம் வந்த பிற்பாடுதான் சமதர்மத்தைப்பற்றி தீர்மானிப்போம், இப்போதில்லை என்று சொல்லுவது சரியே. சுயராஜ்யம் சித்திக்கிற

வரைக்குமாவது சமதர்ம ராஜ்யத்துக்காகவோ, சாதாரணராஜ்யத்துக்காகவோ நம்முடைய மார்க்கம் அஹிம்சை ஒன்றுதானு, அல்லது ஹிம்சையும் கூடத்தான் என்று எண்ணுகின்றோமா என்பதை நிச்சயித்துக்கொள்ள வேண்டும்.

நாட்டியக்கலை



‘‘பரதம் எனப்பெயர் பகர்வார் என்னினும்
சரதம் நாட்டியம் தமிழன் வளர்த்தது
வடவரை முதலாய்க் கன்னி வரையிலும்
நடைபெறக் காணும் நாட்டிய வகையில்
நந்தமிழ் நாட்டின் நட்டுவக் கலையே
நிந்தையில்லாத கலைச்சுவை நிறைந்தது
அன்னிய நாட்டார் ஆடல் அனைத்தும்
நன்னயம் இசையா நடப்பும் குதிப்புமே
பாடலின் கருத்துகள் பண்ணொடும் பொருந்த
ஆடலின் அபிநயம் அறிவுடன் அமையும்
அருமைத் தமிழின் ஆடற் கலையின்
பெருமை முற்றிலும் பேசவும் எளிதோ!
ஆண்டுகள் ஆயிரம் ஆயிரம் முன்னே
பாண்டிய மன்னர் பார்வையில் வளர்ந்து
வளங்கள் மிகுந்து வரிசையில் வாழ்ந்து
இளங்கோ அடிகள் இசை மொழி பெற்று
சேரன் நாட்டிலும் சிலநாள் தங்கி

நீரம் முழுவதும் தெய்விகம் திகழப்
பூவிரி சோலையும் வயல்களும் பொலியும்
காவிரி யாற்றின் கரைகளில் நடந்து
கலைகளை யெல்லாம் கட்டிக் காத்து
நிலைகொளச் செய்த நெறிமுறை அரசுடை
சோழ நாட்டைச் சுகமெனக் கண்டு
வாழும் வீட்டை அங்கே வகுத்து
சீரும் சிறப்புடன் செழித்துக் களித்து
பேரும் புகழும் பெருமையும் பெற்று
வந்திடும் அன்னியர் வாழ்த்தி வணங்க
இந்திய நாட்டின் புகழுக் கிடமாய்
நெடுநாள் உலகில் புகழுடன் நின்றபின்
கெடுநாள் எதற்கும் கிட்டிடும் இயல்பால்
சோழ மன்னர்கள் சுருங்கிய பின்னர்
ஏழ்மையிற் பட்டு இலக்கணம் கெட்டு
தஞ்சையை ஆண்ட மராட்டியர் தயவால்
கொஞ்ச நாள் மீண்டும் குறைவிலாதிருந்து
அன்னிய சூட்சியில் அடிமைகள் ஆனபின்
தன்னுடைக் கலையெனத் தாங்கிடத் தக்க
அரசாங் கத்தின் ஆதர வின்றி
விரசே எல்லா வீழ்ச்சியும் விரவ
தாசியம் செய்து கோவிலில் தங்கி
வேசியர் வீட்டின் வேலை யாளாகி
கலையின் பெருமை கடுகள வறியார்
விலையில் வாங்கி விருந்தெனக் காட்டும்
பணக்காரர் வீட்டுக் கலியாணப் பகட்டாய்
குணக் கேடுள்ளவர் கூட்டத்தில் ஆடும் [பின்
சோற்றுக் காணதோர் தொழிலாய்ப் போன

ஏற்றம் குறைந்து இருந்திட நேர்ந்தும்
ஜீவசக்திகள் சிறந்திருந்ததனால்
தீவிரமாகத் திரும்பவும் தளிர்த்து
சொந்தக் கலைகளைத் துலங்க வைத்திட
இந்திய மக்களின் எழுச்சியோ டெழுந்து,
சுதந்திர உணர்ச்சியில் தோன்றிய துணிபுடன்
இதந்தர வந்துள இயக்கங்களினால்
புத்துயிர் பெற்றுப் புதுமணம் வீசி
இத்தினம் உலகிலே எவரும் விரும்பிடும்
தமிழன் நட்டுவம் தனிப் புகழ்கொண்டது
நமதெனும் பெருமை நாமுறல் வேண்டும்."

பிராமணர் — பிராமணரல்லாதார்

தேச பக்தர்களே, நமது தமிழ் நாட்டில் பிராமணர் - பிராமணரல்லாதார் என்ற மனஸ்தாபம் நாளுக்குநாள் அதிகப்பட்டு வருகின்றது. அது பாமர மக்களுக்கு ஒரு தப்பான வழியைக்காட்டி, பண்டிதர்களையும் கலக்கி, பொதுஜன சேவையில் ஈடுபட்டிருக்கிற பிராமணர்களையும் பிராமணரல்லாதாரையும் மிகவும் வருத்தப்படுத்தி வருகின்றது. இந்தக் கலக்கத்தைத் தெளியவைத்தால்தான் தமிழ் நாட்டில் எந்த விதமான பொதுஜன ஊழியமும் சரிவர நடக்கும். என்னை ஒரு பிராமணரல்லாதவன் என்பார்கள். அந்த முறையில் நான் அதைப்பற்றிப் பேசவேண்டிய அவசியமும் பொறுப்பும் எனக்கு இருப்பதை நீங்கள் ஆதரிப்பீர்களென்றே நம்புகின்றேன்.

இந்தப் பிராமண-பிராமணரல்லாத சச்சரவிற்கு பிராமணர்களுடைய குற்றங் குறைகள் எவையானாலும் அவற்றைப்பற்றி அவர்களுக்கு எடுத்துப் பேச பிராமணர்களுக்குள்ளேயே பலபேர் இருக்கின்றார்கள். அந்த வேலையை அவர்களுக்கே விட்டு விட்டு, பிராமணரல்லாதார் கவனிக்கவேண்டிய விஷயங்களை மட்டும் நான் பேசுகின்றேன். அவற்றை வெகு நிதானமாக நிறுத்துப் பார்க்கும்படி பிராமணரல்லாத ஒவ்வொருவரையும் நான் கெஞ்சிக் கேட்டுக்கொள்ளுகின்றேன். பிராமணரல்லாத இயக்கத்தையாவது அதன் தலைவர்களையாவது அவமதிக்க வேண்டுமென்பது என் ஆசையல்ல. பிராமணர்களைப் போலவே மற்ற எல்லா மக்களும் சகல விதங்களிலும் முன்னேற்றமும் செல்வாக்கும் அடைய வேண்டுமென்று சொல்லப்படுகின்ற அவர்களுடைய நோக்கத்தை நான் மிகவும் ஆதரிக்கின்றேன். அனேக விஷயங்களில் அவர்களுக்குள்ள அபிப்பிராய பேதங்களையும் நான் மதிக்கின்றேன். ஆனால் அவர்கள் செய்து வரும் மிகவும் தவறான பிரசாரத்தில் என்னைப் போன்ற பிராமணரல்லாதார் பலருக்கு இருந்துவரும் அபிப்பிராய பேதத்தை இந்தத் தமிழ் நாட்டிலுள்ள எல்லா பிராமணரல்லாதாருக்கும் எடுத்துச் சொல்லவேண்டியது என்னுடைய கடமையென்றும், அதற்கு இதுவே தக்க தருணமென்றும் உணர்கின்றேன். என்

ளோடு மாறுபட்டவர்களையும் நான் வேண்டிக் கொள்வது ஒன்றே ஒன்று. அது என்ன வெனில் நான் சொல்லுவதை மனக்கொதிப் பின்றி மதிப்பிட வேண்டும் என்பதே.

பிராமணர்கள் எல்லாரும் சூழ்ச்சிக்காரர்க ளென்றும், சூதுக்காரர்களென்றும், பிற ஜாதி யாரைக் கெடுத்தே ஜீவனம் செய்யும் பித்த லாட்டக்காரர்க ளென்றும் செய்யப்படும் ஒரு பிரசாரத்தை என்னவென்று சொல்வது! இந் தப் பிரசாரத்துக்கென்று நடத்தப்பட்டு வரும் தமிழ் பத்திரிகைகளும், அவற்றை ஆதரிக்கும் தலைவர்களும் பிரயோகப்படுத்துகின்ற மிகக் கொச்சையான வார்த்தைகளை நினைக்கவும் கூட மனம் கூசுகின்றது. அப்படி ஒரு சமூ கத்தை ஏகோபித்து அவமதிப்பது அன்பல்ல, அழகல்ல; ஆண்மையும் ஆகாது. பிராமண ரல்லாத தமிழர்களின்பேரால் இப்படி ஒரு சமூகத்தை ஒருங்கே இழிவுபடுத்திப் பேசுவ தைக் கேட்கும்போதெல்லாம் பிராமணரல் லாத என் மனம் நாணுகின்றது; தலை குனிகின்றது; பகுத்தறிவு பதைக்கின்றது; சுயமரியாதை சுருங்குகின்றது; நீதி நிந்திக் கின்றது; நேர்மை சிந்திக்கின்றது. தமிழ் எழுத்துக்களில் அந்தக் கொச்சைப் பதங்களும் எண்ணங்களும் அச்சிட்டிருப்பதைப் பார்க்கும் போதெல்லாம் என்னுடைய தாய்மொழி இவ்வ ளவு அசுத்தப்படுத்தப்பட்டு வருகின்றதே யென்று என் மனம தவிக்கின்றது. தமிழ்

நாட்டின் பெருமையையும் தமிழ் மொழியின் அருமையையும் காக்கக் கடமைப்பட்ட தமிழர்கள் இந்த மிலேச்சப் பிரசாரத்தைத் தடுக்க வேண்டும். தன்னைச் சொன்னால் கோபத்தையும் கொதிப்பையும் உண்டாக்கக்கூடிய வார்த்தைகளை தான் பிறர்மேல் சொல்லுகின்றதைத் தமிழர்கள் தள்ளிவைக்கவேண்டும். பிராமணர்கள் இதைப்பற்றி வருத்தப்பட்டாலும் படாவிட்டாலும், பிராமண ரல்லாதாருக்கே இந்த பிரசாரம் பெரும்பிழை புரிவதாகும். சரித்திரம் அறிந்தநாள் முதற்கொண்டு, பல்லாயிரம் வருஷங்களாக எல்லா வகுப்பினரும் இத் தமிழ்நாட்டில் மருவிக்கலந்து வாழ்ந்து வந்திருப்பதைத் தமிழர்களுடைய சரித்திரமும் இலக்கியங்களும் நன்றாகக் காட்டும். கல்வி சிறந்த இத் தமிழ்நாட்டின் கலைகளிலும் இலக்கியங்களிலும் பிரித்துப்பேச முடியாதபடி பின்னிக்கிடக்கும் பிராமண சமூகத்தை ஏகோபித்து இழிவு சொல்வது தமிழர்களுடைய நாகரிகம் தற்கொலை செய்துகொள்ள முயல்வது போலிருக்கின்றது. தமிழ்நாட்டுக்கு மட்டுமல்ல இந்தியதேசம் முழுதுக்கும் பெருமை கொடுத்தவர்கள் பலர் பிறந்த ஒரு சமூகத்தைச் சிறுமை பேசுவது தருமம் அல்ல.

சங்கரர், இராமானுஜர், மத்வர் இவர்களைப் பெற்றெடுத்து உலகத்துக்கெல்லாம் உதவிய குலம் பார்ப்பன குலம் அல்லவா? ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சர், தயாநந்த சரஸ்வதி, ரமண

மகரிஷி இவர்களைத் தந்த ஜாதியை இழித்துரைப்பதால் எவருக்கு என்ன லாபம்? ஸ்ரீ ரானடே: கோகலே, சுரேந்திரநாத் பனர்ஜி, முத்துசாமி ஐயர், வீரராகவாச்சார், G. சுப்ரமண்ய ஐயர், S. சுப்ரமன்ய ஐயர், அனந்தாச்சார்லு, ரகுநாத ராவ், மாதவ ராவ், வ. வெ. சு. ஐயர், சுப்ரமன்ய பாரதி இவர்களை யெல்லாம் ஈன்றெடுத்தது பார்ப்பன குலம் அல்லவா?

இற்றைக்கு நூறு வருஷங்களுக்கு முன்னுலேயே ஹிந்துமதத்தில் அர்த்தமில்லாமல் கலந்துவிட்ட பல கொடிய பழக்கங்களையெல்லாம் வெகு பலமாகக் கண்டித்தவரும், அதற்காகத் தந்தையால் வெறுக்கப்பட்டு வீட்டைவிட்டு ஓட்டப்பட்டவரும், பிறகு தாமாகத் தேடிக்கொண்ட செல்வாக்கினுல் ஹிந்துப் பெண்களுடைய சம உரிமைகளுக்காக ஓயாது உழைத்தவரும், உடன்கட்டை ஏறும் ஒவ்வாத வழக்கத்தை அடியோடு ஒழித்தவரும், தீண்டாமை என்கிற அநியாய வழக்கத்தை அழிக்க வேண்டுமென்று முதல் முதல் இந்த நாட்டில் கிளர்ச்சி செய்தவரும், பிராமண ஜாதியிலே பிறந்த ராஜாராம் மோகன்ராய் அல்லவா?

சுமார் 60 வருஷங்களுக்கு முன்னுல், தாம் திருவனந்தபுரத்தில் திவானுக இருந்தபோது, சோம்பேறிப் பார்ப்பனர்களுக்குச் சோறு போடுவது தகாத காரியம் என்று, அந்தத் திருவாங்கூர் சமஸ்தானத்தில் வெகுநாளாக இருந்துவந்த 'ஊட்டுப்பெறை'களுக்கெல்லாம்

பூட்டுப்போட்ட சர் A. சேஷைய சாஸ்திரியார் பெரிய "மடிசஞ்சிப்" பார்ப்பனக் குடும்பத்தில் வந்தவரல்லவா?

தெருவில் விழுந்துவிட்ட தீண்டாதானை ஓடி யெடுத்து மடிமீதிருத்தி மயக்கம் தெளிவித்தவரும், முதன் முதல் "ப்ளேக் நோய்" இந்தியாவுக்கு வந்துவிட்டபோது பம்பாய் மாகாணமெங்கும் தீண்டப்படாதவர்கள் குடிசைகளுக்குள் வலியச்சென்று வைத்திய உதவிகளைச் செய்த தொண்டர் படைக்குத் தலைவராயுழைத்தவரும், கள்ளைக் குடிக்காத மற்ற ஜாதியாருக்கெல்லாம் ஒரு தலைவரியைப் போட்டாவது வருமானத்துக்கு வழி செய்துகொண்டு கள்ளுக்கடைகளை யெல்லாம் மூடி ஏழைக்குடும்பங்களைக் காக்கவேண்டுமென்று பலநாள் இந்த அரசாங்கத்தோடு வாதாடியவருமான ஸ்ரீ பாலகங்காதரதிலகர் பெருமான் மிகவும் வைதீக வம்சத்தில் வந்த பார்ப்பனரே யல்லவா? இந்திய நாட்டின் சுதந்திரத்திற்காகக் காந்தியடிகளுக்குக் கைபோல் உதவினவரும், கோடிக்கணக்கான தமது செல்வத்தை யெல்லாம் காங்கிரஸ் காரியங்களுக்கே கொட்டிக்கொடுத்தவரும், மிஞ்சியிருந்த தம்முடைய மாளிகையையும் அதற்கு உரிமைக்காரரான தமது ஒரே மகன் ஜவஹர்லால் நேருவின் கையிலேயே—அவர் முன்னொரு முறை காங்கிரஸ் தலைவராக இருந்தபோது—தேசத்துக்குப் பொது உடைமையாக தானம் செய்தவருமான பண்டிதர் மோதிலால் நேருவும்

பார்ப்பனரே யல்லவா? அவருடைய மகன் ஜவஹர்லாலைப் பற்றிச் சொல்லவும் வேண்டுமா?

உலக சரித்திரத்தில் உயர்ந்த வீரர்களுக்குள் வீரராக விளங்கும் சிவாஜி மன்னனுக்கு ஸ்ரீ பவானி தேவதை நேரே நின்று பேசினாள் என்கிற பக்தியையும் பராசக்தியின் வீரத்தையும் ஊட்டி வளர்க்க உதவின. சிவாஜியின் வளர்ப்புத் தந்தையான தாதாஜிகான் தேவும் ஒரு பார்ப்பனர் அல்லவா?

சரித்திரம் ஒருபுறம் இருக்கட்டும், சமய நம்பிக்கைகளைப் பார்ப்போம். தமிழ்நாட்டுப் பார்ப்பனரல்லாதவர்களில் பெரும்பகுதியினர் சைவர்கள். இச்சைவர்களுக்குத் தெய்வத்தின் தரிசனமாக இருப்பது தேவாரமும் திருவாசகமுமே. இந்தத் தேவாரம் திருவாசகத்தைப் பாடினவர்கள் திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர், சுந்தரமூர்த்தி, மாணிக்கவாசகர் என்ற நால்வர். இவர்களைத்தான் சைவர்கள் சமய குரவர்களென்று தொழுவார்கள். இந்த நாலுபேரில் திருநாவுக்கரசர் ஒருவரைத் தவிர மற்ற மூன்று பேரும் பார்ப்பனர்கள். இந்தச் சமய குரவர்கள் நால்வர்போகச், சைவர்களெல்லாம் சந்தான குரவர்களென்று வணங்குகின்றவர்கள் மெய்கண்டதேவர், அருணந்தி சிவாச்சாரியார், மறைஞான சம்பந்தர், உமாபதிசிவம் என்ற நால்வர். இவர்கள்தான் தமிழ்நாட்டில் சிவஞானத்தை போதித்தவர்கள். இவர்களைச் சைவர்கள் தெய்வமெனப் போற்றுவார்கள். இந்த சந்

தான குரவர்கள் நால்வரில் அருணந்தி சிவாச்சாரியாரும் உமாபதிசிவமும் பார்ப்பனர்கள். அன்பர்களே, பார்ப்பனர்கள் எல்லாரும் பரம்பரையாகப் பதிதர்கள் என்று சொல்லும்போது இந்த சமய குரவர்கள் மூவரையும் சந்தான குரவர்கள் இருவரையும் சேர்த்தே அவமதிப்பதாகாதா? அது சைவர்களைப் புண்படுத்தவில்லையா?

வைஷ்ணவர்களிலும் ஆழ்வார்களில் சிலர் பார்ப்பனர்கள். மேலும், வெகு வைதிக வைஷ்ணவப் பார்ப்பனர்களெல்லாம் விழுந்து விழுந்து வணங்கவேண்டியபடி அளவற்ற உயர்வுதரப் பெற்றிருக்கிற ஸ்ரீ நம்மாழ்வார் ஒரு வேளாளப் பார்ப்பனரல்லாதார். இந்த உண்மைக்கு முன்னால் பார்ப்பனர்கள் பார்ப்பனரல்லாதாரை மதித்ததில்லை என்ற சொல் எப்படி நிற்கும்?

எண்ணிறந்த பிராமணரல்லாத சங்கீத வித்வான்களுடைய பக்தியிலும், பாட்டிலும், பக்கமேளத்திலும் நாதரூபமாக இன்னும் விளங்கி வருகின்ற தியாகையர்வாளும் ஒரு பார்ப்பனரல்லவா?

சரித்திரமும், மதமும், பக்தியும் ஒருபுறமிருக்கட்டும்; தமிழ் இலக்கியத்தையும் கொஞ்சம் பார்ப்போம். தமிழ் இலக்கியத்துக்குச் சிறப்புச் செய்திருக்கின்ற பார்ப்பனர் பலர். அவர்கள் எல்லாரையும் பற்றி இங்கே அளந்து கொண்டிருப்பது அசம்பாவிதமாகும். சுருக்க

மாக இலக்கணச் சிறப்புவாய்ந்த தமிழ் பாஷைக்கு மட்டுமல்லாமல் தமிழர்களுடைய சமூக வாழ்க்கைக்கும்கூட இலக்கணம் செய்த தொல்காப்பிய முனிவரும் ஒரு பார்ப்பனர். உலகத்துக்கு ஒப்பற்ற ஒரு நூலாக எல்லாராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட தெய்வத் திருக்குறளுக்கு உரைசெய்த பேராசிரியர் பரிமேலழகரும் ஒரு பார்ப்பனரே. நம்முடைய கண்ணுக்கு முன்னால் தமிழ் மொழிக்கு அருந்தொண்டு செய்திருக்கிற ஸ்ரீ உ. வெ. சாமிநாதையரும் ஒரு பார்ப்பனர். அவருடைய முயற்சிகள் இல்லாதிருந்தால், பல அரிய தமிழ் நூல்கள் இன்னேரம் இருந்த இடம் தெரியாமல் செல்லரித்துப் போயிருக்கும்.

பாருங்கள், இந்த நாட்டின் எல்லாத் துறைகளிலும் இப்படிப் பின்னலிட்டுக்கிடக்கின்ற பிராமணர்களை பிரித்துப் பேசி வருத்தப் படுத்துவது நல்லதா, நாகரிகமா? நாகரிகம் அறிந்தவர்கள் ஒருவருடைய குலத்தைப் பழித்துக் குற்றஞ்சாட்ட மாட்டார்கள்.

இந்த நாட்டில் இப்போது இருக்கின்ற பிராமணர்கள் எல்லாரும் கெட்டவர்கள் என்றே வைத்துக்கொண்டு அவர்கள் அனைவரையும் ஏககாலத்தில் அழித்துவிட முடிந்தாலும்கூட, இமயம் தொட்டுக் குமரி வரையிலும் இந்தப் பாரதநாட்டின் பெருமைகளுக் கெல்லாம் காரணமாயிருந்திருக்கிற 'பிராமணீயத்தை' எவரும் அழித்துவிட முடியாது.

அழிக்க முயலவும் கூடாது. அன்னிய நாட்டாரெல்லாம் அவர்களுக்கு அலுப்பு வந்தபோதெல்லாம் மன அமைதிக்காக ஆவலோடு திரும்பிப் பார்ப்பது இந்த இந்திய தேசத்தைத்தான். அவர்கள் தேடுகின்ற சாந்தி இங்கேதான் பிறந்தது. இங்கேதான் வளர்ந்தது. மறைவாகவேனும் இன்னும் இங்கேதான் இருந்துவருகின்றது.

பார்ப்பன சூழ்ச்சி

இன்னொன்று. பிராமணர்களெல்லாம் சூழ்ச்சிக்காரர்களென்றும், பிராமணரல்லாத மற்ற ஜாதியாரெல்லாம் அந்த சூழ்ச்சியிலே சிக்கிக்கொண்டு திகைக்கின்றார்களென்றும் ஓயாமல் சொல்லுகின்றார்கள். இந்தப்பேச்சு பிராமணரல்லாதாருடைய தன் மதிப்புக்கே தவறு செய்வதாகும். மேலும், தமிழ்நாட்டில் இப்போது இருந்துவரும் இலக்கியங்களும், பழக்க வழக்கங்களும் எல்லாம் முற்காலத்திய பார்ப்பனர்கள் தங்களுடைய நன்மைகளை மட்டும் கருதி சூழ்ச்சி செய்து, முற்காலத்திய பிராமணரல்லாதார்களை யெல்லாம் ஏமாற்றிச் செய்து வைத்திருக்கிற காரியங்களென்றும் சொல்லப்படுகின்றது. அப்படியானால் இந்தத் தமிழ்நாட்டை ஆண்டுவந்த சேர, சோழ பாண்டியராதி மன்னர்களும், பாரி, சடையப்ப முதலியார் போன்ற வள்ளல்களும், அவர்களுடைய ஆதரவில் இன்றைக்கும் உலகத்தி

லுள்ள அறிஞர்களெல்லாம் உச்சிமேல் வைத்து உவக்கத் தகுந்த இலக்கியங்களைத் தந்துபோன இளங்கோவடிகள், கம்பன், ஒட்டக்கூத்தன், புகழேந்தி, அவ்வை இவர்கள் முதலாக பிற்காலத்திய திரிசிரபுரம் மீனாட்சிசுந்தரம் பிள்ளை, மாம்பழக்கவிராயர், சுப்ரமண்ய பாரதி ஈறாகவுள்ள எண்ணிறந்த புலவர்களும், அவர்களைப்போற்றி வைத்தத் தமிழ்நாட்டுக் குடிமக்களும் சொந்த அறிவில்லாமல் பிராமண சூழ்ச்சியினால் ஏமாந்துபோன இழிவுடையவர்களேயாகி விடுகிறார்கள். அந்த நிலைமையை ஒப்புக்கொண்டால் பிராமணரல்லாதவர்களுக்கு அதைவிட அவமானம் வேறெதுவும் இருக்கமுடியாது. உண்மையான வீர வாழ்க்கை வாழ்ந்து உலகத்துக்கெல்லாம் நாகரிகம் இன்னதெனக் கற்பித்த நம்முடைய பிராமணரல்லாத முன்னோர்கள் சொந்த அறிவில்லாமல் இன்னொருவருடைய சூழ்ச்சியினால் ஏமாந்துபோனவர்கள் என்பதை எந்தத் தமிழனும் ஏற்றுக் கொள்ளமுடியாது.

ஜாதி வேற்றுமையினாலும் மத வித்தியாசங்களினாலும் இந்த நாட்டில் இப்போது தீமையாக இருக்கின்ற ஏற்பாடுகளுக்கெல்லாம் பழைய காலத்துப் பிராமணன் எவ்வளவு பொறுப்பாளியோ அவ்வளவு பொறுப்பாளி பிராமணரல்லாதானும். முற்காலத்துப் பார்ப்பனர்களும் அல்லாதவரும் சேர்ந்து அந்தக் காலத்துக்கு நன்மையாக இருந்ததும்,

3580

வெகுஜன சம்மதமானதுமாகச் செய்துவந்த பல பழக்க வழக்கங்கள் இந்தக் காலத்துக்கு மிகவும் கொடுமைகளாக இருக்கின்றன. இந்தக் கொடுமைகளையெல்லாம் அழிக்கவேண்டியது அவசியமே. ஆனல் பிராமணர்களும் பிராமணரல்லாதவரும் சேர்ந்து செய்துவிட்ட காரியங்களுக்கு பிராமணர்களைமட்டும் குற்றவாளிகளாக்குவது பெருங்குற்றம். நாம் நேரில் காணுததும் நிச்சயிக்க முடியாததுமான பழையகாலத்தை விட்டுவிட்டு நமது கண்ணுக்கு முன்னல் நடக்கும் இந்தக் காலத்தைப் பார்ப்போம். சூழ்ச்சி எங்கே இருக்கிறது? இந்தக்காலத்தில் ஒருஜாதி மற்றெல்லா ஜாதிகளையும் வெறும் சூழ்ச்சியினுல் ஏமாற்றி அடக்கி ஆளமுடியுமா? பார்ப்பான் சொன்னதையெல்லாம் மற்றவர்கள் கேட்ட காலம் கடந்துவிட்டது. அப்படியிருக்க பிராமணரல்லாதாருக்குக் கெடுதலான என்ன சூழ்ச்சியை பிராமணன் இப்போது செய்ய முடியும்? அப்படிச் செய்தாலும் அதில் சிக்கி ஏமாந்துபோகக்கூடிய அறியாமை எழுத்து வாசனையில்லாத பிராமணரல்லாதவனிடத்தில்கூட இப்போதில்லை.

பின், இந்த சூழ்ச்சி எங்கே இருக்கலாமென்ருல்: பிராமணரும் பிராமணரல்லாதாரும் வேறொரு மூன்ருவது மனிதருடைய தயவை நாடி, அவரைச் சந்தோஷப்படுத்தி ஜீவனம் செய்யவேண்டிய இடங்களில், பிரா

மணரல்லாதாருடைய சூழ்ச்சியைக் காட்டிலும் பிராமணனுடைய சூழ்ச்சி ஒருக்கால் வெல்லக்கூடியதாக இருக்கலாம். முக்கியமாக இந்த நாட்டில் இப்போது இருந்துவருகின்ற ஆட்சி முறையிலும் அதைத் தழுவிநிற்கின்ற ஸ்தாபனங்களிலும் மட்டுந்தான் இந்த சூழ்ச்சிகள் இருந்தால் இருக்கமுடியும். எத்தனைதரம் எப்படி எப்படியெல்லாம் திருப்பித்திருப்பி எண்ணிப் பார்த்தாலும், இந்த அரசாங்கத்தின் சம்பந்தமுள்ள இடங்களைத்தான் இந்த சூழ்ச்சிகள் சூழ்ந்துக்கொண்டிருக்கின்றன. இந்த நாட்டின் விவசாயத்திலோ, வியாபாரத்திலோ, கைத் தொழில்களிலோ எவரும் எந்த சூழ்ச்சியும் செய்ய இடமில்லை. இதுவரையிலும் ஆங்கிலப்படிப்பில் முந்திக்கொண்ட பிராமணர்களிற் சிலர் இந்த அன்னிய அதிகாரிகளைச் சந்தோஷப்படுத்தி அவர்களுடைய தயவால் தங்களுக்கும் தங்களுடைய பந்துமித்திரர்களுக்கும் நல்லநல்ல உத்தியோகங்களைத் தேடிக்கொண்டார்கள் என்றும், அதே காரியத்தை இப்போது பிராமணரில்லாதாரில் சில படித்தவர்களும் செய்ய விரும்புகின்றார்களென்றும், ஆனால் முன்னாலேயே அங்குள்ள பிராமணர்கள் அதற்கு முட்டுக்கட்டையாக இருக்கிறார்கள் என்பதையும் தவிர இந்த "பிராமண சூழ்ச்சி" என்ற பேச்சுக்கு வேறு அர்த்தம் இருக்கவே முடியாது.

பிராமணர்களோ பிராமணரல்லா

தாரர்களோ இப்படி சர்க்கார் உத்தியோகத்தையே தேடித்திரிய வேண்டியவர்களாகி விட்ட கலாசாலைப்படிப்புள்ளவர்கள் இந்த நாட்டின் ஜனத்தொகையில் மிக மிக சொற்பமானவர்கள். உத்தியோகங்களின் எண்ணிக்கையும் அதைவிடச்சொற்பம். வைசிராய் பதவி முதற்கொண்டு கிராமத் தோட்டி வேலை வரையிலும் இப்போது இந்த சர்க்காரிடத்தில் சம்பளம் வாங்குகின்றவர்களுடைய எண்ணிக்கை சுமார் 5 லட்சத்தில் அடங்கிவிடும். அதுவே அதிகம். மூப்பத்தைந்தரை கோடி மக்களிருக்கும் இந்த நாட்டில் இந்த ஐந்துலட்சம் போக மீதி முப்பத்தைந்து கோடியே நாற்பத்தைந்துலட்சம் மக்கள் எந்த சூழ்ச்சியில் சிக்கிக்கொண்டிருக்கிறார்கள்? அந்த ஐந்துலட்சம் உத்தியோகங்களும் பிராமணரல்லாதாருக்கே வந்துவிடுவதாக வைத்துக் கொள்வோம். அதனால் மீதியுள்ள பிராமணரல்லாதாருக்கு என்ன நன்மை ஏற்பட்டு விட முடியும்? பிராமணரல்லாதவர்கள் எல்லா உத்தியோகங்களிலும் இருந்தால், பிராமணரல்லாத பெருமக்களுக்கு அதிக நன்மைகளைச் செய்துவிட முடியுமென்று எண்ணவாவது இடமிருக்கின்றதா என்று எண்ணிப் பாருங்கள். நிலவரிச்சுமையைத் தாங்கமாட்டாமல் தவிக்கின்றவர்கள் பிராம்மணரல்லாதாரே. கள்ளுக் கடைகளால் கஷ்ட நஷ்டமடைகின்றவர்கள் பிராமணரல்லாதாரே. வியாபாரம் கெட்டுப்

போய் விழிக்கின்றவர்களும் பிராமணரல்லாதாரே. கைத்தொழிலுக்கு விலையில்லாமல் கண்ணீரும் கம்பலையுமாகக் குஞ்சு குழந்தைகளையும் கால்நடையாகக் கூட்டிக்கொண்டு, குடும்பம் குடும்பமாக கண்டிக்குப் போகும் கைத்தரிக்காரர்களெல்லாம் பிராமணரல்லாதவர்களே. பிராமணரல்லாத உத்தியோகஸ்தர்கள் எவ்வளவு நல்லெண்ணமுடையவர்களாக இருந்தாலும் நிலவரியைக் குறைத்துவிட முடியுமா? கள்ளுக்கடைகளைக் கம்மியாக்கவாவது முடியுமா? கைத்தொழில்களை ஆதரிக்கும் கட்டாயச் சட்டங்களைச் செய்ய முடியுமா? வியாபார விருத்திக்கான முறைகளை விதிக்க முடியுமா? கார்டு, கவர், தந்தி தபால்களின் தலைகளையாவது சரசமாக்க முடியுமா? அரண்மனைப் பணத்தைத் தோட்டி சுமப்பதுபோல, அன்னியர்கள் நம்முடைய கஷ்ட நிஷ்டூரங்களை உணராமல் செய்திருக்கிற சட்டங்களை அவர்களுக்குப் பதிலாக அவர்களுடைய அதிகாரத்திற்கு அடங்கி ஒடுங்கி அமுல் நடத்துகின்றவர்கள் பிராமணராயிருந்தாலென்ன பிராமணரல்லாதவராக இருந்தாலென்ன?

ஆதலால் 'சூழ்ச்சி' என்ற இந்த கூக்குரல் எல்லாம் இந்த அரசாங்க உத்தியோகங்களுக்காகத்தான் சுற்றிச் சுற்றிச் சுழன்று கொண்டிருக்க முடியும் என்பது தெளிவாகின்றது. அன்றியும் இந்த நாட்டில் இப்போது இருந்துவரும் ஆட்சிமுறையில்தான்

அரசாங்க உத்யோகங்களுக்கு இவ்வளவு மோகமும் சண்டை சச்சரவுகளும் இருக்கின்றன. வேறு எந்த நாட்டிலும் இல்லை. சரித்திரத்திலும் படித்ததில்லை. கட்டுக்கதைகளிலும் காணோம். எந்தநாட்டிலும் எந்தக் காலத்திலும் பெரும்பாலும் குடிகளுடைய க்ஷேமம் அரசாங்க உத்தியோகஸ்தர்களுடைய ஜாதி, மதம், நல்லவர், கெட்டவர் என்ற வேறுபாடுகளைப் பொறுத்தது அல்ல. ஆனால் அந்த அரசாங்க சட்டங்களின் குணகுணங்களையே பொறுத்து நிற்கும்.

இந்த "சூழ்ச்சிகளும்" கூட—அவற்றைப் பிராமண சூழ்ச்சிகளாகவே வைத்துக் கொண்டாலும் — இந்த அரசாங்கத்தின் அமைப்பு இப்படியே இருக்கிறவரையிலும் இருந்து கொண்டேதான் இருக்கும். அந்த அமைப்பை மாற்றவேண்டு மென்பதே காங்கிரசின் முக்கிய நோக்கம். அமைப்பு மாறினால் சூழ்ச்சியும் அழிந்துபோகும்.

இந்த அமைப்பை மாற்ற வேண்டுமென்று பிராமணரல்லாத காந்தியடிகள் நடத்திய சத்தியாக்ரகத்திலும் பார்ப்பன சமூகம் தன்னுடைய சக்திக்கும் எண்ணிக்கைக்கும் அதிகமாகவே ஆதரவளித்திருக்கின்றது. இந்த நாட்டின் ஜனத்தொகையில் நூற்றுக்கு 2½ பேர் தான் பார்ப்பனர்கள். ஆனால் காந்தியாரின் சாத்விகப் போரில் கலந்து தேச பக்திக்காகச் சிறை சென்றவர்களையும், அடிபட்டவர்களையும்

அபராதம் கொடுத்தவர்களையும் கணக்கெடுத்தால் அதில் பார்ப்பனர்கள் நூற்றுக்கு முப்பதுக்குமேல் இருக்கிறார்கள்.

தீண்டாதாரைத் தீண்டிய தீவிரத்திலும் பிராமணரல்லாதாரைக் காட்டிலும் பிராமணர்களே அதிகமானவர்கள் என்பது என்னுடைய கண்கண்ட உண்மை. இந்தத் தீண்டாமையைத் தொலைக்க பிராமணர்கள் என்னசெய்து விட்டார்கள் என்ற கேள்விக்கு எங்கள் சேலம் ஸ்ரீ C. அனந்தாச்சாரியார் ஒருவர் செய்திருக்கும் சேவைகளே போதிய பதிலாகும். பிராம்மணர்கள் அப்படிச் செய்ததும் கூட ஒரு சூழ்ச்சியை எண்ணியே என்றும் ஏளனம் பேசுகின்றவர்கள் சொல்லுகின்றார்கள். அப்படிப் பேசுகின்றவர்களுக்கு சமாதானம் சொல்ல என்னுடைய அகராதியில் எழுத்துமில்லை. சொல்லும் இல்லை.


"பிராமணரல்லாதார்" என்றால் யார்?

இந்தக் கேள்வியை பிராம்மணரல்லாதவர்கள் பாரபட்சமில்லாமல் நிதானமாக கவனிக்கும்படி மிகவும் வேண்டிக்கொள்கிறேன். ஏதோ பிராமணர்கள் எல்லாரும் ஒரே முடிப்பு போலவும், பிராமணர்களை நீக்கிய மற்ற எல்லா மனிதர்களும் ஒரே இனத்தைச் சேர்ந்தவர்கள் போலவும் வெகு இலேசாகப் பேசப்பட்டு வருகின்றது. உண்மைக்கு இது எவ்வளவு மாறான விஷயம் என்பது

சிறிது சிந்தனை செய்தால் தெரிந்துவிடும். பிராமணரல்லாதார் எல்லாரும் ஒரே ஜாதியைச் சேர்ந்தவர்கள் என்று அர்த்தமா? ஒரே மதத்தையாவது சேர்ந்தவர்களா? ஒரே நிறமா? ஒரே பாஷையா? ஒரேவிதமான சடங்குகள் ஏதேனும் உள்ளவர்களா? கோயில், குளம், குலதெய்வம் என்ற எதிலாவது ஒரே கொள்கையுடையவர்களா? கொள்வது கொடுப்பது, உண்பது தின்பது இவற்றில் ஏதேனும் ஒன்றானவர்கள் என்பது பொருளா? — பிராமணர்கள் எல்லாரையும் ஒரே சமூகமென்று சொன்னாலும் ஒருவேளை சொல்லலாம்; அதுவும் உண்மையில் சரியல்ல; ஆனால் பிராமணரல்லாதார் என்ற சமூகம் எங்கேயிருக்கிறது? பிராமணர்களுக்கெல்லாம் பொதுவானவை என்று சொல்ல இரண்டொரு விஷயங்களாவது இருக்கின்றன. ஆனால் பிராமணரல்லாதாருக்கெல்லாம் பொதுவானது என்று சொல்ல ஒன்றுமில்லை. உதாரணமாக, பிராம்மணர்களில் எல்லா வகுப்பாரும் நான்கு வேதங்களையும் நம்புகின்றார்கள். பிராம்மணர்கள் எல்லாரும் பூணூல் போட்டுக்கொள்ளுகின்றார்கள். தமிழ்நாட்டைப் பொறுத்தமட்டில் எல்லா பிராம்மணர்களும் மது மாமிசத்தை விலக்கி யிருக்கிறார்கள். மேலும் கலியாணம் முதலிய காலங்களில் எல்லா பிராமணர்களுக்கும் பொதுவான பல சடங்குகளும் மந்திரங்களும் இருக்கின்றன.

இப்படி எல்லாருக்கும் பொதுவானது என்று சொல்லிக்கொள்ள பிராமணரல்லாதாருக்கு என்ன இருக்கிறது? நீங்களே நினைத்துப் பாருங்கள். மறுபடியும் உங்களுக்கு நினைப் பூட்டுகிறேன்; இந்த பிராமணரல்லாதார் என்ற சொல் கற்பனையாகவேனும் ஒரு முகூர்த்த காலத்திற்காவது எங்கேயிருக்க முடியுமென்றால்: சர்க்கார் உத்தியோகத்தி லும் அதைச் சார்ந்த இடங்களிலும் ஆங்கிலம் படித்த பிராமணர்களோடு மற்றவர்கள் பிணங்கிக்கொள்ளும் சமயங்களில்தான் சிறி தேனும் சாத்தியமாகும். மற்றப்படி நாட்டின் சமுதாய வாழ்வில் "பிராமணரல்லாதார்" என்ற ஒரு சமூகம் இல்லவும் இல்லை, இருக்க வும் முடியாது. இருக்கவே முடியாத ஒன்றை இருப்பதாக மயங்கி, அதற்காக கட்சி கட்டிக் கசப்பான பேச்சுகளுக்கும் கடுமையான மனஸ்தாபங்களுக்கும் இடங்கொடுக்க வேண்டாமென்று பார்ப்பனரல்லாத அனை வரையும் அஞ்சலித்துக் கேட்டுக்கொள்ளு கின்றேன்.

தமிழ்




“‘தன்குஞ்சு ஒன்றே பொன்குஞ்சு என்று
கன்னங் கறுத்த காக்கையும் கருதும்’
என்னும் பழமொழி இயல்புக்கிணங்க
அவரவர் மொழியே அவரவர்க்குயர்ந்தது
ஆயினும் தமிழை அதற்காய்ப் புகழ்ந்திடோம்
பழமை மிக்கது தமிழெனும் பாஷை
ரசங்கள் நிறைந்த ராமாயணத்தை
வான்மீகி முனிவன் வரைந்தபோதே
தமிழர் நாட்டைத் தனியே புகழ்ந்து
ஆட்சியின் சிறப்பையும் அதிலே சொன்னான்
வான்மீகி காலம் வரையறை அற்றது
அதற்கு முன்னால் ஆண்டனர் தமிழர்
இலக்கண அமைப்பிலும் இலக்கியச் சிறப்பி
தனிப்பட்டுயர்ந்தது தமிழ்மொழி என்று [லும்
ஆராய்ந்தறிந்த அனைவரும் சொல்லுவார்
எந்த மொழியையும் இகழ்ந்திடாத் தமிழன்
பற்பல பாஷைகள் நன்றாய்ப் படித்து

அறிவையே நாடி அலசிப்பார்த்து
உலகத்திலுள்ள உயர்ந்த கருத்துகள்
எல்லாம் நிறைந்த இலக்கியம் உள்ளதாய்
சேர்த்து வைத்த செல்வம் தமிழ்மொழி
இன்று நேற்று ஏற்பட்டதல்ல
மூவேந்தர் ஆட்சிக்கு முன்னுலிருந்தே
இந்திய நாட்டிலும் அன்னிய இடத்திலும்
திரவியம் தேடித் திரைகடலோடியும்
கப்பல் ஓட்டிக் கடலைக் கடந்தும்
அன்னிய மன்னர் அழைப்புக் கிணங்கியும்
எவரும் மதித்து எதிர்கொள்ளும் இனமாய்
எங்கும் சென்று எவரொடும் பழகி
ஆண்டுகள் பற்பல ஆயிரமாக
வாழ்ந்த தமிழர் வருந்திச் சேர்த்தது
உலகவழக்குடன் ஒட்டியேநின்று
'கன்னித்தமிழெ'ன இன்னும் களிக்க
புதுப்புது அறிவுகள் புகுதற் கிடந்தர
எண்ணிச் செய்த இலக்கணம் உள்ளதாய்
உண்மை அறிவில் ஊன்றிய வேருடன்
பருத்துப் படர்ந்த பற்பல கிளையுடன்
விழுதுகள் எண்ணில வெவ்வேறு தாங்க
ஊழிக்காற்றே உரத்தடித்தாலும்
அசைக்க முடியா ஆலமரம் போல
நேர்ந்தவர்க் கெல்லாம் நிழலை கொடுத்து
அலுப்பைத் தீர்த்து அமைதியும் தந்து
கவிதையும் காட்டிக் களிக்கச் செய்திட
செழித்து நிற்பது செந்தமிழ்ச் சிறப்பு
தமிழைப் போற்றுதல் தமிழரின் கடமை

தமிழின் வளர்ச்சியை மனதில் தரித்து
அன்னியர் அறிவையும் தமிழில் ஆக்கி
அவசியமானல் அருவருப்பின்றி
பிறமொழிப் பதங்களைத் தமிழில் பிணைத்து
தொழில்முறை அறிவுகள் தமிழில் தொடுத்து
ஏனைய நாட்டின் எல்லா அறிவும்
தமிழில் உண்டெனத் தருக்கும் படியாய்
செய்து வைப்பதே தமிழ்மொழிச் சேவை.

மதுரை



மதுரையினிடத்தில் எனக்கு மட்டில்லாத மதிப்புண்டு. தமிழர் பெருமைக்கு மதுரை ஜில்லா தாயகம் என்பது மட்டுமல்லாமல், தேசத்துக்காகச் செய்த சிறு சேவைக்காக நான் சிறைகிடந்து விடுதலைபெற்ற இடம் மதுரைமாநகர். மேலும் நான் வேறு சிறைகளில் இருந்தகாலத்திலும் அங்கே எனக்கு இன்னுயிர் நட்புதந்த பல நேசர்கள் மதுரை ஜில்லாவில்தான் இருக்கிறார்கள். மதுரை என்ற பெயரைச்சொன்ன மாத்திரத்தில் தமிழர்களுடைய பழைய வாழ்வெல்லாம் மனதிற்குப் பாய்ந்தோடி வருகின்றன. பாண்டிய மன்னர்களின் ஆட்சியில் தமிழர்களும், தமிழ் மொழியும், தமிழ்க் கலைகளும் பெற்றிருந்த பெருஞ்சிறப்பை நினைக்குந்தோறும் நெஞ்சு நிமிர்கின்றது. மதுரை என்ற உடனேயே ஒவ்வொரு தமிழருக்கும் தமிழ்ச்சங்கமும், சங்கநூல்

களும், சங்கப்பலகையும், தெய்வ வள்ளுவன் செய்த திருக்குறளும் நினைவுக்கு வராமற் போகாது. மதுரையை நினைத்தால, சேரன் தம்பி இசைத்தச் சிலம்பும், கண்ணகியும், கோவலனும் இப்போதும் கண்ணுக்கு முன்னால் நிற்கும் காட்சிகளாகின்றன. கோவலனைக் கொன்றுவிட உத்தரவிட்டதில், தான் செய்துவிட்ட அநியாயத்தை அறிந்தவுடன் மனமுடைந்து மாண்டுபோன அப்பாண்டிய மன்னனுடைய பெருமையும் மதுரை என்ற பெயரோடு பிணைந்திருக்கின்றது. அன்னியனுடைய மனையாளொருத்தி தனியேயிருந்த வீட்டில் அகாலத்தில் கதவைத்தட்டிய குற்றத்துக்காகத் தான் விதித்திருந்த தண்டனையைத் தானே மேற்கொண்டுத் தன் கையை வெட்டிக் கொண்ட பொற்கைப் பாண்டியன் கதையிலுள்ள புகழும் மதுரை என்ற பெயரோடு மருவியிருக்கின்றது. இந்தக்கதைகளெல்லாம் வெறும் கட்டுக்கதைகளென்றே வைத்துக் கொண்டாலும்கூட, அவை தமிழருக்கிருந்த நடுநிலைமை எண்ணத்தை மட்டுமாவது நாட்டுகின்றன என்பதை இல்லையென இயலாது.

நினைவிற்குவரும் மதுரை அப்படி. இனி கண்ணுக்குத் தெரிகின்ற மதுரை ஜில்லாவின் தலைநகரைப் பார்ப்போம். மதுரைப் பட்டணத்தின் கிட்டவரும்போதே ஓர் உயர்ந்த சரித்திரத்தின் இனிய மணம் வீசுகின்றது. வெகு தூரத்திலேயே விளங்குகின்ற ஸ்ரீ மீனுக்ஷி

ஆலயத்தின் அற்புதமான கோபுரங்கள் வழிப் போக்கர்களையெல்லாம் வற்புறுத்தி அழைத்து உலகத்தாருக்கு ஏதோ உளவு சொல்ல எழுந்து நிற்பதுபோல இருக்கிறது. கோயிலைப் பற்றிய மத விஷயங்களையும் புராண சம்பந்தங் களையும் ஒருபுறம் விட்டு, அதன் கட்டிடங்களி லுள்ள சிற்பம், சித்திரம், கைத்தொழில் இவற் றின் சிறப்பைமட்டும் பாருங்கள். அந்தக் கோபுரங்களிலுள்ள ஒவ்வொரு பொம்மையும் ஒரு புராணம் ஒப்பிக்கின்றது. ஒவ்வொரு கல்லும் ஒரு கதை சொல்லுகின்றது. ஒவ் வொரு சிலையும் ஒரு கலையைக்காட்டுகின்றது. மதுராபுரியின் கோபுரங்களும், தெப்பக் குளமும் எதைக் குறிக்கின்றன? சீமை "சிமெண்ட்" இந்தியாவில் பரவுவதற்கு வெகு நாளைக்கு முன்னல் கட்டப்பட்டு, எந்தச் சுண் ணும்பை எப்படி கலவை போட்டது என்று இன்னும் கண்டுபிடிக்க முடியாதிருக்கிற திருமலை நாயக்கருடைய அரண்மனையின் அமைப்பில் நாம் அறிந்து கொள்ள வேண்டியது ஒன்று மில்லையா? சுத்தமான காதலின் தூய்மையைக் காட்டுவதுபோல வெள்ளைவெளேரென்று ஆக் ராவிலுள்ள தாஜ்மஹால் கட்டிடத்தைப்பற்றி நாம் கேட்டிருக்கின்ரேம். அந்தக் கட்டிடத் தைக் கட்டிமுடிக்க இருபதினயிரம் வேலையாட் கள் பனிரண்டு வருஷம் இடைவிடாது வேலை செய்தார்கள் என்று சொல்லுவதைக் கேட்டு நாம் மிகவும் பெருமை கொள்ளுகின்ரேம்.

அது மிகவும் நியாயமான பெருமைதான். ஆனால் சிற்பவேலையின் சிரமத்திலும் சிறப்பிலும் அந்தத் தாஜ்மஹாலும் நேர் நிற்க முடியாத மதுரைக் கோயிலையும், கோபுரங்களையும், குளத்தையும், அரண்மனையையும் கட்டிமுடிக்க எத்தனைபேருக்கு எவ்வளவு நாளைக்கு வேலையும் கூலியும் கொடுத்திருப்பார்கள் என்பதை நம்மில் பலர் எண்ணிப் பார்த்திருக்கமாட்டோம். அந்தக் கோயிலையும் மற்றவைகளையும் பார்த்து நாம் அறியவேண்டியது என்ன? அவைகளெல்லாம் இந்த நாடு சுய ஆட்சியில் அடைந்திருந்த சுபிட்சத்துக்கு அறிகுறிகள் அல்லவா? இன்றைக்கு இம்மதுரை ஜில்லாவிலுள்ள எல்லாரும் சேர்ந்து இங்கே வசூலிக்கப்படும் அரசாங்க வரிப்பணத்தைக் கொண்டு இப்படிப்பட்ட ஒரு பொதுக்கட்டிடத்தை வேலையில்லாதவர்களுக்குக் கூலி கொடுப்பதற்கென்று மட்டுமாவது செய்யவேண்டுமென்று விரும்பினல் அது முடியுமா என்று பாருங்கள். முடியாது. ஏன்? நம்முடைய வரிப்பணத்துக்கு அதிகாரிகள் நாமல்ல. நமக்கு சுய ஆட்சி இல்லை. சுதந்திரமில்லை. அடிமைகளாக இருக்கின்ரேம். ஆகையினல்தான் விடுதலை வேண்டும்.

இந்த விடுதலைக்காகத்தான் காங்கிரஸ் மகாசபை கங்கணங்கட்டிக்கொண்டு உழைத்து வருகின்றது. கொஞ்சம் கொஞ்சமாக நாம் விடுபட்டு வருகின்ரேம் என்பதில் எவருக்கும்

சந்தேகம் வேண்டியதில்லை. மிண்டோ—மார்லி சீர்திருத்தமும், மாண்டேகு—செம்ஸ் போர்ட் சீர்திருத்தமும் இப்போது சுமத்தப்பட்டிருக்கிற வட்டமேஜை சீர்திருத்தமும் காங்கிரசின் விடுதலைப் போராட்டத்தின் விளைவுகளே. ஆனால் இப்படிப்பட்ட சீர்திருத்தங்கள் எத்தனை வந்தாலும் அது விடுதலை ஆகாது. எவ்வளவு நல்லமுறையில் ஆண்டாலும் ஒரு நாட்டை இன்னொரு நாடு ஆளுவதென்பது ஊனமானதே. ஒருவனுடைய பசி இன்னொருவனுக்குத் தெரியாது. ஒருவனுடைய நோயை அவனுடைய தாயும் உணரமுடியாது. அவனவனுடைய இன்ப துன்பங்களை அறியத்தகுந்தவன் அவனவனே. அதைப்போலவே அந்தந்த நாட்டின்நன்மை தீமைகளைத் தீர்மானிக்கத் தகுதியுள்ளது அந்தந்த நாடேதான். ஆதலினால் நமக்கு விடுதலை வேண்டும். அதை அடையவே முயற்சி செய்துவருகிறோம். அடைந்தே தீருவோம்.

3580

தமிழ்நாடு வாழ்க



வீரத்தில் நிறைவான
தமிழ்நாடு வாழ்க!
வித்தைக்கு உறைவான
தமிழ்நாடு வாழ்க!
சூரத்தின் துணையான
தமிழ்நாடு வாழ்க!
துஷ்டர்க்குப் ப்ணியாத
தமிழ்நாடு வாழ்க!

வாள்கொண்டு நேர்நின்று
போர்தந்த போதும்
வஞ்சங்கள் புரியாத
தமிழ்நாடு வாழ்க!
கோள்கொண்டு பொய்சொல்லி
குற்றேவல் செய்யா
குணமிக்க ஜனமிக்க
தமிழ்நாடு வாழ்க!

கொல்லாமை உயர்வென்னும்
தமிழ்நாடு வாழ்க!
கொடைவள்ளல் பலர்நின்ற
தமிழ்நாடு வாழ்க!
இல்லாமை அறியாத
தமிழ்நாடு வாழ்க!
இரவாமை அறமென்னும்
தமிழ்நாடு வாழ்க!

படையாமல் உண்ணாத
தமிழ்நாடு வாழ்க!
பகையாரும் எண்ணாத
தமிழ்நாடு வாழ்க!
அடையாத துன்பங்கள்
அவைவந்த போதும்
அநியாயம் எண்ணாத
தமிழ்நாடு வாழ்க!

3580

அவளும் அவனும்

நாமக்கல் கவிஞர்

எழுதிய அற்புதமான காவியம்.

தமிழுலகிலே ஓர் புதுமையான

நூல். புத்தகத்தின் அமைப்பு,

அழகு அலாதியானதுதான்.

விலை பின்னர் அறிவிக்கப்படும்.

இன்னும் சில தினங்களில்

வெளி வந்து விடும்.



தியாகராயநகர்-சென்னை

Wrapper Designed & Printed at P. A. S. Press, Post Box 34[illegible], Mount Road, Madras